
உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

# திருவருள் தரும் தேவாரப் பதிகங்கள்

## (தேவாரத் தேன்துளிகள் பாகம்-2)



மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர், மதுரை



ர டால்ஃபின் பள்ளியின் சார்பில்

**"ஆருத்ரா தரிசனம்"** விழாவினை முன்னிட்டு

இலவச சிறப்பு வெளியீடு 28-12-2012



இறைப் பணியில்...
**தேவகோட்டை டால்ஃபின் AR. ராமநாதன்**
(அரு.லெ. வீடு)
தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

உ


ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :

# திருவருள் தரும் தேவாரப் பதிகங்கள்

## (தேவாரத் தேன்துளிகள் பாகம்-2)

ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஸ்ரீ காசி விசாலாட்சி






மதுரை டால்ஃபின் பள்ளியின் சார்பில்

**"ஆருத்ரா தரிசனம்"** விழாவினை முன்னிட்டு

இலவச சிறப்பு வெளியீடு 28-12-2012



இறைப் பணியில்...

**தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்**

**(அரு.லெ. வீடு)**

தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10


Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787

Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :


# திருவருள் தரும் தேவாரப் பதிகங்கள்

## (தேவாரத் தேன்துளிகள் பாகம்-2)



அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர், மதுரை

மதுரை டால்ஃபின் பள்ளியின் சார்பில்
"ஆருத்ரா தரிசனம்" விழாவினை முன்னிட்டு
இலவச சிறப்பு வெளியீடு 28-12-2012



இறைப் பணியில்...
தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்
(அரு.லெ. வீடு)
தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

Dolphin Public School



Dolphin Public School

திருவேடகம் ஸ்ரீ ஏலவார்குழலி ஸ்ரீ ஏடகநாதசுவாமி திருக்கல்யாணம்

உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :

# மதுரை டால்ஃபின் பள்ளியின் சார்பில் வெளியிடப்பட்ட இலவச ஆன்மீக நூல்களில் சில...



உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :

# மதுரை டால்ஃபின் பள்ளியின் சார்பில் வெளியிடப்பட்ட இலவச ஆன்மீக நூல்களில் சில...



உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

# மதுரை டால்ஃபின் பள்ளியின் சார்பில் வெளியிடப்பட்ட இலவச ஆன்மீக நூல்களில் சில...

























உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :



அருள்மிகு ஸ்ரீ காளத்தீஸ்வரர் அருள்மிகு ஸ்ரீ ஞானப்பிரசுனாம்பிகை அம்மன்

காளஹஸ்தி

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :



உற்சவமூர்த்தி ஸ்ரீ அண்ணாமலையார் ஸ்ரீ உண்ணாமுலையம்மை

திருவண்ணாமலை

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

# 12 ஜோதிர்லிங்கம் தரிசனம்
# பாபவிமோசனம்







இறைப் பணியில்...
**தேவகோட்டை டால்ஃபின் AR. ராமநாதன்**
**(அரு.லெ. வீடு)**
தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

Dolphin Public School



Dolphin Public School


மதுரை டால்ஃபின் பள்ளியின் தாளாளர் டால்ஃபின் AR. ராமனாதனின் அலுவலகம்

உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :

Dolphin Public School



Dolphin Public School

மதுரை டால்ஃபின் பள்ளியின் தாளாளர் டால்ஃபின் AR. ராமநாதனின் அலுவலகம்

உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :

# நெஞ்சம் நெகிழ வைக்கும் பஞ்சபூதத் தலங்கள்






இறைப் பணியில்...

**தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்**

**(அரு.லெ. வீடு)**

தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10

Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787

Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

# சமயக்குரவர்கள் நால்வர்



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்


Dolphin Public School

வாழ்க வளமுடன் ! வெற்றி ! வெற்றி ! வெற்றி !

# எண்ணம்

தேவகோட்டை அருள்மிகு ஸ்ரீமந்திரமூர்த்தி விநாயகர் திருவருளாலும், எங்கள் குலதெய்வம் இலங்குடி ஸ்ரீ பூர்ண புஷ்கலாம்பா சமேத ஸ்ரீபகற்சாலமூர்த்தி அய்யனார் திருவருளாலும், எங்களது நகரக் கோயில் இலுப்பைக்குடி அருள்மிகு சௌந்தர நாயகி சமேத ஸ்ரீதான்தோன்றீசுவரர், வைரவமூர்த்தி திருவருளாலும், எங்கள் அபிமான தெய்வமான ஸ்ரீ காசி விசுவநாதர், காசி விசாலாட்சி, காசி காலபைரவர் மற்றும் அன்னபூரணி திருவருளாலும், திருப்பெருந்துறை உறை அருள்மிகு சிவயோக நாயகி சமேத ஆத்மநாதர் திருவருளாலும், எனது இஷ்ட தெய்வமான ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீனிவாசப் பெருமாள் திருவருளாலும், எனது மானசீக ஆச்சாரியர்களான ஸ்ரீபெரும்புதூர் ராமானுசர் மற்றும் கூரத்தாழ்வான் பேரருளாலும், சமயக்குரவர்கள் நால்வர் திருவருளாலும், அறுபத்து மூவர் திருவருளாலும், தேவகோட்டை நகரில் எனது பிறந்த வீடான, தர்மத்திற்கு பெயர் பெற்று விளங்கும் அரு. லெ. வீட்டின் எனது ஐயா SV.RM.AR. ராமனாதன் செட்டியார், அப்பத்தா RM. விசாலாட்சி ஆச்சி, எனது ஆயா வீட்டு பாட்டையாவும், மாயவரம்

அபயாம்பிகை கோவில் திருப்பணி செய்தவருமான, தேவகோட்டை பெ. வீட்டைச் சேர்ந்த வீரப்ப சுவாமிகள் ஆசியாலும், எனது தகப்பனார் தெய்வத்திரு. AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார் மற்றும் என்னை எந்நாளும் காத்து நிற்கும் தெய்வமான எனது பெரிய தாயார் தேவகோட்டை AR. சௌந்தரம் ஆச்சி ஆசியாலும், எனது பாசத்திற்குரிய தாயார் திருமதி. AR. மீனாட்சி ஆச்சி அவர்களின் ஆசியாலும் 28-12-2012 மார்கழி மாதம் 13ம் தேதி, ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு "திருவருள் தரும் தேவாரப் பதிகங்கள் (தேவாரத் தேன் துளிகள் பாகம்-2)" எனும் இந்த பக்தி மலரை பெரிய எழுத்தில் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது வாழ்வில் இன்பங்கள் வரும் போது, நம்மைப் பற்றி மட்டுமே சிந்தனை செய்கின்றோம். நாம் தான் காரணம் என்று எண்ணுகின்றோம். ஆனால் துன்பங்கள் வரும் போதோ, இறைவன் மேல் பழியைப் போடுகின்றோம். இறைவனை நிந்தனை செய்கின்றோம். நமது இன்ப, துன்பங்களுக்கு, நாம் முற்பிறவியில் செய்த புண்ணியங்களும், பாவங்களுமே காரணம் என்பதை உணர மறுக்கிறோம். சமயக்குரவர்கள் இறைவனைப் பாடி நமக்காக பல்வேறு திருமுறைகளை அருளியுள்ளார்கள். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான துன்பத்தைப் போக்கக் கூடியவை. இந்த பன்னிரு திருமுறைகளில் உள்ள பதிகங்கள் நமது துன்பத்தை நீக்கி, இன்பத்தை அளிக்கக் கூடியவை என்பதை


5-2



அனுபவ ரீதியாக பலர் சொல்லக் கேட்டும், நூல்களில் படித்ததையும் தொகுத்து, அன்பர்கள் தங்கள் வாழ்வில் துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பெற்றிட, "திருவருள் தரும் தேவாரப் பதிகங்கள்" தேவாரத் தேன் துளிகள் பாகம் - 2 (2010 ஆம் ஆண்டில் தேவாரத் தேன் துளிகள் பாகம் - 1 நான் வெளியிட்டதை அன்பர்கள் அறிவீர்கள்) என்ற தலைப்பில் இறைவன் திருவருளை எண்ணியும், அன்பர்கள் பயனுறும் பொருட்டும் இந்த இலவச பக்தி மலரை வெளியிட்டுள்ளேன். ஏற்கனவே நான் வெளியிட்டுள்ள பல்வேறு இலவச ஆன்மீக நூல்களுக்கு வரவேற்பு அளித்த ஆன்மீகப் பெருமக்கள் இந்த இலவச நூலையும் படித்து மகிழ்ந்து பயனடைவர் என்பதில் எனக்கு ஐயமில்லை.

அனைவரும் அவனருளாலே, அவன் தாள் வணங்கி, அவர் தம் வாழ்வில் இடர் நீங்கி இன்பம் பெற்று, வாழ்வில் மேன்மை பெற "திருவருள் தரும் தேவாரப் பதிகங்களை" பாராயணம் செய்து பயனடையுமாறு, அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருவருளை வேண்டிப் போற்றி பிரார்த்திக்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்



இறைப் பணியில்...

**தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்**
(அரு.லெ. வீடு)
தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in
Web : www.devakottaidolphinramanathan.com

5 - 2

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

# திருவருள் தரும் தேவாரப் பதிகங்கள்
(தேவாரத் தேன்துளிகள் பாகம்-2)

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 1. நிறைந்த செல்வம் பெறுவதற்குரிய பதிகம்

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தலம் அரிசில் கரைப்புத்தூர். இத்தலத்தில் அவதரித்தவர் புகழ்த்துணை நாயனார். பஞ்சம் வந்த காலத்தும், இத்தலத்தில் எழுந்தருளியுள்ள படிக்காசு அளித்த நாதரை இரவும் பகலும் வழிபட்டுவந்தார்.

சிவாலயத்தில் பூசை செய்யும் பொழுது, அயர்ச்சியினால் தண்ணீர்க் குடத்துடன் கீழே விழுந்து மூர்ச்சித்துவிட்டார்.

சிவபெருமானார், "அன்பனே ! பஞ்சம் நீங்கும் வரை நாள்தோறும் இங்கு ஒரு பொற்காசு வைப்போம்" என்று வான்வழியே அருளிச் செய்தார்.

இத்தலத்திற்குரிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பதிகத்தைப் பலரும் பாராயணம் செய்து நிறைந்த செல்வம் பெற்றுள்ளார்கள். அரிய பதிகம். கைமேல் பலன் பெறலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
அரிசில்கரைப்புத்தூர்

மலைக்குமகள் அஞ்ச மதகரியை உரித்தீர்
எரித் தீர்வரு முப்புரங்கள்
சிலைக்குங்கொலைச் சேவுகந்து ஏற்றுஒழியீர்
சில்பலிக்குஇல்கள் தோறும் செலவுஒழியீர்
கலைக்கொம்பும் கரிமருப் பும்இடறிக்
கலவம்மயில் பீலியும் கார்அகிலும்
அலைக்கும்புனல் சேர்அரி சில்தென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. 1

அருமல ரோன்சிரம் ஒன்றறுத்தீர்
செறுத்தீர் அழற் சூலத்தில் அந்தகனைத்
திருமகள் கோன்நெடு மால்பலநாள் சிறப்
பாகிய பூசனை செய்பொழுதில்
ஒருமலர் ஆயிரத் திற்குறைவால் நிறை
வாகவோர் கண்மலர் சூட்டலுமே
பொருவிறல் ஆழி புரிந்தளித்தீர்
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதனீரே. 2

தரிக்குந்தரை நீர்தழல் காற்றுஅந்தரம்
சந்திரன்சவிதா இயமானன் ஆனீர்
சரிக்கும்பலிக் குத்தலை அங்கையேந்தித்
தையலார்பெய்யக் கொள்வது தக்கதன்றால்
முரிக்கும்தளிர்ச் சந்தனத் தொடுவேயும்
முழங்கும்திரைக் கைகளால் வாரிமோதி
அரிக்கும்புனல் சேர்அரி சில்தென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. 3

கொடியுடை மும்மதில் வெந்தழியக் குன்றம்
வில்லா நாணியிற் கோல்ஒன்றினால்
இடிபட எய்தெரித் தீர் இமைக்கும் அளவில்
உமக்கு ஆர்எதிர் எம்பெருமான்
கடிபடு பூங்கணை யான்கருப்புச் சிலைக்
காமனை வேவக் கடைக்கண்ணினால்
பொடிபட நோக்கியது என்னை கொல்லோ
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதனீரே. 4

வணங்கித்தொழு வார்அவர் மால்பிரமன்
மற்றும்வானவர் தானவர் மாமுனிவர்
உணங்கல்தலை யில்பலி கொண்டலென்னே
உலகங்கள்எல் லாம்உடையீர் உரையீர்
இணங்கிக்கயல் சேல்இளவாளைபாய
இனக் கெண்டைதுள் எக்கண் டிருந்தஅன்னம்
அணங்கிக் குணங் கொள் அரிசில்தென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. 5

அகத்தடி மைசெய்யும் அந்தணன்தான்
அரிசிற்புனல் கொண்டுவந்துஆட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்தையும்நும் முடி
மேல்விழுத் திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்குநித் தற்படியும்
வரும்என்றொரு காசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைபுகச் செய்துகந்தீர்
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதனீரே. 6

பழிக்கும்பெருந் தக்கன்எச்சம்அழியப்
பகலோன்முதலாப்பல தேவரையும்
தெழித்திட்டவர் அங்கம் சிதைத்தருளும்
செய்கைஎன்னைகொ லோமைகொள் செம்மிடற்றீர்
விழிக்கும்தழைப் பீலியொடு ஏலம்உந்தி
விளங்கும்மணி முத்தொடு பொன்வரன்றி
அழிக்கும்புனல் சேர் அரி சில்தென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. 7

பறைக்கண்நெடும் பேய்க்கணம் பாடல்செய்யக்
குறட்பாரிடங் கள்பாறை தாம்முழக்கப்
பிறைக்கொள் சடை தாழப் பெயர்ந்த நட்டம்
பெருங்காடுஅரங் காகநின்று ஆடல்என்னே
கறைக்கொள்மணி கண்டமும் திண்தோள்களும்
கரங்கள்சிரம் தன்னிலும் கச்சுமாகப்
பொறிக்கொள்அர வம்புனைந் தீர்பலவும்
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதனீரே. 8

மழைக்கண்மடவாளையோர் பாகம்வைத்தீர்
வளர்புன்சடைக் கங்கையை வைத்துகந்தீர்
முழைக்கொள் அர வோடுஎன்பு அணிகலனா
முழுநீறுமெய் பூசுதல் என்னைகொலோ
கழைக்கொள்கரும்புங்கதலிக்கனியும்
கமுகின்பழக் காயும் கவர்ந்துகொண்டிட்டு
அழைக்கும்புனல் சேர்அரி சில்தென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. 9

கடிக்கும்அரவால்மலையால்அமரர்
கடலைக்கடை யஎழு காளகூடம்
ஒடிக்கும்உல கங்களை யென்றதனை
உமக்கேஅமு தாகவுண்டீர் உமிழ்நீர்
இடிக்கும்மழை வீழ்த்துஇழித் திட்டருவி
இருபாலும்ஓடி இரைக்கும் திரைக்கை
அடிக்கும் புனல் சேரரி சில்தென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே. 10

காரூர் மழைபெய்து பொழிஅருவிக்
கழையோடுஅகில் உந்திட்டு இருகரையும்
போரூர்புனல் சேர்அரிசில் தென்கரைப்
பொழிலார்திருப் புத்தூர்ப் புனிதர்தம்மை
ஆரூரன் அருந்தமிழ் ஐந்தினொடு ஐந்து
அழகால்உரைப் பார்களும் கேட்பவரும்
சீரூர்தரு தேவர் கணங்களொடும்
இணங்கிச்சிவ லோகமது எய்துவரே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

## 2. நிறைந்த செல்வம் பெறுவதற்குரிய பதிகம்

சுந்தரமூர்த்தி நாயனார் பலசிவத்தலங்களை வழிபட்டுக் கொண்டு திருப்பாச்சிலாச்சிராமம் எனும் தலத்திற்கு வந்தார். பொன் பெறுதல் வேண்டி இத்தலத்து இறைவரைத் தீந்தமிழ்ப் பதிகம்பாடி வழிபட்டார். "ஏசின அல்ல" எனும் திருப்பாட்டு பாடியதும் இறைவர் பொற்கிழியினைக் கொடுத்தருளினார்.

அர்த்த மண்டபத் திருவாசலில் இறைவர் பொற்கிழி கொடுத்ததால், "கிழிகொடுத்தருளிய திருவாசல்" என்று கூறப்படுகிறது. இத்தலம் "திருவாசி" எனப்படுகிறது. திருச்சிமாவட்டம், இலால்குடி வட்டத்தில் இத்தலம் அமைந்துள்ளது. திருவானைக்கா தலத்திற்கு வடமேற்கே ஐந்துகல் தொலைவில் உள்ளது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம்பெற்ற பொன்னை மாற்றுரைத்துக் காட்ட, இறைவர் அதனை அறிந்த காரணத்தால் மாற்றறிவரதீசுவரர் எனப் போற்றப்படுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
திருப்பாச்சிலாச்சிராமம்

வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும்
நெஞ்சமும் வஞ்சம்ஒன்று இன்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக்கு அடிமை
உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம்பு ஆர்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிராமத்துஎம் பரமர்
பித்தரே ஒத்தோர் நச்சில ராகில்
இவரலாது இல்லையோ பிரானார். 1

அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே அமையும்என்று இருந்தேன்
என்னையும் ஒருவன் உளன்என்று கருதி
இறைஇறை திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை சூழ்தரு
பாச்சி லாச்சிரா மத்துறை அடிகள்
பின்னையே அடியார்க்கு அருள்செய்வ தாகில்
இவரலாது இல்லையோ பிரானார். 2

உற்றபோது அல்லால் உறுதியை உணரேன்
உள்ளமே அமையும்என்று இருந்தேன்
செற்றவர் புரம்மூன்று எரிஎழச் செற்ற
செஞ்சடை நஞ்சடை கண்டர்
அற்றவர்க்கு அருள்செய் பாச்சிலாச் சிராமத்து
அடிகள்தாம் யாதுசொன் னாலும்
பெற்றபோது உகந்து பெறாவிடில் இகழில்
இவரலாது இல்லையோ பிரானார். 3

நாச்சில பேசி நமர்பிறர் என்று
நன்றுதீது என்கிலர் மற்றோர்
பூச்சிலை நெஞ்சே பொன்விளை கழனிப்
புள்ளினம் சிலம்புமாம் பொய்கைப்
பாச்சிலாச் சிராமத்து அடிகள் என்றிவர்தாம்
பலரையும் ஆட்கொள்வர் பரிந்தோர்
பேச்சிலர் ஒன்றைத் தரவில ராகில்
இவரலாது இல்லையோ பிரானார். 4

வரிந்தவெஞ் சிலையால் அந்தரத்து எயிலை
வாட்டிய வகையின ரேனும்
புரிந்தஅந் நாளே புகழ்தக்க அடிமை
போகுநாள் வீழுநாள் ஆகிப்
பரிந்தவர்க்கு அருள்செய் பாச்சிலாச் சிராமத்து
அடிகள்தாம் யாதுசொன் னாலும்
பிரிந்துஇறைப் போதில் பேர்வதே ஆகில்
இவரலாது இல்லையோ பிரானார். 5

செடித்தவம் செய்வார் சென்றுழிச் செல்லேன்
தீவினை செற்றிடும் என்று
அடித்தவம் அல்லால் ஆரையும் அறியேன்
ஆவதும் அறிவர்எம் அடிகள்
படைத்தலைச் சூலம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிடித்தவெண் ணீறே பூசுவ தானால்
இவரலாது இல்லையோ பிரானார். 6

கையது கபாலம் காடுறை வாழ்க்கை
கட்டங்கம் ஏந்திய கையர்
மெய்யது புரிநூல் மிளிரும்புன் சடைமேல்
வெண்திங்கள் சூடிய விகிர்தர்
பையரவு அல்குல் பாவையர் ஆடும்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
மெய்யரே ஒத்தோர் பொய்செய்வ தாகில்
இவரலாது இல்லையோ பிரானார். 7

நிணம்படும் உடலை நிலைமையென்று ஓரேன்
நெஞ்சமே தஞ்சமென்று இருந்தேன்
கணம்படிந்து ஏத்திக் கங்குலும் பகலும்
கருத்தினால் கைதொழுது எழுவேன்
பணம்படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணம்படு காட்டில் ஆடுவ தாகில்
இவர் அலாது இல்லையோ பிரானார். 8

குழைத்துவந்து ஓடிக் கூடுதி நெஞ்சே
குற்றேவல் நாள்தொறும் செய்வான்
இழைத்தநாள் கடவார் அன்பில ரேனும்
எம்பெரு மான்என்று எப் போதும்
அழைத்தவர்க்கு அருள்செய் பாச்சிலாச் சிராமத்து
அடிகள்தாம் யாதுசொன் னாலும்
பிழைத்தது பொறுத்துஒன்று ஈகில ராகில்
இவரலாது இல்லையோ பிரானார். 9

துணிப்படும் உடையும் சுண்ணவெண் ணீறும்
தோற்றமும் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினால் கூறி
மனத்தினால் தொண்டனேன் நினைவேன்
பணிப்படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணிப்பட ஆண்டு பணிப்பில ராகில்
இவரலாது இல்லையோ பிரானார். 10

ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன்
அடியவர்க்கு அடியனும் ஆனேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும்
ஒண்மலர்ச் சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க்கு அருள்செய்யும்
பாச்சி லாச்சிரா மத்தெம் அடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில்
இவரலாது இல்லையோ பிரானார். 11

ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல
எம்பெரு மான்என்றுஎப் போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்து
அடிகளை அடிதொழப் பன்னாள்
வாயினாற் கூறி மனத்தினால் நினைவான்
வளவயல் நாவல் ஆரூரன்
பேசின பேச்சைப் பொறுக்கில ராகில்
இவரலாது இல்லையோ பிரானார். 12

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 3. விவசாயம் (பசுமைப்புரட்சி) செழிக்க உதவும் பதிகம்

திருஞான சம்பந்த சுவாமிகள் திருஒத்தூர் (திருவத்திபுரம்) வந்தார். அத்தலத்திலிருந்த பனைமரங்கள் யாவும் ஆண் பனையாகவே அமைந்து காய்க்காமலிருந்தன. இதனைக் கேள்வியுற்ற சம்பந்த சுவாமிகள் திருஒத்தூர் ஆலயத்திற்குச் சென்று இத்திருப்பதிகம் பாடியருளினார்.

அந்த ஆண் பனைகள் யாவும் பெண் பனைகளாகிப் பூத்துக் காய்த்துக் கனிகளை உதிர்த்தன. இப்பதிகப் பாராயணத்தால் பயிர்கள் நன்றாக வளர்ந்து, மிகுதியான விளைவைத் தரும் என்பதில் சந்தேகம் தேவையில்லை.

திருஒத்தூர் தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும். காஞ்சிபுரம், ஆரணி, திருவண்ணாமலை முதலிய ஊர்களிலிருந்து பேருந்துகள் செல்கின்றன.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருஒத்தூர் (திருவத்திபுரம்)

பூத்தேர்ந்து ஆயன கொண்டு நின் பொன்னடி
ஏத்தா தார்இல்லை எண்ணுங்கால்
ஒத்தூர் மேய ஒளிமழு வாள் அங்கைக்
கூத்தீர் உம்ம குணங்களே. 1

இடையீர் போகா இளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மான்உரி
உடையீ ரேஉம்மை ஏத்துதும் ஒத்தூர்ச்
சடையீ ரேஉம தாளே. 2

உள்வேர் போல நொடிமையி னார்திறம்
கொள்வீர் அல்குல்ஓர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி ஒத்தூர்க்
கள்வீ ரேஉம காதலே 3

தோட்ட ரேதுத்தி ஐந்தலை நாகத்தை
ஆட்ட ரே அடி யார்வினை
ஓட்ட ரேஉம்மை ஏத்துதும் ஒத்தூர்
நாட்ட ரேஅருள் நல்குமே. 4

குழையார் காதீர் கொடுமழு வாள்படை
உழைஆள் வீர்திரு ஒத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின்று ஆடுவார்
அழையா மேஅருள் நல்குமே. 5

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீர்என்று
உட்கா தார்உள ரோதிரு ஒத்தூர்
நக்கீ ரே அருள் நல்குமே. 6

தாதுஆர் கொன்றை தயங்கு முடியுடை
நாதா என்று நலம்புகழ்ந்து
ஓதா தார்உள ரோதிரு ஒத்தூர்
ஆதீரே அருள் நல்குமே. 7

என்தான் இம்மலை என்ற அரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதில் எய்தவன் ஒத்தூர்
என்றார் மேல்வினை ஏகுமே. 8

நன்றா நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலும் திசையெலாம்
ஒன்றாய் ஒள்ளெரி யாய்மிக ஒத்தூர்
நின்றீ ரேஉமை நேடியே. 9

கார் அமண்கலிங் கத்துவர் ஆடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓர் அம்பால்எயில் எய்தவன் ஒத்தூர்ச்
சீர் அவன்கழல் சேர்மினே. 10

குரும்பை ஆண்பனை ஈன்குலை ஒத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும்புகலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 4. கால்நடைகள் வளம் பெருகுவதற்கும், பால் வளம் பெருகுவதற்கும் உதவும் பதிகம்

சென்னை திருவான்மியூரில் எழுந்தருளியுள்ள இறைவரைக் காமதேனு எனும் பசு பால் சொரிந்து வழிபட்டு நலம் பெற்றுள்ளது. திருஞான சம்பந்த சுவாமிகள் அருளியுள்ள இத்தலத்துப் பதிகத்தை இங்கே அளித்துள்ளோம். இப்பதிகப் பாராயணத்தால் கால்நடைகள் அபிவிருத்தியடையும். பசுமாடு நன்கு பால் கொடுக்கும்.

திருஞானசம்பந்தசுவாமிகள்
திருவான்மியூர்

விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கையொர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி யூர்உறையும்
அரையா உன்னையல்லால் அடையாது எனது ஆதரவே. 1

இடியார் ஏறுடையாய் இமையோர்தம் மணிமுடியாய்
கொடியார் மாமதியோடு அரவம்மலர்க் கொன்றையினாய்
செடியார் மாதவிசூழ் திருவான்மி யூர்உறையும்
அடிகேள் உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே. 2

கையார்வெண்மழுவா கனல் போல்திரு மேனியனே
மையார் ஒண்கண் நல்லாள் உமையாள் வளர் மார்பினனே
செய்யார் செங்கயல்பாய் திருவான்மி யூர்உறையும்
ஐயா உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே. 3

பொன்போ லுஞ்சடைமேல் புனல்தாங்கிய புண்ணியனே
மின்போ லும்புரிநூல் விடையேறிய வேதியனே
தென்பால் வையமெலாம் திகழுந்திரு வான்மிதன்னில்
அன்பா உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே. 4

கண்ணாரும் நுதலாய் கதிர்சூழ்ஒளி மேனியின்மேல்
எண்ணார் வெண்பொடிநீறு அணிவாய்எழில் ஆர்பொழில்சூழ்
திண்ணார் வண்புரிசைத் திருவான்மியூர் உறையும்
அண்ணா உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே. 5

நீதி நின்னையல்லால் நெறியாதும் நினைத்தறியேன்
ஓதீ நான்மறைகள் மறையோன்தலை ஒன்றினையும்
சேதீ சேதமில்லாத் திருவான்மியூர் உறையும்
ஆதீ உன்னையல்லால் அடையாது எனது ஆதரவே. 6


வானார் மாமதிசேர் சடையாய்வரை போலவரும்
கானார் ஆனையின்தோல் உரித்தாய் கறை மாமிடற்றாய்
தேனார் சோலைகள்சூழ் திருவான்மியூர் உறையும்
ஆனாய் உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே. 7

பொறிவாய் நாகணையா னொடுபூமிசை மேயவனும்
நெறியார் நீள்கழல்மேல் முடிகாண்பரி தாயவனே
செறிவார் மாமதில்சூழ் திருவான்மியூர் உறையும்
அறிவே உன்னை யல்லால் அடையாதுஎனது ஆதரவே. 8

குண்டாடும் சமணர் கொடும் சாக்கியர் என்றிவர்கள்
கண்டார் காரணங்கள் கருதாதவர் பேசநின்றாய்
திண்தேர் வீதியதார் திருவான்மி யூர்உறையும்
அண்டா உன்னை யல்லால் அடையாதுஎனது ஆதரவே. 9

கன்றா ருங்கமுகின் வயல்சூழ்தரு காழிதனில்
நன்றா னபுகழால் மிகுஞானசம் பந்தனுரை
சென்றார் தம்மிடர்தீர் திருவான்மியூர் அதன்மேல்
குன்றாது ஏத்தவல்லார் கொடுவல்வினை போயறுமே. 10

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# கால்நடைகள் வளம் பெருகுவதற்கும் பால்வளம் பெருகுவதற்கும் உதவும் பதிகம்

விழுப்புரத்திற்கு அருகில் உள்ள தலம் ஆமாத்தூர் என்பது. நந்தியும், காமதேனுவும் இத்தலத்து இறைவரை வணங்கிப் பேறு பெற்றுள்ளன.

இத்தலத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியுள்ள பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. அன்பர்கள் பாராயணம் செய்து பால் வளம் பெறலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
திருஆமாத்தூர்

காண்டனன் காண்டனன் காரிகை யாள்தன் கருத்தனாய்
ஆண்டனன் ஆண்டனன் ஆமாத் தூர்எம் அடிகட்குஆட்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று சொல்லுவேன்
கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித்து அல்லா தவர்கட்கே. 1

பாடுவன் பாடுவன் பார்ப்பதி தன்னடி பற்றிநான்
தேடுவன் தேடுவன் திண்ணெனப் பற்றிச் செறிதர
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் அடிகளைக்
கூடுவன் கூடுவன் குற்றமது அற்றென் குறிப்பொடே. 2

காய்ந்தவன் காய்ந்தவன் கண்அழ லால்அன்று காமனைப்
பாய்ந்தவன் பாய்ந்தவன் பாதத்தினால்அன்று கூற்றத்தை
ஆய்ந்தவன் ஆய்ந்தவன் ஆமாத் தூர்எம் அடிகளார்
ஏய்ந்தவன் ஏய்ந்தவன் எம்பி ராட்டியைப் பாகமே. 3

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள் ளேநின்ற ஒண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று திருவொற்றி யூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்தோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத் தூர்ஜயன் அருளதே. 4

வென்றவன் வென்றவன் வேள்வியில் விண்ணவர் தங்களைச்
சென்றவன் சென்றவன் சில்பலிக்கு என்று தெருவிடை
நின்றவன் நின்றவன் நீதி நிறைந்தவர் தங்கள்பால்
அன்றவன் அன்றவன் செய்யருள் ஆமாத்தூர் ஐயனே. 5

காண்டவன் காண்டவன் காண்டற்கு அரிய கடவுளாய்
நீண்டவன் நீண்டவன் நாரணன் நான்முகன் நேடவே
ஆண்டவன் ஆண்டவன் ஆமாத் தூரையும் எனையும்ஆள்
பூண்டவன் பூண்டவன் மார்பிற் புரிநூல் புரளவே. 6

எண்ணவன் எண்ணவன் ஏழுல கத்துயிர் தங்கட்குக்
கண்ணவன் கண்ணவன் காண்டும்என் பார்அவர் தங்கட்குப்
பெண்ணவன் பெண்ணவன் மேனியோர் பாகமாம் பிஞ்ஞகன்
அண்ணவன் அண்ணவன் ஆமாத் தூர்எம் அடிகளே. 7


பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந்து என்னைப் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தின் உட்பொரு ளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனை ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என்மனத்து இன்புற்று இருப்பனே. 8

தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாள்தொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் அடிகளே. 9

உற்றனன் உற்றவர் தம்மை ஒழிந்துஉள்ளத்து உள்பொருள்
பற்றினன் பற்றினன் பங்கயச் சேவடிக் கேசெல்ல
அற்றனன் அற்றனன் ஆமாத்தூர் மேயான்
அடியார்கட்குஆள்
பெற்றனன் பெற்றனன் பெயர்த்தும் பெயர்த்தும்
பிறவாமைக்கே. 10

ஐயனை அத்தனை ஆளுடை ஆமாத்தூர் அண்ணலை
மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொரு ளான விமலனை
மையனை மையணி கண்டனை வன்தொண்டன்
ஊரன்சொல்
பொய்யொன்றும் இன்றிப் புலம்புவார் பொற்கழல் சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 5. நல்ல நட்பு கிடைக்க உதவும் பதிகம்

சென்னைக்கு அருகில் (திருவள்ளூர் மாவட்டத்தில்) உள்ள சிவத் தலம் ''திருவாலங்காடு''. காரைக்காலம்மையார் இறைவர் திருவடி நிழலில் என்றும் இன்பமாய் வீற்றிருக்கும் கயிலைக்குச் சமமான தலம்.

இத்தலத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியுள்ள "முத்தா முத்தி" எனத் தொடங்கும் பதிகம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் "ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே" என அமைத்துப் பாடியுள்ளதை நம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்பதிகப் பாராயணத்தால் உயர்ந்தோர் (சான்றோர்) அல்லது உண்மைச் சிவனடியார் நட்பு கிடைக்கும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
திருவாலங்காடு

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டும் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங்காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 1

பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் தன்னைப் போகாமே
மெய்யா வந்திங்கு எனை ஆண்ட மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே
பையாடு அரவம் அரைக்கசைத்த பரமா பழைய னூர்மேய
ஐயா ஆலங் காடாவுன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 2

தூண்டா விளக்கின் நற்சோதீ தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய்
பூண்டாய் எலும்பைப் புரமூன்றும் பொடியாச் செற்ற புண்ணியனே
பாண்டு ஆழ்வினைகள்அவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
ஆண்டா ஆலங் காடாவுன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 3

மறிநேர் ஒண்கண் மடநல்லார் வலையிற் பட்டு மதிமயங்கி
அறிவே அழிந்தேன் ஐயாநான் மையார் கண்டம் உடையானே
பறியா வினைகள் அவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
அறிவே ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 4

வேல்அங்கு ஆடு தடங்கண்ணார் வலையுள் பட்டுஉன் நெறிமறந்து
மால்அங்கு ஆடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே மரகதமே
பால் அங்கு ஆடீ நெய்யாடீ படர்புன் சடையாய் பழையனூர்
ஆலங் காடா உன்னுடைய அடியார்க்கு அடியேன் ஆவேனே. 5

எண்ணார் தங்கள் எயில்எய்த எந்தாய் எந்தை பெருமானே
கண்ணாய் உலகம் காக்கின்ற கருத்தா திருத்தல் ஆகாதாய்
பண்ணார் இசைகள் அவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அண்ணா ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 6

வண்டார் குழலி உமைநங்கை பங்கா கங்கை மணவாளா
விண்டார் புரங்கள் எரிசெய்த விடையாய் வேத நெறியானே
பண்டுஆழ் வினைகள் பலதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
அண்டா ஆலங் காடாவுன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 7

பேழ்வாய் அரவின் அணையானும் பெரிய மலர்மேல் உறைவானும்
தாழாது உன்தன் சரண்பணியத் தழலாய் நின்ற தத்துவனே
பாழாம் வினைகள் அவைதீர்க்கும் பரமா பழைய னூர்தன்னை
ஆள்வாய் ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 8

எம்மான் எந்தை மூத்தப்பன் ஏழேழ் படிகால் எமை ஆண்ட
பெம்மான் ஈமப் புறங்காட்டில் பேயோடு ஆடல் புரிவானே
பன்மா மலர்கள் அவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அம்மா ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 9

பத்தர் சித்தர் பலர் ஏத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்தன் ஆலங் காடன்தன் அடிமைத்திறமே அன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவன் ஊரன் ஒண்தமிழ்கள்
பத்தும் பாடி ஆடுவார் பரமன் அடியே பணிவாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 6. தடைப்பட்ட திருமணம் தடையின்றி நடக்க உதவும் பதிகம்

வைத்தீசுவரன் கோயில் – மயிலாடுதுறைச் சாலையில் உள்ளது திருக்கண்ணார் கோயில் (குறுமானக் குடி) எனும் தலம். திருஞான சம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்றுள்ளது.

திருமணம் தடைப்படுவோர் இப்பதிகப் பாராயணம் செய்தும், இத்தலத்து இறைவரை வழிபட்டும் நலம் பெற்றுவருகின்றார்கள் இன்றும். இருபாலரும் இங்குச் சென்றுவரலாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருக்கண்ணார் கோயில்

தண்ணார் திங்கள் பொங்கு அரவம் தாழ்புனல் சூடிப்
பெண் ஆண் ஆய பேரருளாளன் பிரியாத
கண்ணார் கோயில் கைதொழுவோர்கட்கு இடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகும்மே. 1

கந்து அமர் சந்தும் கார்அகிலும் தண் கதிர்முத்தும்
வந்து அமர் தென்நீர் மண்ணி வளம்சேர் வயல் மண்டிக்
கொந்து அலர் சோலைக் கோகிலம் ஆடக் குளிர் வண்டு
செந்து இசை பாடும் சீர் திகழ் கண்ணார் கோயிலே. 2

பல்லியல் பாணிப் பாரிடம் ஏத்தப் படுகானில்
எல்லி நடம்செய் ஈசன் எம்மான்தன் இடம் என்பர்
கொல்லையின் முல்லை மல்லிகை மௌவல் கொடிபின்னிக்
கல் இயல் இஞ்சி மஞ்சமர் கண்ணார் கோயிலே. 3

தரு வளர் கானம் தங்கிய துங்கப் பெருவேழம்
மருவளர் கோதை அஞ்ச உரித்து மறைநால்வர்க்கு
உரு வளர் ஆலநீழல் அமர்ந்து ஈங்கு உரைசெய்தார்
கரு வளர்கண்ணார் கோயில் அடைந்தோர் கற்றோரே. 4

மறு மாண் உருவாய் மற்று இணை இன்றி வானோரைச்
செறு மாவலிபால் சென்றுஉலகு எல்லாம் அளவிட்ட
குறு மாண் உருவன் தற்குறியாகக் கொண்டாடும்
கறுமா கண்டன் மேயது கண்ணார் கோயிலே. 5

விண்ணவருக்காய் வேலைஉள் நஞ்சம் விருப்பாக
உண்ணவனைத் தேவர்க்குஅமுது ஈந்துஎவ்வுலகிற்கும்
கண்ணவனைக் கண்ணார்திகழ் கோயில் கனிதன்னை
நண்ண வல்லோர்கட்கு இல்லை நமன்பால் நடலையே. 6

முன்னொரு காலத்து இந்திரன் உற்ற முனிசாபம்
பின்னொரு நாள் அவ் விண்ணவர் ஏத்தப் பெயர்வெய்தித்
தன் அருளால் கண் ஆயிரம் ஈந்தோன் சார்பு என்பர்
கன்னியர் நாளும் துன் அமர் கண்ணார் கோயிலே. 7


பெருக்கு எண்ணாத பேதை அரக்கன் வரைக்கீழால்
நெருக்குண்ணாத் தன் நீள்கழல் நெஞ்சில் நினைந்து ஏத்த
முருக்குண்ணாது ஓர் மொய்கதிர் வாள்தேர் முன் ஈந்த
திருக்கண்ணார் என்பார் சிவலோகம் சேர்வாரே. 8

செங்கமலப் போதில் திகழ் செல்வன் திருமாலும்
அங்கமலக்கண் நோக்கரும் வண்ணத்து அழலானான்
தங்கமலக் கண்ணார் திகழ் கோயில் தமதுஉள்ளம்
அங்கமலத்தோடு ஏத்திட அண்டத்து அமர்வாரே. 9

தாறு இடு பெண்ணைத் தட்டு உடையாரும் தாம்உண்ணும்
சோறு உடையார் சொல் தேறன்மின் வெண்ணூல் சேர்மார்பன்
ஏறு உடையன் பரன் என்பு அணிவான் நீள் சடை மேலோர்
ஆறு உடை அண்ணல் சேர்வது கண்ணார் கோயிலே. 10

காமரு கண்ணார் கோயில் உளானைக் கடல்சூழ்ந்த
பூமரு சோல்லைப் பொன்இயல் மாடப் புகலிக்கோன்
நாமருவு தொன்மைத் தன்மைஉள் ஞானசம்பந்தன்
பாமரு பாடல் பத்தும் வல்லார்மேல் பழிபோமே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 7. திருமணம் விரைவில் நடைபெற உதவும் பதிகம்

குத்தாலத்திற்கு அருகில் உள்ளது. "வேள்விக்குடி" எனும் தலம். இறைவர் - கல்யாண சுந்தரேசுவரர் இறைவி - பரிமளசுகந்தநாயகி

திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவரால் பாடல் பெற்றதலம். அரசகுமாரன் ஒருவனுக்கு நிச்சயித்திருந்த பெண்ணைத் திருமணம் முடிக்குமுன், பெண்ணினுடைய பெற்றோர் இறந்து விட்டனர். ஆதலால் அப்பெண்ணின் சுற்றத்தார் திருமணம் செய்ய மறுத்தனர். அரசகுமாரன் இத்தலத்து இறைவரிடம் முறையிட்டு அன்றாடம் வணங்கிவந்தான். இறைவர் ஒரு பூதத்தால் அப்பெண்ணைக் கொண்டுவரச் செய்து திருமணம் செய்து வைத்தார் என்பது இத்தல வரலாறு கூறும் உண்மை.

இந்தத் தலத்திற்குரிய திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய பதிகப்பாராயணம் செய்து வந்தால் விரைவில் திருமணம் கூடும் என்பதை அவரவர் அனுபவத்தால் அறியலாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருவேள்விக்குடி

ஓங்கிமேல் உழிதரும் ஒலிபுனல் கங்கையை ஒரு சடைமேல்
தாங்கினார் இடுபலி தலைகல னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினால் உமையொடும் பகலிடம் புகலிடம் பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்திஆர் இரவிடத்து உறைவர் வேள்
விக்குடியே. 1

தூறுசேர் சுடலையில் சுடர்எரி யாடுவர் துளங்கொளி சேர்
நீறுசாந்து என உகந்து அணிவர்வெண் பிறைமல்கு
சடைமுடியார்
நாறுசாந்து இளமுலை அரிவையோடு ஒருபகல்
அமர்ந்தபிரான்
வீறுசேர் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள் விக்குடியே. 2

மழைவளர் இளமதி மலரொடு தலைபுல்கு வார்சடைமேல்
கழைவளர் புனல்புகக் கண்டஎம் கண்ணுதல் கபாலியார் தாம்
இழைவளர் துகில்அல்குல் அரிவையோடு ஒருபகல்
அமர்ந்தபிரான்
விழைவளர் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்
விக்குடியே. 3

கரும்பன வரிசிலைப் பெருந்தகைக் காமனைக் கவின் அழித்த
சுரும்பொடு தேன்மல்கு தூமலர்க் கொன்றையஞ் சுடர்ச் சடையார்
அரும்பன வனமுலை அரிவையொடு ஒருபகல்
அமர்ந்தபிரான்
விரும்பிடம் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்
விக்குடியே. 4

வளம்கிளர் மதியமும் பொன்மலர்க் கொன்றையும் வாளரவும்
களங்கொளச் சடையிடை வைத்தஎங் கண்ணுதற் கபாலியார்
தாம்
துளங்குநூல் மார்பினர் அரிவையொடு ஒருபகல் அமர்ந்த பிரான்
விளங்குநீர்த் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்
விக்குடியே. 5

பொறியுலாம் அடுபுலி உரிவையர் வரியராப் பூண்டுஇலங்கும்
நெறியுலாம் பலிகொளும் நீர்மையர் சீர்மையை
நினைப்பரியார்
மறியுலாம் கையினர் மங்கையொடு ஒருபகல் அமர்ந்த
பிரான்
வெறியுலாந் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்
விக்குடியே. 6

புரிதரு சடையினர் புலியுரி அரையினர் பொடியணிந்து
திரிதரும் இயல்பினர் திரிபுரம் மூன்றையும் தீவளைத்தார்
வரிதரு வனமுலை மங்கையொடு ஒருபகல் அமர்ந்த பிரான்
விரிதரு துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்
விக்குடியே. 7

நீண்டுஇலங்கு அவிர்ஒளி நெடுமுடி
அரக்கன்இந்நீள்வரையைக்
கீண்டுஇடந் திடுவன்என்று எழுந்தவன் ஆள்வினை
கீழ்ப்படுத்தார்
பூண்டநூல் மார்பினர் அரிவையொடு ஒருபகல் அமர்ந்த பிரான்
வேண்டிடம் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்
விக்குடியே. 8

கரைகடல் அரவணைக் கடவுளும் தாமரை நான்முகனும்
குரைகழல் அடிதொழக் கவ்ளரி எனநிறங் கொண்டபிரான்
வரைகெழு மகளொடும் பகலிடம் புகலிடம் வண்பொழில் சூழ்
விரைகமழ் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்
விக்குடியே. 9

அயமுக வெயில்நிலை அமணரும் குண்டரும் சாக்கியரும்
நயமுக உரையினர் நகுவன சரிதைகள் செய்துழல்வார்
கயலன வரிநெடும் கண்ணியொடு ஒருபகல் அமர்ந்தபிரான்
வியன்நகர்த் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்
விக்குடியே. 10

விண்ணுலாம் விரிபொழில் விரைமணல் துருத்திவேள்
விக்குடியும்
ஒண்ணுலாம் ஒலிகழல் ஆடுவார் அரிவையொடு உறைபதியை
நண்ணுலாம் புகலியுள் அருமறை ஞானசம் பந்தன் சொன்ன
பண்ணுலாம் அருந்தமிழ் பாடுவார் ஆடுவார் பழியிலரே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 8. நல்ல மனைவி அமைய உதவும் பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருஒற்றியூர் பதிகத்தைப் பாராயணம் செய்யும் ஆடவர் நல்ல குணமுள்ள மனைவியைப் பெறுவர் என்பது உறுதியே யாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
திருஒற்றியூர்

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டும் கலமுந் திமிலும் கரைக்கே
ஓட்டும் திரைவாய் ஒற்றி யூரே. 1

பந்துங் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார் செந்தீ வண்ணர்
எந்தம் அடிகள் இறைவர்க்கு இடம்போல்
உந்தும் திரைவாய் ஒற்றி யூரே 2

பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்
கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்
தவழும் மதிசேர் சடையாற்கு இடம்போல்
உகளும் திரைவாய் ஒற்றி யூரே. 3

என்னது எழிலும் நிறையும் கவர்வான்
புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவான் ஒற்றி யூரே. 4

பணங்கொள் அரவம் பற்றிப் பரமன்
கணங்கள் சூழக் கபாலம் ஏந்தி
வணங்கும் இடைமென் மடவார் இட்ட
உணங்கல் கவர்வான் ஒற்றி யூரே. 5

படையார் மழுவன் பால்வெண் ணீற்றன்
விடையார் கொடியன் வேத நாவன்
அடைவார் வினைகள் அறுப்பான் என்னை
உடையான் உறையும் ஒற்றி யூரே. 6

சென்ற புரங்கள் தீயில் வேவ
வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் நரைஏறு
ஒன்றை உடையான் ஒற்றி யூரே. 7

கலவ மயில்போல் வளைக்கை நல்லார்
பலரும் பரவும் பவளப் படியான்
உலகின் உள்ளார் வினைகள் தீர்ப்பான்
உலவுந் திரைவாய் ஒற்றி யூரே. 8

பற்றி வரையை எடுத்த அரக்கன்
இற்று முரிய விரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பார் ஓதம்
ஒற்றுந் திரைவாய் ஒற்றி யூரே. 9

ஒற்றி ஊரும் அரவும் பிறையும்
பற்றி ஊரும் பவளச் சடையான்
ஒற்றி ஊர்மேல் ஊரன் உரைத்த
கற்றுப் பாடக் கழியும் வினையே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

## 9. நல்ல கணவன் அமைய உதவும் பதிகம்

கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. அவளிவணல்லூர் எனும் சிவத்தலம். தஞ்சையிலிருந்தும் போகலாம். (அவள் இவள் நல்லூர்) இத்தலத்து இறைவரைப் பூசித்து வந்த ஆதிசைவர் காசிக்குச் சென்றார். அச்சமயம் அவருடைய மனைவி அம்மை நோயால் பாதிக்கப்பட்டு உருமாறிக் கண் இழந்து விட்டாள். அவள் மிகுந்த சிவபக்தி உடையவள்.

காசியிலிருந்து திரும்பிய ஆதிசைவர் (பூசகர்) தன் மனைவியின் தங்கையைத் தன் மனைவி என வாதிட்டார். மூத்தவள், அவள்இவள்நல்லூரில் எழுந்தருளியுள்ள இறைவரிடம் (சாட்சி நாதரிடம்) மனம் உருகி முறையிட்டாள். அவளுடைய வேண்டுதலுக்கு இசைந்த இறைவர் வான்வழியே, "பூசகரே! உன் மனைவி அவள் (மூத்தவள்). இவள் (இளையவள்) இல்லை" என்று அருளி மறைந்தார். நல்ல கணவன் அமைய உதவும் பதிகம் இது.

திருஞானசம்பந்த சுவாமிகள்
அவள்இவள் நல்லூர்

கொம்புஇரிய வண்டுலவு கொன்றைபுரி நூலொடுகுலாவித்
தம்பரிசி னோடுசுடு நீறுதட வந்துஇடபம் ஏறிக்
கம்பரிய செம்பொன்நெடு மாடமதில் கல்வரைவில்லாக
அம்புஎரிய எய்தபெருமான் உறைவது அவள்இவள் நல் லூரே. 1

ஓமையன கள்ளியன வாகையன கூகைமுரல் ஓசை
ஈமஎரி சூழ்சுடலை வாசமுதுகாடுநடம் ஆடித்
தூய்மையுடை அக்கொடுஅர வம்விரவி மிக்குஒளி துளங்க
ஆமையொடு பூணும்அடிகள் உறைவது அவள்இவள்நல் லூரே. 2

நீறுடைய மார்பில்இம வான்மகளொர் பாகம்நிலை செய்து
கூறுடைய வேடமொடு கூடியழகு ஆயதொரு கோலம்
ஏறுடைய ரேனும் இடுகாடு இரவில் நின்றுநடம் ஆடும்
ஆறுடைய வார்சடையி னான் உறைவது அவள் இவள்நல் லூரே. 3

பிணியும்இலர் கேடும்இலர் தோற்றம்இலர் என்றுஉலகு பேணிப்
பணியும்அடி யார்கள்அன பாவம்அற இன்னருள்ப யந்து
துணியுடைய தோலும்உடை கோவணமும் நாகம்உடன் தொங்க
அணியும்அழகாகஉடை யான்உறைவது அவள்இவள்நல் லூரே. 4

குழலின்வரி வண்டுமுரல் மெல்லியன பொன்மலர்கள் கொண்டு
கழலின்மிசை இண்டை புனைவார் கடவுள் என்றமரர் கூடித்
தொழலும்வழி பாடும்உடை யார்துயரும் நோயும்இலர் ஆவர்
அழலும்மழு ஏந்து கையினான் உறைவது அவள்இவள்நல் லூரே. 5

துஞ்சல்இல ராய்அமரர் நின்றுதொழுது ஏத்தஅருள் செய்து
நஞ்சுமிட றுண்டுகரி தாயஎளி தாகியொரு நம்பன்
மஞ்சுறநி மிர்ந்துஉமை நடுங்க அகலத்தொடு அளாவி
அஞ்சமத வேழஉரியான்உறைவது அவள் இவள்நல் லூரே. 6

சவடரவம் மொந்தைகுழல் யாழ்முழவி னோடும்இசை செய்யப்
பீடரவம் ஆகுபடர் அம்புசெய்து பேரிடப மோடும்
காடரவம் ஆகுகனல் கொண்டிரவில் நின்றுநட மாடி
ஆடரவம் ஆர்த்தபெரு மான்உறைவது அவள் இவள்நல்
லூரே. 7

ஒருவரையும் மேல்வலிகொ டேன்என எழுந்தவிறலோன்இப்
பெருவரையின் மேலொர்பெரு மானும்உளனோஎனவெ குண்ட
கருவரையும் ஆழ்கடலும் அன்னதிறல் கைகக உடையோனை
அருவரையி ஊன்றியடர்த் தான்உறைவது அவள்
இவள்நல் லூரே. 8

பொறிவரிய நாகமுயர் பொங்கணை அணைந்தபுக ழோனும்
வெறிவரிய வண்டறைய விண்டமலர் மேல்விழுமி யோனும்
செறிவரிய தோற்றமொடு ஆற்றல்மிக நின்றுசிறி தேயும்
அறிவரியன்ஆயபெரு மானுறைவது அவள் இவள் நல்
லூரே. 9

கழியருகு பள்ளியிட மாகவரு மீன்கள்கவர் வாரும்
வழியருகு சாரவெயில் நின்றடிசில் உள்கிவரு வாரும்
பழியருகி னார்ஒழிக பான்மையொடு நின்றதொழு தேத்தும்
அழியருவி தோய்ந்தபெரு மான்உறைவது அவள்
இவள்நல் லூரே 10

ஆனமொழி யானதிற லோர்பரவும் அவள்இவள்நல்
லூர்மேல்
போனமொழி நன்மொழிகள் ஆயபுகழ் தோணிபுர வூரன்
ஞானமொழி மாலைநல நாடுபுகழ் ஞானசம் பந்தன்
தேனமொழி மாலைப்புகழ் வார்துயர்கள் தீயதுஇலர் தாமே 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 10. பிரிந்த கணவன் மனைவி ஒன்று சேருவதற்கும், கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு வாராமலிருக்க உதவும் பதிகம்

குடவாசல் – நன்னிலம் பேருந்துச் சாலையில் உள்ளது திருவாஞ்சியம் (ஸ்ரீ வாஞ்சியம்) எனும் சிவத்தலம் காசிக்குச் சமமான தலங்கள் ஆறினுள் இத்தலமும் ஒன்றாகும். மூவராலும் பாடல் பெற்றுள்ளது. எமனும் இத்தலத்து இறைவரை வழிபட்டுப் புண்ணியங்கள் பல பெற்றுள்ளான். பிரிந்து சென்ற திருமகளை அடைய திருமால் இத்தலத்து இறைவரை – வாஞ்சி நாதேசுவரரை வழிபட்டார். ஆதலால் திருவாஞ்சியம் (வாஞ்சித்து – விரும்பி) எனப்படுகிறது. சுந்தரர் அருளிய இத்தலத்துப் பதிகத்தைப் பாராயணம் செய்தால், பிரிந்தவர் கூடுவர், கூடியிருப்பாரிடையே வேறுபாடு வாராது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருவாஞ்சியம்

பொருவனார்புரி நூலர் புணர்முலை உமையவளோடு
மருவ னார்மரு வார்பால் வருவதும் இல்லைநம் அடிகள்
திருவ னார்பணிந்து ஏத்தும் திகழ்திரு வாஞ்சியத்து
உறையும்
ஒருவ னார்அடி யாரை ஊழ்வினை நலியஒட் டாரே. 1

தொறுவில் ஆன்இள ஏறு துண்ணென இடிகுரல் வெருவிச்
செறுவில் வாளைகள் ஓடச் செங்கயல் பங்கயத்து ஒதுங்கக்
கறுவி லாமனத் தார்கள் காண்தகு வாஞ்சியத்து அடிகள்
மறுவி லாதவெண் ணீறு பூசுதல் மன்னும்ஒன் றுடைத்தே. 2

தூர்த்தர் மூவெயில் எய்து சுடுநுனைப் பகழியது ஒன்றால்
பார்த்த னார்திரள் தோள்மேல் பல்நுனைப் பகழிகள்
பாய்ச்சித்
தீர்த்த மாமலர்ப் பொய்கைத் திகழ்திரு வாஞ்சியத்து அடிகள்
சாத்து மாமணிக் கச்சுஅங்கு ஒருதலை பலதலை உடைத்தே. 3

சள்ளை வெள்ளையங் குருகு தானது வாம்எனக் கருதி
வள்ளை வெண்மலர் அஞ்சி மறுகிஓர் வாளையின் வாயில்
துள்ளு தெள்ளுநீர்ப் பொய்கைத் துறைமல்கு வாஞ்சியத்து
அடிகள்
வெள்ளை நுண்பொடிப் பூசும் விகிர்தம்ஒன்று ஒழிகிலர்
தாமே. 4

மைகொள் கண்டர்எண் தோளர் மலைமகள் உடன்உறை
வாழ்க்கைக்
கொய்த கூவிள மாலை குலவிய சடைமுடிக் குழகர்
கைதை நெய்தல்அம் கழனி கமழ்புகழ் வாஞ்சியத்து அடிகள்
பைதல் வெண்பிறை யோடு பாம்புஉடன் வைப்பது பரிசே. 5

கரந்தை கூவிள மாலை கடிமலர்க் கொன்றையும் சூடிப்
பரந்த பாரிடம் சூழ வருவர்நம் பரமர்தம் பரிசால்
திருந்து மாடங்கள் நீடு திகழ்திரு வாஞ்சியத்து உறையும்
மருந்த னார் அடி யாரை வல்வினை நலியஒட் டாரே. 6

அருவி பாய்தரு கழனி அலர்தரு குவளையங் கண்ணார்
குருவி யாய்கிளி சேர்ப்பக் குருகினம் இரிதரு கிடங்கில்
பருவ ரால்குதி கொள்ளும் பைம்பொழில் வாஞ்சியத்து
உறையும்
இருவரால் அறிய ஒண்ணா இறைவனது அறைகழல்
சரணே. 7

களங்கள் ஆர்தரு கழனி அளிதரக் களிதரு வண்டு
உளங்கள் ஆர்கலிப் பாடல் உம்பரில் ஒலித்திடுங் காட்சி
குளங்கள் ஆல்நிழல் கீழ்நல் குயில்பயில் வாஞ்சியத்து
அடிகள்
விளங்கு தாமரைப் பாதம் நினைப்பவர் வினைநலி
விலரே. 8

வாழை இன்கனி தானும் மதுவிம்மு வருக்கையின்
சுளையும்
கூழை வானரம் தம்மில் கூறிது சிறிதெனக் குழறித்
தாழை வாழையந் தண்டால் செருச்செய்து தருக்குவாஞ்
சியத்துள்
ஏழை பாகனை அல்லால் இறையெனக் கருதுதல் இலமே. 9

செந்நெல் அங்குஅலம் கழனித் திகழ்திரு வாஞ்சியத்து
உறையும்
மின் அலங்கல்அம் சடைஎம் இறைவனது அறைகழல்
பரவும்
பொன் அலங்கல் நல்மாடப் பொழிலணி நாவல்ஆரூரன்
பன் அலங்கல்நல் மாலை பாடுமின் பத்தர் உளீரே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 11. மழலைச் செல்வம் பெற வேண்டுவோர் படிக்க வேண்டிய பதிகம்

திருவண்ணாமலை தலத்தைப்பற்றி யாவரும் அறிந்திருப்பர். அத்தலத்தை அரசாண்ட வள்ளால மகாராசனுக்கு அண்ணாமலை அண்ணலார்தான் குலதெய்வம்.

மகாராசனுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. பலகாலும் அண்ணாமலையாரை வணங்கி வந்தார் அவர். அண்ணாமலையாரே அவருக்கு மகனாக வந்தார் என்பது வரலாறு கூறும் உண்மை.

இத்தலத்துப்பதிகங்கள் இரண்டினை இங்கே அளித்துள்ளோம். திருமணமாகி 12 வருடங்களாகியும் குழந்தைகள் பிறக்காத பலர் இப்பதிகங்களைப் பாராயணம் செய்து, குழந்தைச் செல்வம் பெற்றுள்ளார்கள். உறுதியுடன் பாராயணம் செய்து நலம் பெறலாம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்
திருவண்ணாமலை

உண்ணாமுலைஉமையாளொடும் உடன் ஆகிய ஒருவன்
பெண் ஆகிய பெருமான் மலை திரு மா மணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள் மழலைம் முழவுஅதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம்
அறுமே. 1

தேமாங்கனி கடுவன் கொள விடு கொம்பொடு தீண்டித்
தூ மா மழை துறுவல்மிசை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை அணையும் பொழில் அண்ணாமலை
அண்ணல்
பூ மாங் கழல் புனை சேவடி நினைவார் வினை இலரே. 2

பீலிம் மயில் பெடையோடு உறை பொழில் சூழ் கழை முத்தம்
சூலிம் மணி தரைமேல் நிறை சொரியும் விரிசாரல்
ஆலிம் மழை தவழும் பொழில் அண்ணாமலை அண்ணல்
காலன் வலி தொலை சேவடி தொழுவாரன புகழே. 3

உதிரும் மயிர் இடு வெண்தலை கலனா உலகுஎல்லாம்
எதிரும் பலி உணலாகவும் எருது ஏறுவதுஅல்லால்
முதிரும் சடை இளவெண்பிறை முடிமேல் கொள அடிமேல்
அதிரும் கழல் அடிகட்கு இடம் அண்ணாமலை அதுவே. 4

மரவம் சிலை தரளம் மிகு மணி உந்து வெள்அருவி
அரவம் செய முரவம் படும் அண்ணாமலை அண்ணல்
உரவம் சடை உலவும் புனல் உடன்ஆவதும் ஓரார்
குரவம் கமழ் நறுமென்குழல் உமை புல்குதல் குணமே. 5

பெருகும் புனல் அண்ணாமலை பிறைசேர் கடல் நஞ்சைப்
பருகும்தனை துணிவார் பொடி அணிவார்அது பருகிக்
கருகும் மிடறு உடையார் கமழ் சடையார் கழல் பரவி
உருகும் மனம் உடையார்தமக்கு உறுநோய்அடை யாவே. 6

கரி காலன குடர் கொள்வன கழுகாடிய காட்டில்
நரி ஆடிய நகுவெண்தலை உதையுண்டவை உருள
எரிஆடிய இறைவர்க்கு இடம் இனவண்டு இசை முரல
அரிஆடிய கண்ணாளொடும் அண்ணாமலை அதுவே. 7

ஒளிறூ புலிஅதள் ஆடையன் உமை அஞ்சுதல்பொருட்டால்
பிளிறூ குரல் மதவாரணம் வதனம் பிடித்து உரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன் இராவணனை
அளறூபட அடர்த்தான் இடம் அண்ணாமலை அதுவே. 8

விளவு ஆர் கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர் தாமரைமலர்மேல் உறை கேடுஇல் புகழோனும்
அளவா வணம் அழல் ஆகிய அண்ணாமலை அண்ணல்
தளராமுலை முறுவல் உமை தலைவன் அடி சரணே. 9

வேர்வந்துஉற மாசு ஊர்தர வெயில் நின்று உழல்வாரும்
மார்பம் புதை மலி சீவரம் மறையா வருவாரும்
ஆரம்பர்தம் உரைகொள்ளன்மின் அண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப்படையான் நல்ல கழல் சேர்வது குணமே. 10

வெம்பு உந்திய கதிரோன் ஒளி விலகும் விரிசாரல்
அம்பு உந்தி மூஎயில் எய்தவன் அண்ணாமலை அதனைக்
கொம்பு உந்துவ குயில் ஆலுவ குளிர் காழியுள் ஞான
சம்பந்தன தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 12. மழலைச் செல்வம் பெற வேண்டுவோர் படிக்க வேண்டிய பதிகம்

திருநாவுக்கரசு சுவாமிகள்
திருவண்ணாமலை

ஓதிமா மலர்கள் தூவிஉமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர்மழுப்படையினானே
ஆதியே அமரர்கோவே அணி அணாமலை உளானே
நீதியால் நின்னை அல்லால் நினையுமா நினைவு இலேனே. 1

பண்தனை வென்ற இன்சொல் பாவை ஓர்பங்க நீல
கண்டனே கார்கொள் கொன்றைக் கடவுளே கமலபாதா
அண்டனே அமரர்கோவே அணி அணாமலைஉளானே
தொண்டனேன் உன்னை அல்லால் சொல்லுமா சொல்
இலேனே. 2

உருவமும் உயிரும் ஆகி ஓதிய உலகுக்கு எல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்ற எம்பெருமான் மிக்க
அருவிபொன் சொரியும் அண்ணாமலை உளாய்
அண்டர்கோவே
மருவி நின் பாதம் அல்லால் மற்று ஒரு மாடுஇலேனே. 3

பைம்பொனே பவளக்குன்றே பரமனே பால்வெண்நீற்றாய்
செம்பொனே மலர்செய் பாதா சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும் அணி அணாமலை உளானே
என்பொனே உன்னை அல்லால் ஏதும் நான்
நினைவு இலேனே. 4

பிறைஅணி முடியினானே பிஞ்ஞகா பெண்ஓர் பாகா
மறைவலா இறைவா வண்டு ஆர் கொன்றையாய் வாமதேவா
அறைகழல் அமரர் ஏத்தும் அணி அணாமலை உளானே
இறைவனே உன்னை அல்லால் யாதும் நான் நினைவு
இலேனே. 5

புரிசடை முடியின்மேல் ஓர் பொருபுனல் கங்கை வைத்துக்
கரிஉரி போர்வை ஆகக் கருதிய காலகாலா
அரிகுலம் மலிந்த அண்ணாமலை உளாய் அலரின்மிக்க
வரிமிகு வண்டு பண்செய் பாதம் நான் மறப்புஇலேனே. 6

இரவியும் மதியும் விண்ணும் இருநிலம் புனலும் காற்றும்
உரகம் ஆர் பவனம் எட்டும் திசைஒளி உருவம் ஆனாய்
அரவு உமிழ் மணிகொள் சோதி அணியணாமலை உளானே
பரவும் நின் பாதம்அல்லால் பரம நான் பற்று இலேனே. 7

பார்த்தனுக்கு அன்று நல்கிப் பாசுபதத்தை ஈந்தாய்
நீர்த் ததும்பு லாவு கங்கை நெடுமுடி நிலாவ வைத்தாய்
ஆர்த்து வந்து ஈண்டு கொண்டல் அணியணாமலைம உளானே
தீர்த்தனே நின்றன் பாதத் திறமலால் திறமி லேனே. 8

பாலு நெய் முதலாம் மிக்க பசுவில் ஐந்து ஆடுவானே
மாலு நான்முகனும் கூடிக் காண்கிலா வகையுள் நின்றாய்
ஆலும் நீர் கொண்டல் பூகம் அணியணாமலை உளானே
வால் உடைவிடையாய் உன்தன் மலர்அடி மறப்பிலேனே. 9

இரக்கம் ஒன்றுயாதும் இல்லாக் காலனைக் கடிந்த எம்மான்
உரத்தினால் வரையை ஊக்க ஒருவிரல் நுதியினாலே
அரக்கனை நெரித்த அண்ணாமலை உளாய் அமரர்ஏறே
சிரத்தினால் வணங்கி ஏத்தித் திருவடி மறப்பிலேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 13. கருச்சிதைவு ஏற்படாமலிருக்க உதவும் பதிகம்

கும்பகோணம் – திருவையாற்றுச் சாலையில் 20 கி.மீ. சென்றால் "வடகுரங்காடு துறை" எனும் தலத்தை அடையலாம். "ஆடுதுறை பெருமாள் கோயில்" என்று கேட்டால்தான் சொல்லுவார்கள்.

இறைவர் – தயாநிதீசுவரர், குலைவணங்கீசுவரர், வாலிநாதர்

இறைவி – அழகுச் சடைமுடியம்மை

இத்தலம் திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்றதாகும். கர்ப்பிணிப் பெண்மீது கருணை கொண்ட இத்தலத்து இறைவர், அவளுடைய தாகத்தைத் தீர்க்கக் தென்னங் குலையை வளைத்துக் கொடுத்தார். ஆதலால் குலைவணங்கீசர் எனப்படுகிறார்.

இத்தலத்துப் பதிகத்தைப் பாராயணம் செய்யும் கர்ப்பிணிகளுக்குக் கருச்சிதைவு ஏற்படாது என்பதை உறுதியாக நம்பலாம். தன்னை நம்பியவரின் கருவைக் காக்கும் தயாநிதீசுவரர் அவர்.

திருஞானசம்பந்த சுவாமிகள்

வடகுரங்காடுதுறை

கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடி முல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே விரவியெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடை குரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி யாடிகளார் இடமென விரும்பினாரே. 1

மந்தமா யிழிமதக் களிற்றிள மருப்பொடு பொருப்பின் நல்ல
சந்தமார் அகிலொடு சாதியின் பலங்களுந் தகையமோதி
உந்துமா காவிரி வடகரை யடை குரங்காடு துறை
எந்தையார் இணையடி இமையவர்
தொழுதெழும்இயல்பினாரே. 2

முத்துமா மணியோடு முழைவளர் ஆரமும் முகந்து நுந்தி
எத்துமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
மத்தமா மலரொடு மதிபொதி சடைமுடி அடிகள்தம் மேல்
சித்தமாம் அடியவர் சிவகதி பெறுவது திண்ணமன்றே. 3

கறியுமா மிளகொடு கதலியின் பலங்களும் கலந்து நுந்தி
எறியுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
மறியுலாம் கையினர் மலரடி தொழுதெழ மருவும் உள்ளக்
குறியினார் அவர்மிகக் கூடுவார் நீடுவா னுலகின்ஊடே. 4

கோடிடைச் சொரிந்த தேன்அ தனொடும் கொண்டல்வாய்
விண்டமுன்னீர்
காடுடைப் பீலியும் கடறுடைப் பண்டமும் கலந்துநுந்தி
ஓடுடைக் காவிரி வடகரை அடைகுரங் காடுதுறை
பீடுடைச் சடைமுடி அடிகளார் இடமெனப் பேணினாரே. 5

கோலமா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார் திருத்துமாங்
கனிகள்உந்தி
ஆலமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
நீலமா மணிமிடற்று அடிகளை நினையவல் வினைகள்
வீடே. 6

நீலமா மணிநிறத் தரக்கனை இருபது கரத்தொடு ஒல்க
வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்
ஏலமோடு இலையிலவங்கமே இஞ்சிய மஞ்சள் உந்தி
ஆலியா வருபுனல் வடகரை அடைகுரங் காடுதுறையே. 7

பொரும்திறல் பெருங்கைமா உரித்துஉமை அஞ்சவே
ஒருங்கு நோக்கிப்
பெருந்திறத்த அநங்கனை அநங்கமா விழித்ததும் பெருமை
போலும்
வருந்திறற் காவிரி வடகரை அடைகுரங் காடுதுறை
அருந்திறத்து இருவரை அல்லல்கண்டு ஓங்கிய அடிகளாரே.8

கட்டமண் தேரரும் கடுக்கள்தின் கழுக்களும் கசிவொன்
றில்லாப்
பிட்டர்தம் அறவுரை கொள்ளலும் பெருவரைப் பண்டம்உந்தி
எட்டுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறைச்
சிட்டனார் அடிதொழச் சிவகதி பெறுவது திண்ணமாமே. 9

தாழிளங் காவிரி வடகரை அடைகுரங் காடுதுறைப்
போழிள மதிபொதி புரிதரு சடைமுடிப் புண்ணியனைக்
காழியான் அருமறை ஞானசம் பந்தன கருது பாடல்
கோழையா அழைப்பினும் கூடுவார் நீடுவா னுலகின் ஊடே.10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 14. சுகப்பிரசவம் ஏற்பட உதவும் பதிகம்

திருவாரூர் – திருத்துறைப் பூண்டிச் சாலையில் உள்ளது "சிற்றேமம்" (சிற்றாம்பூ, சித்தாய்மூர்) எனும் சிவத்தலம்.

இத்தலம் திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல்பெற்றதாகும். சிற்றேமத்தில் வாழ்ந்த வணிகர் (செட்டியார்) பொருளீட்டும் பொருட்டு வேறு நாடு சென்றார். அச்சமயம் அவர் மனைவி கருவுற்றிருந்தாள். அப்பெண் சிவத்தொண்டு செய்து வாழ்ந்து வந்தாள்.

கணவன் வருவதற்குக் காலம் கடந்தமையால் வாழ்க்கை நடத்த இவளால் இயலவில்லை. இறைவரிடம் மனம் ஒன்றி வழிபட்டு முறையிட்டாள். நாள்தோறும் ஒரு பொற்காசு வைத்துதவினார் இத்தலத்து இறைவர். ஆதலால் பொன்வைத்தநாதர் எனப் போற்றப்படுகிறார். இறைவி அகிலாண்டேசுவரி.

பிள்ளைப்பேற்றுக்காலம் வந்ததும் இறைவருடைய ஆணைப்படி, இறைவி அகிலாண்டேசுவரியே தாயாக வந்து உதவி செய்தாள்.

இத்தலத்துப் பதிகத்தைக் கருவுற்ற தாய்மார்கள் அன்றாடம் படித்துவந்தால், இறையருளால் பிள்ளைப்பேறு (பிரசவம்) இனிதே, எளிதே நடைபெறும்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருச்சிற்றேமம்

நிறைவெண்திங்கள் வாள்முக மாதர்பாட நீள்சடைக்
குறைவெண்திங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
சிறைவண்டுயாழ்செய் பைம்பொழிற் பழனம்சூழ்
சிற்றேமத்தான்
இறைவன் என்றே உலகெலாம் ஏத்தநின்ற பெருமானே. 1

மாகத்திங்கள் வாள்முக மாதர்பாட வார்சடைப்
பாகத் திங்கள் சூடியோர் ஆடல்மேய பண்டங்கன்
மேகத்தாடு சோலைசூழ் மிடைசிற்றேமம் மேவினான்
ஆகத்துஎர்கொள் ஆமையைப் பூண்டஅண்ணல் அல்லனே. 2

நெடுவெண்திங்கள் வாள்முக மாதர்பாட நீள்சடைக்
கொடுவெண்திங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
படுவெண்டுயாழ் செய்பைம் பொழில் பழனம்சூழ்சிற்றேமத்தான்
கடுவெங் கூற்றைக் காலினாற் காய்ந்த கடவுள் அல்லனே. 3

கதிரார்திங்கள் வாள்முக மாதர்பாடக் கண்ணுதல்
முதிரார்திங்கள் சூடியோர் ஆடல்மேய முக்கணன்
எதிரார்புனல்அம் புன்சடை எழிலாரும் சிற்றேமத்தான்
அதிரார் பைங்கண் ஏறுடை ஆதிமூர்த்தி அல்லனே. 4

வானார்திங்கள் வாள்முகமாதர்பாட வார்சடைக்
கூனார்திங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
தேனார்வண்டு பண்செயும் திருஆரும்சிற் றேமத்தான்
மானார்விழிநன் மாதொடும் மகிழ்ந்த மைந்தன்
அல்லனே. 5

பனிவெண்திங்கள் வாள்முக மாதர்பாடப் பல்சடைக்
குனிவெண்திங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
தனிவெள்விடையன் புள்ளினத் தாமம் சூழ்சிற் றேமத்தான்
முனிவும் மூப்பும் நீக்கிய முக்கண்மூர்த்தி அல்லனே. 6

கிளரும்திங்கள் வாள்முக மாதர்பாடக் கேடிலா
வளரும்திங்கள் சூடியோர் ஆடல்மேய மாதவன்
தளிருங்கொம்பும் மதுவும்ஆர் தாமம்சூழ்சிற் றேமத்தான்
ஒளிரும்வெண் ணூல் மார்பன்என் உள்ளத்துள்ளான் அல்லனே. 7

சூழ்ந்ததிங்கள் வாள்முக மாதர்பாடச் சூழ்சடைப்
போழ்ந்ததிங்கள் சூடியோர் ஆடல்மேய புண்ணியன்
தாழ்ந்தவயல்சிற் றேமத்தான் தடவரையைத்தன் தாளினால்
ஆழ்ந்த அரக்கன் ஒல்கஅன்று அடர்த்தஅண்ணல் அல்லனே. 8

தனிவெண்திங்கள் வாள்முக மாதர்பாடத் தாழ்சடைத்
துணிவெண்திங்கள் சூடியோர் ஆடல்மேய தொன்மையான்
அணிவண்ணச்சிற் றேமத்தான் அலர்மேல் அந்தணாளனும்
மணிவண்ணனும்முன் காண்கிலா மழுவாள்செல்வன் அல்லனே. 9

வெள்ளைத்திங்கள் வாள்முக மாதர்பாட வீழ்சடைப்
பிள்ளைத்திங்கள் சூடியோர் ஆடல்மேய பிஞ்ஞகன்
உள்ளத்தார்சிற் றேமத்தான் உருவார்புத்தர் ஒப்பிலாக்
கள்ளத்தாரைத் தானாக்கியுட் கரந்துவைத்தான் அல்லனே.10

**கல்லில் ஓதம்மல்குதண் கானல்சூழ்ந்த காழியான்**
**நல்லவாய இன்தமிழ் நவிலும்ஞான சம்பந்தன்**
**செல்வ னூர்சிற் றேமத்தைப் பாடல்சீரார் நாவினால்**
**வல்லராகி வாழ்த்துவார் அல்லல்இன்றி வாழ்வரே. 11**

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 15. நல்லறிவுடைய பிள்ளை பிறப்பதற்குரிய பதிகம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருஅவதாரம் செய்த தலம் சீர்காழியாகும். திருஞானசம்பந்தருடைய பெற்றோர் சிவபெருமானாரிடம் நல்ல அறிவுள்ள ஒரு பிள்ளை வேண்டும் என்று வேண்டினார்கள். அந்த வேண்டுதலுக்கு இரங்கிய இறைவர், திருஞானசம்பந்தரை அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறக்கச் செய்தார் என்பது பெரியபுராணம் கூறும் உண்மை. இத்தலத்துப் பதிகத்தைக் கருவுற்றிருக்கும் தாய்மார்கள் அன்றாடம் பாராயணம் செய்து வந்தால் நல்ல அறிவுடைய பிள்ளை வாய்க்கும்.

**திருஞானசம்பந்தசுவாமிகள்**
**திருப்புறவம் (சீர்காழி)**

நறவம் நிறை வண்டு அறை தார்க்கொன்றை
நயந்து நயனத்தால்
சுறவம் செறி வண் கொடியோன்
உடலம் பொடியா விழிச்செய்தான்
புறவம் உறை வண்பதியா மதியார்
புரம்மூன்று எரிசெய்த
இறைவன் அறவன் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 1

உரவன்புலியின்உரி தோல்ஆடை
உடைமேல் படநாகம்
விரவி விரி பூங்கச்சா அசைத்த
விகிர்தன் உகிர்தன்னால்
பொரு வெங்களிறு பிளிற உரித்துப்
புறவம் பதி ஆக
இரவும் பகலும் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 2

பந்தம் உடைய பூதம் பாடப்
பாதம் சிலம்பு ஆர்க்கக்
கந்தம் மல்கு குழலி காணக்
கரிகாட்டு எரி ஆடி
அம் தண்கடல் சூழ்ந்து அழகு ஆர் புறவம்
பதியா அமர்வு எய்தி
எம்தம் பெருமான் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 3

நினைவார் நினைய இனியான் பனி ஆர்
மலர் தூய் நித்தலும்
கனை ஆர் விடை ஒன்று உடையான் கங்கைத்
திங்கள் கமழ்கொன்றை
புனை வார்சடையின் முடியான் கடல் சூழ்
புறவம் பதி ஆக
எனை ஆள் உடையான் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 4

செங்கண் அரவும் நகுவெண்தலையும்
முகிழ்வெண் திங்களும்
தங்கு சடையன் விடையன் உடையன்
சரி கோவண ஆடை
பொங்கு திரை வண்கடல் சூழ்ந்து அழகு ஆர்
புறவம் பதி ஆக
எங்கும் பரவி இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 5

பின்னு சடைகள் தாழக் கேழல்
எயிறு பிறழப் போய்
அன்னநடையார் மனைகள்தோறும்
அழகு ஆர் பலி தேர்ந்து
புன்னை மடலின் பொழில் சூழ்ந்து
அழகு ஆர் புறவம் பதியாக
என்னை உடையான் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 6

உண்ணற்கு அரிய நஞ்சை உண்டு
ஒரு தோழம்தேவர்
விண்ணிற் பொலிய அமுதம் அளித்த
விடைசேர் கொடி அண்ணல்
பண்ணில் சிறை வண்டு அறை பூஞ்சோலைப்
புறவம் பதியாக
எண்ணில் சிறந்த இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 7

விண்தான் அதிர வியன் ஆர் கயிலை
வேரோடு எடுத்தான் தன்
திண்தோள் உடலும் முடியும் நெரியச்
சிறிதே ஊன்றிய
புண்தான் ஒழிய அருள்செய் பெருமான்
புறவம் பதி ஆக
எண்தோள் உடையான் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 8

நெடியான் நீள் தாமரைமேல் அயனும்
நேடிக் காண்கில்லாப்
படி ஆம் மேனி உடையான் பவளவரை
போல் திரு மார்பில்
பொடி ஆர் கோலம் உடையான் கடல் சூழ்
புறவம் பதி ஆக
இடி ஆர் முழவு ஆர் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 9

ஆலும் மயிலின் பீலி அமணர்
அறிவு இல் சிறுதேரர்
கோலும் மொழிகள் ஒழியக் குழுவும்
தழலும் எழில்வானும்
போலும் வடிவும் உடையான் கடல்சூழ்
புறவம் பதி ஆக
ஏலும் வகையால் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே. 10

பொன் ஆர் மாடம் நீடும் செல்வப்
புறவம் பதி ஆக
மின் ஆர் இடையாள் உமையாளோடும்
இருந்த விமலனைத்
தன் ஆர்வம் செய் தமிழின் விரகன்
உரைத்த தமிழ் மாலை
பல் நாள் பாடி ஆடப் பிரியர்
பரலோகம்தானே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# நல்லறிவுடைய பிள்ளை பிறப்பதற்குரிய பதிகம் - 2

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருப்புகலி (சீர்காழி)

விதிஆய் விளைவுஆய் விளைவின் பயன்ஆகிக்
கொதியா வரு கூற்றை உதைத்தவர் சேரும்
பதிஆவது பங்கயம் நின்று அலரத் தேன்
பொதி ஆர் பொழில் சூழ் புகலிந் நகர்தானே. 1

ஒன்னார் புரம்மூன்றும் எரித்த ஒருவன்
மின் ஆர் இடையாளொடும் கூடிய வேடம்
தன்னால் உறைவு ஆவது தண்கடல் சூழ்ந்த
பொன் ஆர் வயல் பூம் புகலிந் நகர்தானே. 2

வலியின் மதி செஞ்சடை வைத்த மணாளன்
புலியின் அதள் கொண்டு அரை ஆர்த்த புனிதன்
மலியும் பதி மா மறையோர் நிறைந்து ஈண்டிப்
பொலியும் புனல் பூம் புகலிந்நகர்தானே. 3

கயல் ஆர் தடங்கண்ணியொடும் எருது ஏறி
அயலார் கடையில் பலி கொண்ட அழகன்
இயலால் உறையும் இடம் எண்திசையோர்க்கும்
புயல் ஆர் கடல் பூம் புகலிந்நகர்தானே. 4

காது ஆர் கன பொன்குழை தோடுஅது இலங்ககத்
தாது ஆர் மலர் தண்சடை ஏற முடித்து
நாதான் உறையும் இடம் ஆவது நாளும்
போது ஆர் பொழில் பூம் புகலிந்நகர்தானே. 5

வலம்ஆர் படை மான் மழு ஏந்திய மைந்தன்
கலம் ஆர் கடல் நஞ்சு அமுதுஉண்ட கருத்தன்
குலம் ஆர் பதி கொன்றைகள் பொன் சொரியத் தேன்
புலம் ஆர் வயல் பூம் புகலிந்நகர்தானே. 6

கறுத்தான் கனலால் மதில்மூன்றையும் வேவச்
செறுத்தான் திகழும் கடல்நஞ்சு அமுதுஆக
அறுத்தான் அயன்தன் சிரம் ஐந்திலும் ஒன்றைப்
பொறுத்தான் இடம் பூம் புகலிந்நகர்தானே. 7

தொழிலால் மிகு தொண்டர்கள் தோத்திரம் சொல்ல
எழில் ஆர் வரையால் அன்று அரக்கனைச் செற்ற
கழலான் உறையும் இடம் கண்டல்கள் மிண்டிப்
பொழிலால் மலி பூம் புகலிந்நகர்தானே. 8

மாண்டார் சுடலைப் பொடி பூசி மயானத்து
ஈண்டா நடம்ஆடிய ஏந்தல் தன் மேனி
நீண்டான் இருவர்க்கு எரிஆய் அரவுஆரம்
பூண்டான் நகர் பூம் புகலிந்நகர்தானே. 9

உடையார் துகில் போர்த்து உழல்வார் சமண்கையர்
அடையாதன சொல்லுவர் ஆதர்கள் ஓத்தைக்
கிடையாதவன்தன் நகர் நன் மலி பூகம்
புடை ஆர்தரு பூம் புகலிந்நகர்தானே. 10

இரைக்கும் புனல் செஞ்சடை வைத்த எம்மான்தன்
புரைக்கும் பொழில் பூம் புகலிந்நகர்தன்மேல்
உரைக்கும் தமிழ் ஞானசம்பந்தன் ஒண் மாலை
வரைக்கும் தொழில் வல்லவர் நல்லவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 16. கல்வியில் சிறந்து விளங்குவதற்குரிய பதிகம்

(1) திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இரண்டு பெருமக்களாலும் பாடல் பெற்றதலம் ஓமாம்புலியூர். சிதம்பரத்திலிருந்தும் போகலாம், காட்டுமன்னார் குடியிலிருந்தும் போகலாம்.

இத்தலத்து இறைவர் தென்முகக்கடவுளாக (தட்சணா மூர்த்தியாக) எழுந்தருளி, உமையம்மைக்கு மந்திர உபதேசம் செய்தருளினார்.

(2) கும்பகோணம் திருவையாற்றுச் சாலையில் உள்ளது. "இன்னம்பூர்" எனும் சிவத்தலம். இத்தலத்து இறைவர் அகத்தியருக்கு இலக்கண உபதேசம் செய்தருளினார். ஆதலால் எழுத்தறிநாதர் என்று போற்றப்படுகிறார்.

சம்பந்தர், நாவரசர் ஆகிய இருவராலும் பாடல் பெற்றுள்ளது. இந்த இரண்டு தலத்திற்குரிய சம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய பதிகங்கள் இங்கே அளிக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பாராயணம் செய்யும் பிள்ளைகளுக்குச் சிவபெருமானாருடைய திருவருள் முன்னின்று கல்வியில் முதன்மை பெறச் செய்யும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

ஓமாம்புலியூர்

ஆர் ஆரும் மூஇலை வேல் அங்கையானை
அலை கடல் நஞ்சு அயின்றானை அமரர் ஏத்தும்
ஏர் ஆரும் மதி பொதியும் சடையினானை
எழுபிறப்பும் எனை ஆளா உடையான் தன்னை
ஊர் ஆரும் பட நாகம் ஆட்டுவானை
உயர்புகழ் சேர்தரும் ஓமாம்புலியூர் மன்னும்
சீர் ஆரும் வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே. 1

ஆதியான் அரி அயன் என்று அறிய ஒண்ணா
அமரர் தொழும் கழலானை அமலன் தன்னைச்
சோதி மதி கலை தொலையத் தக்கன் எச்சன் சுடர் இரவி
அயில் எயிறு தொலைவித்தானை
ஓதி மிக அந்தணர்கள் எரி மூன்று ஓம்பும்
உயர்புகழ் ஆர் தரும் ஓமாம்புலியூர் மன்னும்
தீது இல் திரு வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே. 2

வரும் மிக்க மதயானை உரித்தான் தன்னை
வானவர் கோன்தோள் அனைத்தும் மடிவித்தானைத்
தரும் மிக்க குழல் உமையாள் பாகன் தன்னைச்
சங்கரன் எம்பெருமானைத் தரணி தன்மேல்
உரு மிக்க மணி மாடம் நிலாவு வீதி
உத்தமர் வாழ்தரும் ஓமாம்புலியூர் மன்னும்
திரு மிக்க வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே. 3

அன்றினவர் புரம் மூன்றும் பொடி ஆய் வேவ
அழல் விழித்த கண்ணானை அமரர்கோனை
வென்றி மிகு காலன் உயிர் பொன்றி வீழ
விளங்கு திருவடி எடுத்த விகிர்தன் தன்னை
ஒன்றிய சீர் இரு பிறப்பர் முத்தீ ஓம்பும்
உயர்புகழ் நால்மறை, ஓமாம்புலியூர் நாளும்
தென்றல் மலி வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே. 4

பாங்கு உடைய எழில் அங்கி அருச்சனை முன் விரும்பப்
பரிந்து அவனுக்கு அருள் செய்த பரமன் தன்னைப்
பாங்கு இலா நரகு அதனின் தொண்டர் ஆனார்
பாராத வகை பண்ண வல்லான் தன்னை
ஓங்கு மதில் புடை தழுவும் எழில் ஓமாம்புலியூர்
உயர்புகழ் அந்தணர் ஏத்த, உலகர்க்கு என்றும்
தீங்கு இல் திரு வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே. 5

அருந்தவத்தோர் தொழுது ஏத்தும் அம்மான் தன்னை
ஆதார இன்னமுதை அடியார் தம்மேல்
வரும் துயரம் தவிர்ப்பானை உமையாள் நங்கை
மணவாள நம்பியை என் மருந்து தன்னைப்
பொருந்து புனல் தழுவு வயல் நிலவு துங்கப்
பொழில் கெழுவு தரும் ஓமாம்புலியூர் நாளும்
திருந்து திரு வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே. 6

மலையானை வரும் மலை அன்று உரிசெய்தானை
மறையானை மறையாலும் அறிய ஒண்ணாக்
கலையானைக் கலை ஆரும் கையினானைக்
கடிவானைக் அடியார்கள் துயரம் எல்லாம்
உலையாத அந்தணர்கள் வாழும் ஓமாம்
புலியூர் எம் உத்தமனைப்புரம் மூன்று எய்த
சிலையானை வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே. 7

சேர்ந்து ஓடும் மணிக் கங்கை சூடினானைச்
செழுமதியும் பட அரவும் உடன் வைத்தானைச்
சார்ந்தோர்கட்கு இனியானைத் தன் ஒப்பு இல்லாத்
தழல் உருவைத் தலைமகனைத் தகை நால்வேதம்
ஓர்ந்து ஓதிப் பயில்வார் வாழ்தரும் ஓமாம்புலியூர்
உள்ளானைக் கள்ளாத அடியார் நெஞ்சில்
சேர்ந்தானை வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே. 8

வார் கெழுவு முலை உமையாள் வெருவ அன்று
மலை எடுத்த வாள் அரக்கன் தோளும் தாளும்
ஏர்கெழுவு சிரம் பத்தும் இறுத்து மீண்டே
இன்இசை கேட்டு இருந்தானை இமையோர் கோனைப்
பார்கெழுவு புகழ் மறையோர் பயிலும் மாடப்
பைம்பொழில் சேர்தரும் ஓமாம்புலியூர் மன்னும்
சீர் கெழுவு வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே. 9

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 17. கல்வியிற்சிறந்து விளங்குவதற்குரிய பதிகம்

திருஞானசம்பந்தர்

திருஇன்னம்பர்

எண்திசைக் கும்புகழ் இன்னம்பர் மேவிய
வண்டிசைக் கும்சடை யிரே
வண்டிசைக் கும்சடை யீர்உமை வாழ்த்துவார்
தொண்டிசைக் கும்தொழி லோரே. 1

யாழ்நரம் பின்இசை இன்னம்பர் மேவிய
தாழ்தரு சடைமுடி இரே
தாழ்தரு சடைமுடி யீர்உமைச் சார்பவர்
ஆழ்துயர் அருவினை இலரே. 2

இளமதி நுதலியொடு இன்னம்பர் மேவிய
வளமதி வளர்சடை யீரே
வளமதி வளர்சடை யீர்உமை வாத்ழ்துவார்
உளமதி மிகஉடை யோரே. 3

இடிகுரல் இசைமுரல் இன்னம்பர் மேவிய
கடிகமழ் சடைமுடி யீரே
கடிகமழ் சடைமுடி யீர்உம கழல்தொழும்
அடியவர் அருவினை இலரே 4

இமையவர் தொழுதெழும் இன்னம்பர் மேவிய
உமையொரு கூறுடை யீரே
உமையொரு கூறுடை யீர்உமை உள்குவார்
அமைகிலர் ஆகிலர் அன்பே. 5

எண்ணரும் புகழுடை இன்னம்பர் மேவிய
தண்ணரும் சடைமுடி யீரே
தண்ணரும் சடைமுடி யீர்உமைச் சார்பவர்
விண்ணவர் அடைவுடை யோரே 6

எழில்திக ழும்பொழில் இன்னம்பர் மேவிய
நிழல்திகழ் மேனியி னீரே
நிழல்திகழ் மேனியி னீர்உமை நினைபவர்
குழறிய கொடுவினை இலரே 7

ஏத்தரும் புகழணி இன்னம்பர் மேவிய
தூர்த்தனைத் தொலைவுசெய் தீரே
தூர்த்தனைத் தொலைவுசெய் தீர்உமைத் தொழுபவர்
சுவர்த்தநற் குணமுடை யோரே. 8

இயல்உளோர் தொழுதெழும் இன்னம்பர் மேவிய
அயனும்மால் அறிவரி யீரே
அயனும் மால்அறி வரியீர்உமது அடிதொழும்
இயல்உளார் மறுபிறப்பு இலரே 9

ஏரதர் பொழிலணி இன்னம்பர் மேவிய
தேரமண் சிதைவுசெய் தீரே
தேரமண் சிதைவுசெய் தீர்உமைச் சேர்பவர்
ஆர்துயர் அருவினை யிலரே 10

ஏடமர் பொழிலணி இன்னம்பர் ஈசனை
நாடமர் ஞானசம் பந்தன்
நாடமர் ஞானசம் பந்தன் நற்றமிழ்
பாடவல் லார்பழி இலரே 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 18. குருவருளைப் பெற உதவும் பதிகம்

மாணிக்கவாசகசுவாமிகள் திருக்கழுக்குன்றத்தினை அடைந்து, அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானாரை வணங்கி, "திருப்பெருந் துறையில் குருந்தமர நிழலில் குருவாக எழுந்தருளியிருந்து மெய்ப்பொருளை உபதேசித்தருளிய ஆசிரியத் திருக்கோலத்தை (குருவடிவை) அடியேற்குக் காட்டியருள வேண்டும்" என வேண்டிநின்றார். மணிவாசகப் பெருமான் தமக்கு அருள்சுரந்த குருவின் திருக்கோலத்தைக் கண்ட நிலையில் பாடிய பதிகமாதலின் இதற்குப் "குருதரிசனம்" என முன்னோர் கருத்துரைத்தனர். இங்கே அளிக்கப்பட்டுள்ள திருக்கழுக்குன்றப் பதிகத்தை ஓதி குருவருளைப் பெற்று நலம் பெறலாம்.

மாணிக்கவாசக சுவாமிகள்
திருக்கழுக்குன்றப்பதிகம்

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெருமான்
உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கி லாததோர் இன்ப மேவரும்
துன்ப மேதுடைத்(து) எம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளையாமல்
என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 1

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்கனேன்உனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோகனேசிறு
நாயி னுங்கடை யாயஎம்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 2

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி
மலங்கெடுத்தபெருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவ(து) அ றிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவ டிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கி னேன் கலங்காமலேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 3

பூண் ஒணாதது ஓர் அன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாண் ஒணாததொர் நாணம் எய்தி
நடுக்க டலுள் அழுந்திநான்
பேண் ஒணாதபெருந்து றைப்பெரும்
தோணிபற்றி உகைத்தலும்
காண் ஒணாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 4

கோல மேனிவராகமேகுண
மாம்பெருந்துறைக் கொண்டலே
சீலம் ஏதும்அறிந்திலாத என்
சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரியாக நான் உனை
நச்சி நச்சிட வந்திடும்
கால மேஉனை ஓத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 5

பேதம் இல்லதொர் கற்பளித்த
பெருந்து றைப்பெரு வெள்ளமே
ஏதமேபலபேச நீஎனை
ஏதிலார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல்லாமை அற்ற
தனிச் சரண்சர ணாம்எனக்
காத லால்உனை ஓத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 6

இயக்கி மார்அறு பத்து நால்வரை
எண்குணம் செய்த ஈசனே
மயக்கம் ஆயதோர் மும்ம லப்பழ
வல்வி னைக்குள் அழுந்தவும்
துயக்(கு) அறுத்துஎனை ஆண்டு கொண்டுநின்
தூய்ம லர்க்கழல் தந்(து) எனைக்
கயக்க வைத்(து)அடி யார்முனேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 7

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

## 19. மனக்கவலை நீங்கி அமைதி பெறுவதற்கு உயர் இரத்த அழுத்தம் (High B.P.) குறைய உதவும் பதிகம்

திருவாரூர் – திருத்துறைப்பூண்டிச் சாலையில் கீழ்வேளூர் வழியே வந்தால் 'வலிவலம்' எனும் சிவத்தலத்தை அடையலாம். இத்தலத்து இறைவருடைய பெயர் மனத்துணைநாதர்.

இத்தலம் மூவராலும் பாடல் பெற்றுள்ளது. இங்கு திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய இத்தலத்துத் தாண்டகம் கொடுக்கப்பட்டுள்ளது. "வலிவலத்தான் என்மனத்துளானே" என்று ஒவ்வொரு பாடலின் முடிவிலும் வருவதைக் காணலாம்.

இறைவர் நம்மனத்தினுள் எழுந்தருளியிருக்கும் பொழுது கவலைகள் யாவும் பறந்து விடும். பேரமைதி நிலவும். வாய்விட்டுப் பாடி நலம் பெறலாம். பலரும் பயன் பெற்றுள்ளார்கள். உயர் இரத்த அழுத்தம் குறையும்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

வலிவலம்

நல்லான்காண் நான்மறைகள் ஆயி னான்காண்
நம்பன்காண் நணுகாதார் புரம்மூன்று எய்த
வில்லான்காண் விண்ணவர்க்கும் மேலா னான்காண்
மெல்லியலாள் பாகன்காண் வேத வேள்விச்
சொல்லான்காண் சுடர்மூன்றும்ஆயி னான்காண்
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான் ஈய
வல்லான்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண் அவன்என் மனத்து ளானே. 1

ஊனவன்காண் உடல்தனக்கோர் உயிர் ஆனான்காண்
உள்ளவன் காண் இல்லவன்காண் உமையாட் கென்றுந்
தேனவன்காண் திருஅவன்காண் திசைஆ னான்காண்
தீர்த்தன் காண் பார்த்தன்தன் பணியைக் கண்ட
கானவன்காண் கடலவன்காண் மலையா னான்காண்
களியானை ஈருரிவை கதறப் போர்த்த
வானவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண் அவன்என் மனத்து ளானே. 2

ஏயவன்காண் எல்லார்க்கும் இயல்பானான்காண்
இன்பன்காண் துன்பங்கள் இல்லாதான்காண்
தாயவன்காண் உலகுக்குஓர் தன்ஒப் பில்லாத்
தத்துவன்காண் உத்தமன்காண் தானேயெங்கும்
ஆயவன்காண் அண்டத்துக்கு அப்பாலான்காண்
அகங்குழைந்து மெய்யரும்பி அழுவார் தங்கள்
வாயவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண்அவன்என் மனத்து ளானே. 3

உய்த்தவன்காண் உடல்தனக்கோர் உயிர்ஆனான்காண்
ஓங்காரத்து ஒருவன்காண் உலகுக் கெல்லாம்
வித்தவன்காண் விண்பொழியும் மழைஆனான்காண்
விளைவுஅவன் காண் விரும்பாதார் நெஞ்சத்துஎன்றும்
பொய்த்தவன்காண் பொழிலேழும் தாங்கி னான்காண்
புனலோடு வளர்மதியும் பாம்பும் சென்னி
வைத்தவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண்அவன்என் மனத்து ளானே. 4

கூற்றவன்காண் குணம்அவன்காண் குறியானான்காண்
குன்றங்கள் அனைத்தும்காண் கோல மாய
நீற்றவன்காண் நிழலவன்காண் நெருப்பா னான்காண்
நிமிர்புன் சடைமுடிமேல் நீரார் கங்கை
ஏற்றவன்காண் ஏழுலகும்ஆயி னான்காண்
இமைப்பளவிற் காமனைமுன் பொடியாய் வீழ
மாற்றவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண்அவன்என் மனத்து ளானே. 5

நிலையவன்காண் தோற்றவன் காண் நிறைஆனான்காண்
நீரவன் காண் பாரவன்காண் ஊர்மூன்று எய்த
சிலையவன்காண் செய்யவாய்க் கரிய கூந்தல்
தேன்மொழியை ஒருபாகம் சேர்த்தி னான்காண்
கலையவன்காண் காற்றவன்காண் காலன் வீழக்
கறுத்தவன்காண் கயிலாயம் என்னுந் தெய்வ
மலையவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண்அவன்என் மனத்து ளானே. 6

பெண் அவன்காண் ஆண் அவன்காண் பெரியோர்க்குஎன்றும்
பெரியவன்காண் அரியவன்காண் அயன்ஆனான் காண்
எண் அவன்காண் எழுத்தவன்காண் இன்பக் கேள்வி
இசையவன் காண் இயலவன்காண் எல்லாம்காணும்
கண்அவன்காண் கருத்தவன்காண் கழிந்தோர் செல்லும்
கதியவன் காண் மதியவன்காண் கடலேழ் சூழ்ந்த
மண் அவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண்அவன்என் மனத்து ளானே. 7

முன்னவன்காண் பின்னவன்காண் மூவா மேனி
முதலவன்காண் முடிவுஅவன்காண் மூன்று சோதி
அன்னவன்காண் அடியார்க்கும் அண்டத் தார்க்கும்
அணியவன் காண் சேயவன்காண் அளவுஇல்சோதி
மின்னவன்காண் உருமவன்காண் திருமால் பாகம்
வேண்டினன் காண்ஈண்டு புனற்கங்கைக்குஎன்றும்
மன்னவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண்அவன்என் மனத்து ளானே. 8

நெதிஅவன்காண் யாவர்க்கும் நினைய வொண்ணா
நீதியன்காண் வேதியன்காண் நினைவார்க்கு என்றும்
கதிஅவன்காண் கார்அவன்காண் கனல் ஆனான்காண்
காலங்கள் ஊழியாய்க் கலந்து நின்ற
பதிஅவன்காண் பழம்அவன் காண் இரதம் தான்காண்
பாம்போடு திங்கள் பயில வைத்த
மதிஅவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண்அவன்என் மனத்து ளானே. 9

பங்கயத்தின் மேலானும் பாலகனாய் உலகுஅளந்த
படியானும் பரவிக் காணா
தம்கைவைத்த சென்னியராய் அளக்க மாட்டா
அனல்அவன்காண் அலைகடல்சூழ்இலங்கை வேந்தன்
கொங்கலர்த்த முடிநெரிய விரலால் ஊன்றும்
குழகன் காண் அழகன் காண் கோல மாய
மங்கையர்க்குஓர் கூறன்காண் வானோர் ஏத்தும்
வலிவலத்தான் காண் அவன்என் மனத்து ளானே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 20. சகலவிதமான உடல் நோய்களையும் தீர்க்கும் பதிகம்

கும்பகோணத்திற்குக் கிழக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ளது **திருந்துதேவன்குடி** (நண்டாங்கோயில்) எனும் சிவத்தலம்.

இந்தப்பகுதியை ஆண்ட அரசன் ஒருவன் தீராத நோயால் வருந்திக் கொண்டிருந்தான். எந்த மருந்தினாலும் குணமாக வில்லை. இத்தலத்து இறைவரையே தியானித்திருந்தான். இவனுடைய உறுதியான நம்பிக்கைக்கு இரங்கிய இறைவர் ஒரு வயதானவராய் வந்து நோயைத் தீர்த்தார். மேலும் நோய்க்கு மருந்து கண்டு பிடித்துத் தருவதாக அரசனை அழைத்து இப்பொழுது மூலவர் உள்ள இடத்தில் வெட்டச் செய்தார். வெட்டிய இடத்திலிருந்து சிவலிங்கம் வெளிப்பட்டது. முதியவராய் வந்தவர் மறைந்தார். இன்றும் (மூல இலிங்கத்தின்மீது) இறைவரின் முன்பக்கத்தில் வெட்டுப்பட்டதைக் காணலாம்.

"மருந்து வேண்டில் இவை" எனும் திருஞான சம்பந்த சுவாமிகளின் பாடலை நினைவோமாக. இத்தலத்து இறைவரே மருந்தாவார். இப்பதிகப் பாராயணத்தால் எல்லாவிதமான நோய்களும் இல்லையாகும்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருந்துதேவன்குடி

மருந்துவேண்டில் இவை மந்திரங்கள் இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதேவே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள் வேடங்களே. 1

வீதிபோக் காவன வினையைவீட் டுவ்வன
ஓதியோர்க்கு அகப்படாப் பொருளை ஓர்விப்பன
தீதில்தே வன்குடித் தேவர்தேவெய்திய
ஆதிஅந் தம்இலா அடிகள்வே டங்களே 2

மானம்ஆக் குவ்வன மாசுநீக் குவ்வன
வானையுள் கச்செலும் வழிகள் காட்டுவ்வன
தேனும்வண் டும்இசை பாடுந்தே வன்குடி
ஆன்அஞ்சா டும்முடி அடிகள்வே டங்களே 3

செவிகள்ஆர் விப்பன சிந்தையுள் சேர்வன
கவிகள்பா டுவ்வன கண்குளிர் விப்பன
புவிகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அவிகள்உய்க் கப்படும் அடிகள்வே டங்களே. 4

விண்ணுலா வும்நெறி வீடுகாட்டும்நெறி
மண்ணுலா வும்நெறி மயக்கம்தீர்க் கும்நெறி
தெண்ணிலா வெண்மதி தீண்டுதே வன்குடி
அண்ணலான் ஏறுடை அடிகள்வே டங்களே. 5

பங்கம் என் னப்படர் பழிகள் என்னப்படா
புங்கம்என் னப்படர் புகழ்கள்என் னப்படும்
திங்கள்தோ யும்பொழில் தீண்டுதேவன்குடி
அங்கம் ஆறும்சொன்ன அடிகள்வே டங்களே. 6

கறைதல்ஒன் றும்இலை கருதவல் லார்தமக்கு
உரையில் ஊனம்இலை உலகினில் மன்னுவர்
திரைகள்பொங் கப்புனல் பாயுந்தேவன்குடி
அரையில்வெண் கோவணத்து அடிகள்வே டங்களே. 7

உலகம்உட் கும்திறல் உடையஅரக்கன்வலி
விலகுபூதக்கணம் வெருட்டும் வேடத்தின
திலகமா ரும்பொழில் சூழுந்ததே வன்குடி
அலர்தயாங்கும்முடி அடிகள்வே டங்களே. 8

துளக்கம்இல்லாதன தூயதோற்றத்தன
விளக்கம்ஆக் குவ்வன வெறிவண்டாரும்பொழில்
திளைக்கும் தேவன்குடித் திசைமுகனோடுமால்
அளக்கஒண் ணாவண்ணத்து அடிகள்வே டங்களே. 9

செருமருதண் துவர்த் தேர் அமண் ஆதர்கள்
உருமருவப்படாத் தொழும்பர்தம் உரைகொளேல்
திருமருவும்பொய்கை சூழ்ந்ததே வன்குடி
அருமருந் தாவன அடிகள்வே டங்களே. 10

சேடர் தேவன்குடித் தேவர்தேவன்தனை
மாடம் ஓங்கும்பொழில் மல்குதண் காழியான்
நாடவல்லதமிழ் ஞானசம் பந்தன்
பாடல்பத்தும்வல்லார்க்கு இல்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 21. இரண்டு கண்களின் பார்வையையும் பெறுவதற்கு உதவும் பதிகம்

திருவாரூரில் பிறந்தவர் தண்டியடிகள். பிறவியிலேயே கண் ஒளி இழந்தவர் பிறவிக்குருடர். திருவாரூர் கோயிலின் திருக்குளத்தைத் திருப்பணி செய்தவர். சமணர்களுடன் வாதிட்டு, ஆரூர் அண்ணலார் திருவருளால் கண்பார்வையைப் பெற்றார் என்பது வரலாறு கூறும் உண்மை. திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியுள்ள திருவாரூர் திருத்தாண்டகம் இங்கே கொடுக்கப் பட்டுள்ளது. படிக்கும் பொழுதே கண்களில் நீர்மல்கச் செய்யும் பதிகம். இப்பதிகப் பாராயணம் செய்தால் இரண்டு கண்களின் பார்வையையும் பெறலாம். தேவை நம்பிக்கைதான்.

திருநாவுக்கரசு சுவாமிகள்
திருஆரூர்

இடர்கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
ஈண்டொளிசேர் கங்கைச் சடையாய் என்றும்
சுடரொளியாய் உள்விளங்கு சோதீ யென்றுந்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா என்றும்
கடல்விடம் அதுஉண்டிருண்ட கண்டா என்றும்
கலைமான் மறியேந்து கையா என்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 1

செடியேறு தீவினைகள் தீரும் வண்ணம்
சிந்தித்தேன் நெஞ்சமே திண்ண மாகப்
பொடியேறு திருமேனி யுடையாய் என்றும்
புரந்தரன்தன் தோள்துணித்த புனிதா என்றும்
அடியேனை ஆளாகக் கொண்டாய் என்றும்
அம்மானே ஆரூர்எம் அரசே என்றும்
கடிநாறு பொழிற்கச்சிக் கம்பா என்றும்
கற்பகமே யென்றென்றே கதறா நில்லே. 2

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 3

புண்ணியமும் நன்னெறியும் ஆவ தெல்லாம்
நெஞ்சமே யிதுகண்டாய் பொருந்தக் கேள்நீ
நுண்ணியவெண் ணூல்கிடந்த மார்பா என்றும்
நுந்தாத வொண்சுடரே யென்று நாளும்
விண்ணியங்கு தேவர்களும் வேதம் நான்கும்
விரைமலர்மேல் நான்முகனும் மாலும் கூடி
எண்ணரிய திருநாமம் உடையாய் என்றும்
எழில்ஆரூ ராஎன்றே ஏத்தா நில்லே. 4

இழைத்தநாள் எல்லை கடப்ப தென்றால்
இரவினொடு நண்பகலும் ஏத்தி வாழ்த்திப்
பிழைத்ததெலாம் பொறுத்தருள்செய் பெரியோய் என்றும்
பிஞ்ஞகனே மைஞ்ஞவிலுங் கண்டா என்றும்
அழைத்தலறி அடியேனுன் அரணங் கண்டாய்
அணியாரூர் இடங்கொண்ட அழகா என்றும்
குழற்சடையெம் கோன்என்றும் கூறு நெஞ்சே
குற்றமில்லை யென்மேல்நான் கூறி னேனே. 5

நீப்பரிய பல்பிறவி நீக்கும் வண்ணம்
நினைந்திருந்தேன் காண்நெஞ்சே நித்த மாகச்
சேப்பிரியா வெல்கொடியி னானே யென்றும்
சிவலோக நெறிதந்த சிவனே யென்றும்
பூப்பிரியா நான்முகனும் புள்ளின் மேலைப்
புண்டரிகக் கண்ணானும் போற்றி யென்னத்
தீப்பிழம்பாய் நின்றவனே செல்வ மல்கும்
திருஆரு ராஎன்றே சிந்தி நெஞ்சே. 6

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்று அரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில்ஆரு ராஎன்றே போற்றா நில்லே. 7

மதிதருவன் நெஞ்சமே உஞ்சு போக
வழியாவது இதுகண்டாய் வானோர்க் கெல்லாம்
அதிபதியே ஆரமுதே ஆதீ யென்றும்
அம்மானே ஆரூர்எம் ஐயா என்றும்
துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்
சூழும் வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர்மதிசேர் சென்னியனே கால காலா
கற்பகமே யென்றென்றே கதறா நில்லே. 8

பாசத்தைப் பற்றறுக்க லாகும் நெஞ்சே
பரஞ்சோதி பண்டரங்கா பாவ நாசா
தேசத்து ஒளிவிளக்கே தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட்டானா என்றும்
நேசத்தை நீபெருக்கி நேர்நின் றுள்கி
நித்தலுஞ் சென்றுஅடிமேல் வீழ்ந்து நின்று
ஏசற்று நின்று இமையோர் ஏறே யென்றும்
எம்பெருமான் என்றென்றே ஏத்தா நில்லே. 9

புலன்கள் ஐந்தால் ஆட்டுண்டு போது போக்கிப்
புறம்புறமே திரியாதே போது நெஞ்சே
சலங்கொள்சடை முடியுடைய தலைவா என்றும்
தக்கன்செய் பெருவேள்வி தகர்த்தாய் என்றும்
இலங்கையர்கோன் சிரம்நெரித்த இறைவா என்றும்
எழிலாரூர் இடங்கொண்ட எந்தாய் என்றும்
நலங்கொள்அடி யென்தலைமேல் வைத்தாய் என்றும்
நாள்தோறும் நவின்றுஏத்தாய் நன்மை யாமே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 22. துன்பம் நீக்கும் பதிகம் – 1

இந்த இரண்டு பதிகங்களும் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் அருளப்பட்ட அரிய பதிகங்கள் ஆகும். பாராயணம் செய்பவருடைய துன்பங்கள் உடனே அகன்றுவிடும் என்பதில் ஐயமில்லை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
வடதிருமுல்லைவாயில்

திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குஉன்
சீருடைக் கழல்கள் என்று எண்ணி
ஒருவரை மதியாது உறாமைகள் செய்வதும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 1

கூடிய இலயம் சதிபிழை யாமைக்
கொடியிடை உமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே
அங்கணா எங்குற்றாய் என்று
தேடிய வானோர் சேர்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 2

விண்பணிந்து ஏத்தும் வேதியா மாதர்
வெருவிட வேழம்அன்று உரித்தாய்
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் தேவர்தம் அரசே
தண்பொழில் ஒற்றி மாநகர் உடையாய்
சங்கிலிக் காஎன்கண் கொண்ட
பண்பநின் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 3

பொன்னலம் கழனிப் புதுவிரை மருவிப்
பொறிவரி வண்டிசை பாட
அந்நலம் கமலத் தவிசின்மேல் உறங்கும்
அலவன்வந்து உலவிட அள்ளல்
செந்நெலங் கழனி சூழ்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலம் தமிழால் பாடுவோற்கு அருளாய்
பாசுப தாபரஞ் சுடரே. 4

சந்தன வேரும் காரகில் குறடும்
தண்மயில் பீலியும் கரியின்
தந்தமும் தரளக் குவைகளும் பவளக்
கொடிகளும் சுமந்துகொண்டு உந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை
வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்துஎன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 5

மற்றுநான் பெற்றது ஆர்பெற வல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணம்எனக்
கொள்ளும் கொள்கையால் மிகைபல செய்தேன்
செற்றுமீது ஓடும் திரிபுரம் எரித்த
திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 6

மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய
வார்குழல் மாமயில் சாயல்
அணிகெழு கொங்கை அங்கயற் கண்ணார்
அருநடம் ஆடல் அறாத
திணிபொழில் தழுவு திருமுல்லை வாயில்
செல்வனே எல்லியும் பகலும்
பணியது செய்வேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 7

நம்பனே அன்று வெண்ணெய்நல் லூரில்
நாயினேன் தன்னை ஆட் கொண்ட
சம்புவே உம்ப ரார்தொழுது ஏத்தும்
தடங்கடல் நஞ்சுண்ட கண்டா
செம்பொன்மாளிகைசூழ் திருமுல்லை வாயில்
தேடியான் திரிதர்வேன் கண்ட
பைம்பொனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 8

மட்டுலாம் மலர்கொண்டு அடியிணை வணங்கும்
மாணிதன் மேல்மதி யாதே
கட்டுவான் வந்த காலனை மாளக்
காலினால் ஆருயிர் செகுத்த
சிட்டனே செல்வத் திருமுல்லை வாயில்
செல்வனே செழுமறை பகர்ந்த
பட்டனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 9

சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு
எல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்டு
அருளிய இறைவனே என்றும்
நல்லவர் பரவும் திருமுல்லை வாயில்
நாதனே நரைவிடை ஏறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 10

விரைதரு மலர்மேல் அயனொடு மாலும்
வெருவிட நீண்டஎம் மானைத்
திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயில்
செல்வனைநாவலா ரூரன்
உரைதரு மாலைஓர் அஞ்சினோடு அஞ்சும்
உள்குளிர்ந்து ஏத்தவல் லார்கள்
நரைதிரை மூப்பும் நடலையும் இன்றி
நண்ணுவர் விண்ணவர்க்கு அரசே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 23. துயர் நீக்கும் பதிகம் - 2

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
திருவாவடுதுறை

கங்கை வார்சடை யாய்கண நாதா
கால காலனே காமனுக்கு அனலே
பொங்கு மாகடல் விடம்மிடற் றானே
பூத நாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால்விடை யாய்தெளி தேனே
தீர்த்த னேதிரு ஆவடு துறையுள்
அங்க ணாஎனை அஞ்சல்என்று அருளாய்
ஆர்எனக்குஉறவு அமரர்கள் ஏறே. 1

மண்ணின் மேல்மயங் கிக்கிடப் பேனை
வலிய வந்தெனை ஆண்டுகொண் டானே
கண்ணி லேன் உடம் பில்அடு நோயால்
கருத்த ழிந்துஉனக் கேபொறை ஆனேன்
தெண்ணி லாஎறிக் கும்சடை யானே
தேவ னேதிரு ஆவடு துறையுள்
அண்ண லேஎனை அஞ்சல்என்று அருளாய்
ஆர்எ னக்குஉறவு அமரர்கள் ஏறே. 2

ஒப்பி லாமுலை யாள்ஒரு பாகா
உத்த மாமத்தம் ஆர்தரு சடையாய்
முப்பு ரங்களைத் தீவளைத்து அங்கே
மூவ ருக்குஅருள் செய்யவல் லானே
செப்ப ஆல்நிழற் கீழ்இருந்து அருளும்
செல்வ னேதிரு ஆவடு துறையுள்
அப்ப னேஎனை அஞ்சல்என்று அருளாய்
ஆர்எ னக்குஉறவு அமரர்கள் ஏறே. 3

கொதியி னால்வரு காளிதன் கோபம்
குறைய ஆடிய கூத்துடை யானே
மதியி லேன்உடம் பில்அடு நோயால்
மயங்கி னேன்மணி யேமணவாளா
விதியி னால்இமை யோர்தொழுது ஏத்தும்
விகிர்தனேதிரு ஆவடு துறையுள்
அதிப னேஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குஉறவு அமரர்கள் ஏறே. 4

வந்த வாளரக் கன்வலி தொலைத்து
வாழும் நாள்கொடுத் தாய்வழி முதலே
வெந்த வெண்பொடி பூசவல் லானே
வேட னாய்விச யற்கு அருள் புரிந்த
இந்து சேகர னேஇமை யோர்சீர்
ஈச னேதிரு ஆவடு துறையுள்
அந்த ணாஎனை அஞ்சல்என்று அருளாய்
ஆர்எ னக்குஉறவு அமரர்கள் ஏறே. 5

குறைவி லாநிறை வேகுணக் குன்றே
கூத்த னேகுழைக் காதுடை யானே
உறவி லேன்உனை அன்றிமற்று அடியேன்
ஒருபி ழைபொறுத் தால்இழி வுண்டே
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச்
செம்பொனேதிரு ஆவடு துறையுள்
அறவ னேஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குஉறவு அமரர்கள் ஏறே. 6

வெய்ய மாகரி ஈருரி யானே
வேங்கை ஆடையி னாய்விதி முதலே
மெய்ய னேஅடல் ஆழிஅன்று அரிதான்
வேண்ட நீகொடுத்து அருள்புரி விகிர்தா
செய்ய மேனியனேதிகழ் ஒளியே
செங்கணாதிரு ஆவடு துறையுள்
ஐய னேஎனை அஞ்சல்என்று அருளாய்
ஆர்எ னக்கு உறவு அமரர்கள் ஏறே. 7

கோதிலா அமுதேஅருள் பெருகு
கோல மேஇமை யோர்தொழு கோவே
பாதி மாதொரு கூறுடை யானே
பசுப தீபர மாபர மேட்டி
தீதி லாமலை யேதிரு வருள்சேர்
சேவ காதிரு ஆவடு துறையுள்
ஆதி யேயெனை அஞ்சல்என் றருளாய்
ஆர் எனக்குஉறவு அமரர்கள் ஏறே. 8

வான நாடனே வழித்துணை மருந்தே
மாசி லாமணி யேமறைப் பொருளே
ஏன மாஎயிறு ஆமையும் எலும்பும்
ஈடு தாங்கிய மார்புடை யானே
தேன்நெய் பால்தயிர் ஆட்டுகந் தானே
தேவ னேதிரு ஆவடு துறையுள்
ஆனை யேயெனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குஉறவு அமரர்கள் ஏறே. 9

வெண் தலைப்பிறை கொன்றையும் அரவும்
வேரி மத்தமும் விரவிமுன் முடித்த
இண்டை மாமலர்ச் செஞ்சடை யானை
ஈசனைத்திரு ஆவடு துறையுள்
அண்ட வாணனைச் சிங்கடி யப்பன்
அணுக்க வன்றொண்டன் ஆர்வத்தால் உரைத்த
தண்த மிழ்மலர் பத்தும்வல் லார்கள்
சாத லும்பிறப் பும்அறுப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 24. கடன்தொல்லை தீர்க்கும் பதிகம்

உளுந்தூர்ப்பேட்டை – திருவெண்ணெய் நல்லூர்ச் சாலையில் உள்ளது திருநெல்வெண்ணெய் எனும் சிவத்தலம். இத்தலம் திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்றுள்ளது. இத்தலத்து இறைவர் கிணற்றிலிருந்து பொற்குடம் கிடைக்கச் செய்தவர். ஆதலால் பொற்குடம் கொடுத்த நாதர் என்றே அழைக்கப்படுகிறார்.

இத்தலத்துப்பதிகத்தைப் பாராயணம் செய்த பலர் கடன் தொல்லையிலிருந்து மீண்டுள்ளார்கள். கிணற்றிலிருந்து பொற்குடம் கிடைக்கச் செய்த இறைவர், கடன் தீருவதற்கும் ஏதாவது ஒருவழியைக் காட்டியருளுவார் என்று நம்பிப் பாராயணம் செய்தல் நலம்.

திருஞானசம்பந்தர்
திருநெல்வெண்ணெய் (நெய்வெணை)

நல்வெணெய் விழுதுபெய்து ஆடுதிர் நாள்தொறும்
நெல்வெணெய் மேவிய நீரே
நெல்வெணெய் மேவிய நீர்உமை நாள்தொறும்
சொல்வணம் இடுவது சொல்லே. 1

நிச்சலும் அடியவர் தொழுதெழு நெல்வெணெய்க்
கச்சிள அரவசைத் தீரே
கச்சிள அரவசைத் தீர்உமைக் காண்பவர்
அச்சமொடு அருவினை இலரே. 2

நிரைவிரி தொல்புகழ் நெல்வெணெய் மேவிய
அரைவிரி கோவணத் தீரே
அரைவிரி கோவணத்தீர் உமை அலர்கொடு
உரைவிரிப் போர் உயர்ந் தோரே. 3

நீர்மல்கு தொல்புகழ் நெல்வெணெய் மேவிய
ஊர்மல்கி உறையவல் லீரே
ஊர்மல்கி உறையவல் லீர்உமை உள்குதல்
பார்மல்கு புகழுவர் பண்பே. 4

நீடிளம் பொழில்அணி நெல்வெணெய் மேவிய
ஆடிளம் பாப்பசைத் தீரே
ஆடிளம் பாப்பசைத் தீர்உமை அன்பொடு
பாடுளம் உடையவர் பண்பே. 5

நெற்றியோர் கண்ணுடை நெல்வெணெய் மேவிய
வெற்றிகொள் பிறைநுத லீரே
வெற்றிகொள் பிறைநுத லீர்உமைப் பேணுதல்
கற்றறி வோர்கள்தம் கடனே. 6

நிறையவர் தொழுதெழு நெல்வெணெய் மேவிய
கறையணி மிடறுடை யீரே
கறையணி மிடறுடை யீர்உமைக் காண்பவர்
உறைவதும் உம்அடிக் கீழே. 7


நெருக்கிய பொழிலணி நெல்வெணெய் மேவியன்று
அரக்கனை அசைவுசெய் தீரே
அரக்கனை அசைவுசெய் தீர்உமை அன்புசெய்து
இருக்கவல் லார்இடர் இலரே. 8

நிரைவிரி சடைமுடி நெல்வெணெய் மேவியன்று
இருவரை இடர்கள் செய்தீரே
இருவரை இடர்கள் செய்தீர்உமை இசைவொடு
பரவவல் லார்பழி இலரே. 9

நீக்கிய புனலணி நெல்வெணெய் மேவிய
சாக்கியச் சமண் கெடுத்தீரே
சாக்கியச் சமண்கெடுத்தீரே உமைச் சார்வது
பாக்கியம் உடையவர் பண்பே. 10

நிலமல்கு தொல்புகழ் நெல்வெணெய் ஈசனை
நலமல்கு ஞானசம் பந்தன்
நலமல்கு ஞானசம் பந்தன் செந்தமிழ்
சொலமல்கு வார்துயர் இலரே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 25. நல்ல வேலையும், மன அமைதியையும் அளிக்கும் பதிகம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டார். அந்தச் சிவானுபத்தினால் பாடிய அரிய பதிகம் ''சிந்திப்பரியன'' எனத்தொடங்கும் பதிகம். திருவையாற்று இறைவருடைய திருவடிகளின் அருமை பெருமைகளையெல்லாம் தொகுத்துக் கூறுவனவாக அமைந்து உள்ளது. இருபது பாடல்களைக் கொண்டுள்ளது இத்திருப்பதிகம்.

இப்பதிகத்தைப் படிக்கும் பொழுதே மனதில் ஒரு பேரமைதி நிலவுவதை யாவரும் அனுபவத்தால் உணர்வர். இப்பதிகப் பாராயணத்தால் மேலான சிவபுண்ணியம் பெறலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்
திருவையாறு

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந்து ஆடும்ஐயாறன் அடித்தலமே. 1

இழித்தன ஏழேழ் பிறப்பும் அறுத்தன என்மனத்தே
பொழித்தன போர்எழிற் கூற்றை உதைத்தன போற்றவர்க்காய்க்
கிழித்தன தக்கன் கிளர்ஒளி வேள்வியைக் கீழமுன்சென்று
அழித்தன ஆறங்கம் ஆனஐயாறன் அடித்தலமே. 2

மணிநிறம் ஒப்பன பொன்னிறம் மன்னின மின்னியல் வாய்
கணிநிறம் அன்ன கயிலைப் பொருப்பன காதல்செய்யத்
துணிவன சீலத்தர் ஆகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்கு
அணியன சேயன தேவர்க்குஐயாறன் அடித் தலமே. 3

இருள்தரு துன்பப் படலம் மறைப்ப மெய்ஞ்ஞானம் என்னும்
பொருள்தரு கண்ணிழந்து உண்பொருள் நாடிப் புகலிழந்த
குருடரும் தம்மைப்பரவக் கொடுநரகக்குழிநின்று
அருள்தரு கைகொடுத்து ஏற்றும்ஐயாறன் அடித்தலமே. 4

எழுவாய் இறுவாய் இலாதன வெங்கண் பிணி தவிர்த்து
வழுவா மருத்துவம் ஆவன மாநரகக்குழிவாய்
விழுவார் அவர்தம்மை வீழ்ப்பன மீட்பன மிக்கஅன்போடு
அழுவார்க்கு அமுதங்கள் காண்கஐயாறன் அடித்தலமே. 5

துன்பக் கடலிடைத் தோணித் தொழில்பூண்ட தொண்டர்தம்மை
இன்பக் கரைமுகந்து ஏற்றும் திறத்தன மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி செய்யும்அப் பொய்பொருந்தா
அன்பர்க்கு அணியன காண்கஐயாறன் அடித்தலமே. 6

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன்னின்றஇப் பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமுது ஊட்டி அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் வெருஞ்செல்வம் ஆக்கும்ஐயாறன் அடித்தலமே. 7

திருத்திக் கருத்தினைச் செவ்வே நிறுத்திச் செறுத்துஉடலை
வருத்திக் கடிமலர் வாளெடுத்து ஓச்சி மருங்கு சென்று
விருத்திக்குஉழக்கவல் லோர்கட்கு விண்பட்டிகையிடுமால்
அருத்தித்து அருந்தவர் ஏத்தும்ஐயாறன் அடித்தலமே. 8

பாடும் பறண்டையும் ஆந்தையும் ஆர்ப்பப் பரந்து பல்பேய்
கூடி முழவக் குவிகவிழ் கொட்டக் குறுநரிகள்
நீடும் குழல் செய்ய வையம் நெளிய நிணப்பிணக்காட்டு
ஆடும் திருவடி காண்கஐயாறன் அடித்தலமே. 9

நின்போல் அமரர்கள் நீள்முடி சாய்த்து நிமிர்த்துஉகுத்த
பைம்போது உழக்கிப் பவளம் தழைப்பன பாங்கு அறியா
என்போலிகள் பறித்திட்ட இலையும் முகையும்எல்லாம்
அம்போது எனக்கொள்ளும் ஐயன்ஐயாறன் அடித்தலமே. 10

மலையார் மடந்தை மனத்தன வானோர் மகுடம்மன்னி
நிலையாய் இருப்பன நின்றோர் மதிப்பன நீள்நிலத்துப்
புலையாடு புன்மை தவிர்ப்பன பொன்னுல கம்அளிக்கும்
அலையார் புனல்பொன்னி சூழ்ந்தஐயாறன் அடித்தலமே. 11

பொலம் புண்டரீகப் புதுமலர் போல்வன போற்றியென்பார்
புலம்பும் பொழுதும் புணர்துணை யாவன பொன்னனையாள்
சிலம்பும் செறிபாடகமும் செழுங்கிண்கிணித்திரளும்
அலம்பும் திருவடி காண்கஐயாறன் அடித்தலமே 12

உற்றார் இலாதார்க்கு உறுதுணை யாவன ஓதி நன்னூல்
கற்றார் பரவப் பெருமை யுடையன காதல்செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந் தான்கொடுக்கும்
அற்றார்க்கு அரும்பொருள் காண்கஐயாறன் அடித்தலமே.13

வானைக் கடந்து அண்டத்து அப்பால் மதிப்பன மந்திரிப்பார்
ஊனைக் கழித்துஉய்யக் கொண்டருள் செய்வனஉத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே உதிப்பன நங்கைஅஞ்ச
ஆனை உரித்தன காண்கஐயாறன் அடித்தலமே. 14

மாதிர மாநிலம் ஆவன வானவர் மாமுகட்டின்
மீதன மென்கழல் வெங்கச்சு வீக்கின வெந்நமனார்
தூதரை ஓடத் துரப்பன துன்பறத் தொண்டுபட்டார்க்கு
ஆதரம் ஆவன காண்கஐயாறன் அடித்தலமே. 15

பேணித் தொழுமவர் பொன்னுலகு ஆளப் பிறங்குஅருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்துஇமை யோர்முடிமேல்
மாணிக்கம் ஒத்து மரகதம் போன்று வயிரம் மன்னி
ஆணிக் கனகமும் ஒக்கும்ஐயாற னடித்தலமே. 16

ஓதிய ஞானமும் ஞானப் பொருளும் ஒலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியும் ஆவன விண்ணும் மண்ணும்
சோதியும் செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பன தூமதியோடு
ஆதியும் அந்தமும் ஆனஐயாறன் அடித்தலமே. 17

சுணங்கு முகத்துத் துணைமுலைப் பாவை சுரும்பொடு
வண்டு
அணங்கும் குழலி அணியார் வளைக்கரம் கூப்பி நின்று
வணங்கும் பொழுதும் வருடும் பொழுதும் வண்காந்தள்
ஒண்போது
அணங்கும் அரவிந்தம் ஒக்கும்ஐயாறன் அடித்தலமே. 18

சுழலார் துயர்வெயில் சுட்டிடும் போதுஅடி தொண்டர்துன்னும்
நிழல் ஆவனஎன்றும் நீங்காப் பிறவி நிலைகெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவ காலவனங்கடந்த
அழலார் ஒளியன காண்கஐயாறன் அடித்தலமே. 19

வலியான் தலைபத்தும் வாய்விட்டு அலற வரை அடர்த்து
மெலியா வலியுடைக் கூற்றை உதைத்துவிண்ணோர்கள்
முன்னே
பலிசேர் படுகடைப் பார்த்துப்பன்னாளும் பலர்இகழ
அலியா நிலைநிற்கும் ஐயன்ஐயாறன் அடித்தலமே. 20

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 26. என்றும் உண்ண உணவு கிடைக்கச் செய்யும் பதிகம்

தஞ்சை - திருவையாற்றுச் சாலையில் உள்ளது சோற்றுத்துறை எனும் தலம். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல் பெற்ற தலம். சிறந்த சிவபக்தனாக விளங்கிய "அருளாளன்" என்பான் பசியால் வருந்திய பொழுது, இத்தலத்து இறைவர் எடுக்க எடுக்கக் குறையாத சோற்றுக்கலம் (அட்சய பாத்திரம்) கொடுத்தருளினார்.

இவன் ஊரில் பசித்திருந்த யாவருக்கும் உணவளித்து மகிழ்ந்தான். ஆதலால் இறைவர் சோற்றுத்துறைநாதர் எனவும், ஊர் சோற்றுத்துறை எனவும் வழங்கப்படுகிறது.

பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் வயலில் நெல்லிற்குப் பதிலாகச் சோறாகவே இறைவர் விளைவித்தார் எனவும் கூறப்படுகிறது.

இத்தலத்துப் பதிகத்தைப் பாராயணம் செய்பவர்களுக்கு என்றும் உணவுத் தட்டுப்பாடே வராது என்பது உறுதியே யாகும்.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்**
**திருச்சோற்றுத்துறை**

அழல்நீர் ஒழுகி அனைய சடையும்
உழையீர் உரியும் உடையான் இடமாம்
கழைநீர் முத்தும் கனகக் குவையும்
சுழல்நீர்ப் பொன்னிச் சோற்றுத் துறையே. 1

பண்டை வினைகள் பறிய நின்ற
அண்ட முதல்வன் அமலன் இடமாம்
இண்டை கொண்டு அன்புஇடையறாத
தொண்டர் பரவும் சோற்றுத் துறையே. 2

கோல அரவும் கொக்கின் இறகும்
மாலை மதியும் வைத்தான் இடமாம்
ஆலும் மயிலும் ஆடல் அளியும்
சோலை தருநீர்ச் சோற்றுத் துறையே. 3

பளிக்குத் தாரை பவள வெற்பில்
குளிக்கும் போல்நூற் கோமற்கு இடமாம்
அளிக்கும் ஆத்தி அல்லால் மதுவம்
துளிக்கும் சோலைச் சோற்றுத் துறையே. 4

உதையும் கூற்றுக்கு ஒல்கா விதிக்கு
வதையும் செய்த மைந்தன் இடமாம்
திதையும் தாதும் தேனும் ஞிமிறும்
துதையும் பொன்னிச் சோற்றுத் துறையே. 5

ஓதக் கடல்நஞ் சினைஉண் டிட்ட
பேதைப் பெருமான் பேணும் பதியாம்
சீதப் புனல்உண்டு எரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே. 6

இறந்தார் என்பும் எருக்கும் சூடிப்
புறங்காட்டு ஆடும் புனிதன் கோயில்
சிறந்தார் சுற்றம் திருஎன்று இன்ன
துறந்தார் சேரும் சோற்றுத் துறையே. 7

காமன் பொடியாக் கண்ஒன்று இமைத்த
ஓமக் கடலார் உகந்த இடமாம்
தேமென் குழலால் சேக்கை புகைத்த
தூமம் விசும்பார் சோற்றுத் துறையே. 8

இலையால் அன்பால் ஏத்தும் அவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார் இடமாம்
தலையால் தாழும் தவத்தோர்க்கு என்றும்
தொலையாச் செல்வச் சோற்றுத் துறையே. 9

சுற்றார் தருநீர்ச் சோற்றுத் துறையுள்
முற்றா மதிசேர் முதல்வன் பாதத்து
அற்றார் அடியார் அடிநாய் ஊரன்
சொற்றான் இவைகற் றார்துன் பிலரே. 10

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 27. பாவம் போக்கும் பைந்தமிழ்ப் பதிகம்

திருவையாறு தலத்தைப்பற்றி யாவரும் அறிந்திருப்பர். திருநாவுக்கரசு சுவாமிகளுக்குக் கயிலைக் காட்சியை அருளிய அற்புதத்தலம். இது மூவர் பெருமக்களாலும் பாடல் பெற்ற தலமாகும்.

திருஞானசம்பந்த சுவாமிகள் இத்தலத்தில் அருளியுள்ள 'கோடல் கோங்கம்' எனத் தொடங்கும் பதிகத்தில், எட்டாவது பாடலில் "பரவி நாள்தொறும் பாடநம் பாவம் பறைதலால்" என்றுணர்த்தியுள்ளது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இப்பதிகத்தை நாளும் பாராயணம் செய்து வந்தால் நம்முடைய பாவங்கள் தொலையும்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருவையாறு

கோடல்கோங்கம்குளிர் கூவிள மாலைகுலாயசீர்
ஒடுகங்கைஒளி வெண்பிறைசூடும்ஒருவனார்
பாடல்வீணைமுழவம்குழல் மொந்தைபண்ணாகவே
ஆடுமாறுவல்லானும் ஐயாறுடை ஐயனே. 1

தன்மையாரும்அறி வார்இல்லை தாம்பிறர் எள்கவே
பின்னுமுன் னுஞ்சில பேய்க்கணம் சூழத்திரிதர்வர்
துன்ன ஆடைஉடுப்பர்சுடலைப்பொடிப் பூசுவர்
அன்னம்ஆலும்துறையானும்ஐயாறுடைஐயனே. 2

சுறு பெண்உடை கோவணம் உண்பதும் வெண்தலை
மாறி லாருங்கொள் வாரில்லை மார்பில் அணிகலம்
ஏறும் ஏறித்திரிவர்இமையோர்தொழுது ஏத்தவே
ஆறும் நான்கும்சொன் னானும்ஐயா றுடை ஐயனே. 3

பண்ணில்நல்லமொழியார்பவளத்துவர் வாயினார்
எண்ணில்நல் லகுணத் தார்இணை வேல்வென்ற கண்ணினார்
வண்ணம்பாடிவலி பாடித்தம் வாய்மொழி பாடவே
அண்ணல் கேட்டுகந் தானும்ஐயா றுடைஐயனே. 4

வேனல் ஆனைவெருவஉரி போர்த்துஉமை அஞ்சவே
வானை ஊடறுக் கும்மதிசூடிய மைந்தனார்
தேன்நெய் பால்தயிர் தெங்கிள நீர்கரும் பின்தெளி
ஆனஞ் சாடும்முடியானும்ஐயாறுடை ஐயனே. 5

எங்கு மாகிநின்றானும் இயல்பறி யப்படா
மங்கை பாகம்கொண்டானும் மதிசூடும் மைந்தனும்
பங்க மில்பதி னெட்டொடு நான்குக்கு உணர்வுமாய்
அங்கம் ஆறுஞ்சொன்னானும் ஐயாறுடை ஐயனே. 6

ஓதியா ரும்அறிவார்இல்லை ஓதிஉ லகெலாம்
சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதியான்
வேதி யாகிவின் ணாகிமண்ணோடுஎறி காற்றுமாய்
ஆதி யாகிநின்றானும் ஐயாறுடை ஐயனே. 7

குரவ நாண்மலர் கொண்டடி யார்வழி பாடுசெய்
விரவி நீறணிவார்சில தொண்டர்வியப்பவே
பரவி நாள்தொறும் பாடநம் பாவம்பறைதலால்
அரவம் ஆர்த்துகந் தானும் ஐயாறுடை ஐயனே. 8

உரைசெய் தொல்வழி செய்தறி யாஇலங் கைக்குமன்
வரைசெய் தோள்அடர்த் தும்மதி சூடிய மைந்தனார்
கரைசெய் காவிரி யின்வடபால்அது காதலான்
அரைசெய் மேகலை யானும்ஐயாறுடை ஐயனே. 9

மாலும் சோதி மலரானும் அறிகிலா வாய்மையான்
காலம் காம்புவயிரம்கடிகையன் பொற்கழல்
கோல மாய்க் கொழுந்து ஈன்றுபவளம்தி ரண்டதோர்
ஆல நீழல்உளானும் ஐயாறுடை ஐயனே. 10

கையில் உண்டுஉழல் வாரும் கமழ்துவர் ஆடையால்
மெய்யைப் போர்த்துழல் வாரும் உரைப்பன மெய்யல
மைகொள் கண்டத்துஎண்தோள் முக்கணான்கழல் வாழ்த்தவே
ஐயந் தேர்ந்தளிப் பானும் ஐயாறுடை ஐயனே. 11

பலிதி ரிந்துஉழல் பண்டங்கள் மேயஐயாற்றினைக்
கலிக டிந்தகையான்கடற் காழியர் காவலன்
ஒலிகொள் சம்பந்தன் ஒண்தமிழ் பத்தும்வல் லார்கள்போய்
மலிகொள் விண்ணிடை மன்னிய சீர்பெறு வார்களே. 12

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 28. தீய சொப்பனம் மற்றும் எமபயம் வராமலிருக்க உதவும் பதிகம்

1) மயிலாடுதுறை - தரங்கம்பாடிப் பேருந்துச் சாலையில் உள்ளது "திருக்கடையூர்" எனும் தலம். இத்தலத்து இறைவர் மார்க்கண்டே யருக்காக எமனை உதைத்தவர். எமனை உதைத்த காலசம்கார மூர்த்தியும் இத்தலத்தில் உள்ளது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய இத்தலத்துப்பதிகம் ஒன்று கொடுத்துள்ளோம்.

2) தஞ்சைக்கு அருகில் உள்ளதலம் 'திருவையாறு' என்பது இத்தலத்தில் "சுசிதரன்" எனும் சிவபக்தியுடைய சிறுவனை எமன் பிடிக்க வந்தான். அச்சமயத்தில் ஐயாற்று இறைவர் எமனை விலக்கி அச்சிறுவனை ஆட்கொண்டார். இந்த ஆட்கொண்டார் சந்நிதி தென் கோபுர வாயிலில் உள்ளது. இத்தலத்துப் பதிகம் (திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது) ஒன்றும் கொடுத்துள்ளோம்.

இப்பதிகங்களை ஓதிவந்தால் தீயகனவுகள், எமபயம் ஆகியவை ஏற்படா என்பது பலபேருடைய அனுபவமாகும்.

திருநாவுக்கரசு சுவாமிகள்
திருக்கடவூர்

மருள்துயர் தீரஅன்று அர்ச்சித்த மாணிமார்க்கண்டேயற்கு
ஆய்
இருட்டிய மேனிவளைவாள் எயிற்று எரிபோலும்குஞ்சிச்
சுருட்டிய நாவில் வெங் கூற்றம் பதைப்ப உதைத்து
உங்ஙனே
உருட்டிய சேவடியான் கடவூர் உறை உத்தமனே. 1

பதத்தெழு மந்திரம் அஞ்சுஎழுத்து ஓதிப் பரிவினொடும்
இதத்தெழு மாணிதன் இன்உயிர் உண்ண வெகுண்டு அடர்த்த
கதத்தெழு காலனைக் கண்குருதிப் புனல்ஆறு ஒழுக
உதைத்தெழு சேவடியான் கடவூர் உறை உத்தமனே. 2

கரப்புஉறு சிந்தையர் காண்டற்கு அரியவன் காமனையும்
நெருப்புமிழ் கண்ணினன் நீள்புனல் கங்கையும் பொங்குஅரவும்
பரப்பிய செஞ்சடைப் பால்வண்ணன் காலனைப் பண்டு ஒருகால்
உரப்பிய சேவடியான் கடவூர் உறை உத்தமனே. 3

மறித் திகழ் கையினன் வானவர்கோனை மன மகிழ்ந்து
குறித்தெழு மாணிதன் ஆர்உயிர் கொள்வான் கொதித்த சிந்தைக்
கறுத்தெழு மூஇலை வேல்உடைக்காலனைத் தான் அலற
உறுக்கிய சேவடியான் கடவூர் உறை உத்தமனே. 4

குழைத் திகழ் காதினன் வானவர்கோனைக் குளிர்ந்தெழுந்து
பழக்கமொடு அர்ச்சித்த மாணிதன் ஆர்உயிர் கொள்ளவந்த
தழல்பொதி மூஇலைவேல் உடைக் காலனைத் தான்அலற
உழக்கிய சேவடியான் கடவூர் உறை உத்தமனே. 5

பாலுனுக்காய் அன்று பாற்கடல் ஈந்து பணைத்து எழுந்த
ஆலினிற் கீழ் இருந்து ஆரணம் ஓதி அரு முனிக்காய்ச்
சூலமும் பாசமும் கொண்டு தொடர்ந்து அடர்ந்து ஓடிவந்த
காலனைக் காய்ந்த பிரான் கடவூர் உறை உத்தமனே. 6

படர்சடைக் கொன்றையும் பன்னகமாலை பணிகயிறா
உடைதலை கோத்துழல் மேனியன் உண்பலிக்கு என்று
உழல்வோன்
சுடர் பொதி மூஇலைவேல் உடைக்காலனைத் துண்டமதா
உடறிய சேவடியான் கடவூர் உறை உத்தமனே. 7

வெண்தலை மாலையுங்கங்கை கரோடி விரிசடைமேல்
பெண்தனி நாயகன் பேய் உகந்து ஆடும் பெருந்தகையான்
கண்தனி நெற்றியன் காலனைக் காய்ந்து கடலின்விடம்
உண்டு அருள்செய்த பிரான் கடவூர் உறை உத்தமனே. 8

கேழல்அதுஆகிக் கிளறிய கேசவன் காண்பரிதாய்
வாழிநல் மா மலர்க் கண்இடந்து இட்டஅம்
மால்அவற்குஅன்று
ஆழியும் ஈந்துஅடு திறல் காலனை அன்றுஅடர்த்து
ஊழியும் ஆயபிரான் கடவூர் உறை உத்தமனே. 9

தேன்திகழ் கொன்றையும் கூவிளமாலை திருமுடிமேல்
ஆன்திகழ்ஐந்து உகந்து ஆடும் பிரான் மலை ஆர்த்து எடுத்த
கூன்திகழ் வாள் அரக்கன் முடி பத்தும் குலைந்துவிழ
ஊன்றிய சேவடியான் கடவூர் உறை உத்தமனே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# தீய சொப்பனங்கள் எமபயம் ஏற்படுவதைத் தடுப்பதற்குரிய இரண்டாவது பதிகம்

திருநாவுக்கரசு சுவாமிகள்
திருவையாறு

விடகிலேன் அடிநாயேன் வேண்டியக்கால் யாதொன்றும்
இடைகிலேன் அமணர்கள்தம் அறவுரைகேட்டு அலமந்தேன்
தொடர்கின்றேன் உன்னுடைய தூமலர்ச்சே வடிகாண்பான்
அடைகின்றேன் ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே. 1

செம்பவளத் திருவுருவர் திகழ்சோதி குழைக்காதர்
கொம்பமரும் கொடிமருங்குல் கோல்வளையாள் ஒருபாகர்
வம்பவிழும் மலர்க்கொன்றை வளர்சடைமேல் வைத்துகந்த
அம்பவள ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே. 2

நணியானே சேயானே நம்பானே செம்பொன்னின்
துணியானே தோலானே சுண்ணவெண் ணீற்றானே
மணியானே வானவர்க்கு மருந்தாகிப் பிணிதீர்க்கும்
அணியானே ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே. 3

ஊழித்தீ யாய்நின்றாய் உள்குவார் உள்ளத்தாய்
வாழித்தீ யாய்நின்றாய் வாழ்த்துவார் வாயானே
பாழித்தீ யாய்நின்றாய் படர்சடைமேற் பனிமதியம்
ஆழித்தீ ஐயாறர்க்கு ஆளாய் நான் உய்ந்தேனே. 4

சடையானே சடையிடையே தவழும்தண் மதியானே
விடையானே விடையேறிப் புரமெரித்த வித்தகனே
உடையானே உடைதலை கொண்டு ஊருர்உண் பலிக்குழலும்
அடையானே ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே. 5

நீரானே தீயானே நெதியானே கதியானே
ஊரானே உலகானே உடலானே உயிரானே
பேரானே பிறைசூடீ பிணிதீர்க்கும் பெருமான்என்று
ஆராத ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே. 6

கண்ணானாய் மணியானாய் கருத்தானாய் அருத்தானாய்
எண்ணானாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோர்
இயல்பானாய்
விண்ணானாய் விண்ணிடையே புரமெரித்த வேதியனே
அண்ணான ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே. 7

மின்னானாய் உருவானாய் வேதத்தின் பொருளானாய்
பொன்னானாய் மணியானாய் பொருகடல்வாய் முத்தானாய்
நின்னானார் இருவருக்கும் காண்பரிய நிமிர்சோதி
அன்னானே ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே. 8

முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளம் கொழித்து உந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப் பலகாலும் பணிந்து ஏத்த
எத்திசையும் வானவர்கள் எம்பெருமான் எனஇறைஞ்சும்
அத்திசையாம் ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே. 9

கருவரைசூழ் கடல்இலங்கைக் கோமானைக் கருத்தழியத்
திருவிரலால் உதகரணம் செய்துகந்த சிவமூர்த்தி
பெருவரைசூழ் வையகத்தார் பேர்நந்தி என்றேத்தும்
அருவரைசூழ் ஐயாறர்க்கு ஆளாய்நான் உய்ந்தேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 29. திருமணம், அறுபது நிறைவு, எழுபது நிறைவு, எண்பது நிறைவு போன்ற மங்கலக் காரியங்களின் பொழுது பாட வேண்டிய அருந்தமிழ்ப் பதிகம்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் உமையொடு இறைவர் எழுந்தருளியுள்ளதைப் பாடியுள்ளார். மங்கல நிகழ்ச்சிகளில் இப்பதிகத்தை ஓதி நலம் பெறலாம். பெண்கள் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் வீட்டில் விளக்கேற்றி வைத்துவிட்டு, இப்பதிகத்தை ஓதிவரலாம். வீட்டில் மங்கலம் பெருகும் என்பது அனுபவமாகும்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருப்புகலி

கண்ணுத லானும்வெண் ணீற்றினானும் கழலார்க்கவே
பண்ணிசை பாடநின்று ஆடினானும் பரஞ்சோதியும்
புண்ணிய நான்மறை யோர்கள்ஏத்தும்புகலிந் நகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் வீற்றிருந்த பெருமானன்றே. 1

சாம்பலோ டும்தழல் ஆடினானும் சடையின்மிசைப்
பாம்பினோ டும்மதி சூடினானும் பசுஏறியும்
பூம்படுகல்இள வாளைபாயும் புகலிந்நகர்க்
காம்பன தோளியொ டும்இருந்த கடவுளன்றே. 2

கருப்புநல் வார்சிலைக் காமன்வேவக் கடைக்கண்டானும்
மருப்புநல்ஆனையின் ஈருரி போர்த்த மணாளனும்
பொருப்பன மாமணி மாடம்ஓங்கும் புகலிந்நகர்
விருப்பின் நல்லாளொடும் வீற்றிருந்த விமலனன்றே. 3

அங்கையில்இலங்குஅழல் ஏந்தினானும் அழகாகவே
கங்கையைச் செஞ்சடை சூடினானும் கடலின்இடைப்
பொங்கிய நஞ்சமுது உண்டவனும்புகலிந்நகர்
மங்கைநல் லாளொடும் வீற்றிருந்த மணவாளனே. 4

சாமநல் வேதனும் தக்கன்தன் வேள்வி தகர்த்தானும்
நாமம்நூறாயிரம் சொல்லிவா னோர்தொழு நாதனும்
பூமல்கு தண்பொழில் மன்னும் அந்தண்புகலிந்நகர்க்
கோமள மாதொடும் வீற்றிருந்த குழகனன்றே. 5

இரவிடை ஒள்ளெரி ஆடினானும் இமையோர்தொழச்
செருவிடை முப்புரம் தீயெரித்த சிவலோகனும்
பொருவிடை ஒன்றுஉகந்து ஏறினா னும்புக லிந்நகர்
அரவிடை மாதொடும் வீற்றிருந்த அழகனன்றே. 6

சேர்ப்பது திண்சிலை மேவினானும் திகழ் பாலன்மேல்
வேர்ப்பது செய்தவெங் கூற்றுதைத்தானும்வேள் விப்புகை
போர்ப்பது செய்தணி மாடம்ஓங்கும்புக லிந்நகர்ப்
பார்ப்பதி யோடுஉடன் வீற்றிருந்த பரம னன்றே. 7


கல்நெடு மால்வரைக் கீழ்அரக்கன் இடர்கண் டானும்
வில்நெடும் போர்விறல் வேடனாகி விசயற்கு ஒரு
பொன்நெடுங் கோல்கொடுத் தானும் அந்தண்புக லிந்நகர்
அன்னம்அன்னநடை மங்கையொடும் அமர்ந் தானன்றே. 8

பொன்நிற நான்முகன் பச்சையான் என்றிவர் புக்குழித்
தன்னை இன்னான்எனக் காண்பரிய தழல் சோதியும்
புன்னை பொன்தாது உதிர் மல்கும் அந்தண் புகலிந்நகர்
மின்னிடை மாதொடும் வீற்றிருந்த விமலனன்றே. 9

பிண்டியும் போதியும் பேணுவார் பேச்சினைப் பேணாததோர்
தொண்டரும் காதல்செய் சோதியாய சுடர்ச் சோதியான்
புண்டரீகம்மலர்ப் பொய்கை சூழ்ந்த புகலிந் நகர்
வண்டமர் கோதையோடும் இருந்த மணவாளனே. 10

பூங்கமழ் கோதையோடும் இருந்தான் புகலிந்நகர்ப்
பாங்கனை ஞானசம் பந்தன் சொன்னதமிழ் பத்திவை
ஆங்கு அமர்வு எய்திய ஆதியாக இசை வல்லவர்
ஓங்குஅமராவதியோர் தொழச்செல்வதும் உண்மையே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 30. குடியிருக்கும் வீட்டின் குறைபாடுகள் (வாஸ்து) நீங்குவதற்குரிய பதிகம்

திருஞானசம்பந்த சுவாமிகள் தாயார் பிறந்த ஊர் நனிபள்ளியில் (மாயவரம் அருகில் உள்ளது) நிலங்கள் யாவும் பாலை நிலமாகக் காணப்பட்டன. திருஞானசம்பந்த சுவாமிகள் நனிபள்ளிக்கு வந்தபொழுது, 'காரைகள்' எனத் தொடங்கும் இப்பதிகத்தைப் பாடினார். நனிபள்ளியிலிருந்த நிலங்களின் இயல்பு மாறி, விளைநிலங்களாகி விட்டன. செலவின்றி வீட்டின் குறை பாட்டினை (வாஸ்து குறையை) மாற்றும் வல்லமையை உடையது இந்தப்பதிகம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்

நனிபள்ளி

காரைகள் கூகைமுல்லை களவாகை யீகை
படர்தொடரிகள்ளி கவினிச்
சூரைகள் பம்மி விம்மு சுடுகாடமர்ந்த
சிவன்மேய சோலை நகர்தான்
தேரைகள் ஆரைசாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
நாரைகள் ஆரல்வாரி வயல்மேதிவைகும்
நனிபள்ளி போலும் நமர்காள். 1

சடையிடை புக்கொடுங்கி யுளதங்குவெள்ளம்
வளர்திங்கள் கண்ணிஅயலே
இடையிடை வைத்ததுஒக்கு மலர்தொத்து மாலை
இறைவன் இடங்கொள் பதிதான்
மடையிடை வாளைபாய முகிழ்வாய் நெரிந்து
மணம்நாறும் நீலம் மலரும்
நடையுடை அன்னம்வைகு புனலம் படப்பை
நனிபள்ளி போலும் நமர்காள். 2

பெறுமலர் கொண்டு தொண்டர் வழிபாடு செய்யல்
ஒழிபாடிலாத பெருமான்
கறுமலர் கண்டமாக விடமுண்ட காளை
யிடமாய காதல் நகர்தான்
வெறுமலர் தொட்டுவிட்ட விசைபோன கொம்பின்
விடுபோது அலர்ந்த விரைசூழ்
நறுமலர் அல்லி புல்லி ஒலிவண்டுறங்கு
நனிபள்ளி போலும் நமர்காள். 3

குளிர்தரு கங்கைதங்கு சடைமா டிலங்கு
தலைமாலை யோடு குலவி
ஒளிர்தரு திங்கள்சூடி உமைபாக மாக
உடையான் உகந்த நகர்தான்
குளிர்தரு கொம்மலோடு குயில்பாடல்கேட்ட
பெடைவண்டு தானும் முரல
நளிர்தரு சோலை மாலை நரைகுருகுவைகு
நனிபள்ளி போலும் நமர்காள். 4

தோடுஒரு காதன் ஆகி ஒருகாது இலங்கு
சுரிசங்கு நின்று புரளக்
காடிட மாகநின்று கனலாடும் எந்தை
இடமாய காதல் நகர்தான்
வீடுடன் எய்துவார்கள் விதியென்று சென்று
வெறிநீர் தெளிப்ப விரலால்
நாடுடன் ஆடு செம்மை ஒலிவெள்ளம் ஆரு
நனிபள்ளி போலும் நமர்காள். 5

மேகமொடு ஓடு திங்கள் மலரா அணிந்து
மலையான் மடந்தை மணிபொன்
ஆகமோர் பாகமாக அனலாடும் எந்தை
பெருமான் அமர்ந்த நகர்தான்
ஊகமொடு ஆடுமந்தி உகளும் சிலம்ப
அகிலுந்தி ஒண்பொன் இடறி
நாகமொடு ஆரம் வாரு புனல்வந்து அலைக்கும்
நனிபள்ளி போலும் நமர்காள். 6

தகைமலி தண்டுசூலம் அனல்உமிழுநாகம்
கொடுகொட்டி வீணைமுரல
வகைமலி வன்னி கொன்றை மதமத்தம் வைத்த
பெருமான் உகந்த நகர்தான்
புகைமலி கந்த மாலை புனைவார்கள் பூசல்
பணிவார்கள் பாடல் பெருகி
நகைமலி முத்திலங்கு மணல்சூழ்கிடக்கை
நனிபள்ளி போலும் நமர்காள். 7

வலமிகு வாளன் வேலன் வளைவாள்எயிற்று
மதியா அரக்கன் வலியோடு
உலமிகு தோள்கள் ஒல்க விரலால் அடர்த்த
பெருமான் உகந்த நகர்தான்
நிலமிகு கீழும் மேலும் நிகர்ஆதும் இல்லை
யெனநின்ற நீதி யதனை
நலமிகு தொண்டர் நாளும் அடிபரவல்செய்யும்
நனி பள்ளி போலும் நமர்காள். 8

நிறவுரு ஒன்று தோன்றி யெரியொன்றி நின்ற
தொருநீர்மை சீர்மை நினையார்
அறஉரு வேத நாவன் அயனோடு மாலும்
அறியாத அண்ணல் நகர்தான்
புறவிரி முல்லை மௌவல் குளிர்பிண்டி புன்னை
புனைகொன்றை துன்று பொதுளி
நறவிரி போதுதாது புதுவாசம் நாறும்
நனிபள்ளி போலும் நமர்காள். 9

அனமிகு செல்கு சோறு கொணர்கென்று கையில்
இடஉண்டு பட்ட அமணும்
மனமிகுகஞ்சி மண்டை அதிலுண்டு தொண்டர்
குணமின்றி நின்ற வடிவும்
வினைமிகு வேதம் நான்கும் விரிவித்த நாவின்
விடையான் உகந்த நகர்தான்
நனமிகு தொண்டர்நாளும் அடிபரவல்செய்யும்
நனிபள்ளி போலும் நமர்காள். 10

கடல்வரை ஓதம்மல்கு கழிகானல் பானல்
கமழ்காழி யென்று கருதப்
படுபொருள் ஆறும்நாலும் உளதாக வைத்த
பதியான ஞான முனிவன்
இடுபறை ஒன்ற அத்தர் பியன்மேலிருந்து
இன்இசையால் உரைத்த பனுவல்
நடுஇருள் ஆடும் எந்தை நனிபள்ளிஉள்க
வினைகெடுதல் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 31. கண்திருஷ்டி, செய்வினைகள் நீங்குவதற்கு உதவும் பதிகம்

"கருக்குடி" எனும் சிவத்தலம் கும்பகோணம் - மன்னார்குடி சாலையில் உள்ளது. இத்தலம் திருஞான சம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்றதாகும். மணல் இலிங்கம்.

கண்திருஷ்டி - கண்ணேறு போன்றவற்றால் துன்பப்படும் அன்பர்கள் பாராயணம் செய்து நலம் பெறலாம். வீட்டின் முகப்பில் கயிறு கட்டுதல், அகோரமான படம் வைத்தல் முதலியன வேண்டாம்.

**திருஞானசம்பந்த சுவாமிகள்**

**திருக்கருக்குடி**

நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்குவந்து எய்தும் நின்மலன்
கனைகடல் வையகம் தொழுகருக்குடி
அனலெரி யாடும்எம் அடிகள் காண்மினே. 1

வேதியன் விடைஉடை விமலன் ஒன்னலர்
மூதெயில் எரியெழ முனிந்த முக்கணன்
காதுஇயல் குழையினன் கருக்குடிஅமர்
ஆதியை அடிதொழ அல்லல் இல்லையே. 2

மஞ்சுறு பொழில்வளம் மலிகருக்குடி
நஞ்சுறு திருமிடறுடைய நாதனார்
அஞ்சுரும்பார்குழல் அரிவை அஞ்சவே
வெஞ்சுரம் தனில்விளையாடல் என்கொலோ. 3

ஊனுடைப் பிறவியை அறுக்க உன்னுவீர்
கானிடை ஆடலான் பயில்க ருக்குடிக்
கோனுயர் கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழுகழல் வாழ்த்தி வாழ்மினே. 4

சூடுவர் சடையிடைக் கங்கை நங்கையைக்
கூடுவர் உலகிடை ஐயங் கொண்டொலி
பாடுவர் இசைபறை கொட்ட நட்டிருள்
ஆடுவர் கருக்குடி அண்ணல் வண்ணமே. 5

இன்புடை யார்இசை வீணை பூண்அரா
என்புடை யார்எழில் மேனி மேலெரி
முன்புடை யார்முதல் ஏத்தும் அன்பருக்கு
அன்புடை யார்கருக் குடியெம் அண்ணலே. 6

காலமும் ஞாயிறும் தீயும் ஆயவர்
கோலமும் முடியரவு அணிந்த கொள்கையர்
சீலமும் உடையவர் திருக்க ருக்குடிச்
சாலவும் இனிது அவ ருடைய தன்மையே. 7


எறிகடல் புடைதழுவு இலங்கை மன்னனை
முறிபட வரையிடை அடர்த்த மூர்த்தியார்
கறைபடு பொழில்மதி தவழ்கருக்குடி
அறிவொடு தொழுமவர் ஆள்வர் நன்மையே. 8

பூமனும் திசைமுகன் தானும் பொற்பமர்
வாமனன் அறிகிலா வண்ணம் ஓங்குஎரி
ஆம்என உயர்ந்தவன் அணிகருக்குடி
நாம் மனம் தனில்வர நினைதல் நன்மையே. 9

சாக்கியர் சமண்படு கையர் பொய்ம்மொழி
ஆக்கிய உரைகொளேல் அருந்திருந்நமக்கு
ஆக்கிய அரனுறை அணிகருக்குடிப்
பூக்கமழ் கோயிலே புடைபட்டு உய்ம்மினே. 10

கானலில் விரைமலர் விம்மு காழியான்
வானவன் கருக்குடி மைந்தன் தன்னொளி
ஆனமெய்ஞ் ஞான சம்பந்தன் சொல்லிய
ஊனமில் மொழிவலார்க்கு உயரும் இன்பமே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 32. பில்லி, சூனியம், ஏவல் ஆகியவற்றால் பாதிக்கப் படாமலிருக்க உதவும் பதிகம்

புதுக்கோட்டையிலிருந்து காரைக்குடி தேவகோட்டை வழியாக இராமநாதபுரச் சாலையில் உள்ள சிவத்தலம் "திருவாடானை" (ஆடானை) தேவகோட்டையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. திருஞான சம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்றது.

வருணன் மகன் "வாருணி" என்பவன். இவன் துருவாச முனிவரைப் பழித்ததால், ஆனை உடலும் ஆட்டுத் தலையும் பெறுமாறு சாபம் பெற்றான். ஆடானை நாதரை வணங்கி இச்சாபம் நீங்கப் பெற்றான்.

இதற்கு ஏற்றாற்போல, திருஞான சம்பந்த சுவாமிகள் அருளியுள்ள இத்தலத்துப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் வினைமாயுமே, வினைவீடுமே, வினை தேயுமே என்று பாடியுள்ளதைக் காணமுடிகிறது. இப்பதிகப் பாராயணத்தால் பில்லி, சூனியம், ஏவல் ஆகிய எந்தவித தீய சக்தியினாலும் பாதிக்கப்படாமல் வாழலாம் என்பது பலருடைய அனுபவம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருவாடானை

மாதோர்கூறுகந்து ஏறுஅதுஏறிய
ஆதியான்உறை ஆடானை
போதினால்புனைந்து ஏத்துவார்தமை
வாதியாவினை மாயுமே. 1

வாடல்வெண்தலை அங்கை யேந்திநின்று
ஆட லானுறை ஆடானை
தோடு லாமலர் தூவிக் கைதொழ
வீடும் நுங்கள் வினைகளே. 2

மங்கை கூறினன் மான்மறிஉடை
அங்கை யான்உறை ஆடானை
தம்மை யால்தொழுது ஏத்தவல்லவர்
மங்கு நோய்பிணி மாயுமே. 3

சுண்ண நீறணி மார்பில் தோல்புனை
அண்ண லான்உறை ஆடானை
வண்ண மாமலர் தூவிக் கைதொழ
எண்ணு வார்இடர் ஏகுமே 4

கொய்ய ணிம்மலர்க் கொன்றை சூடிய
ஐயன் மேவிய ஆடானை
கைய ணிம்மல ரால்வணங்கிட
வெய்ய வல்வினை வீடுமே. 5

வான்இளம்மதி மல்கு வார்சடை
ஆன் அஞ்சு ஆடலன் ஆடானை
தேன் அணிம் மலர்சேர்த்த முன்செய்த
ஊனம் உள்ள ஒழியுமே. 6

துலங்கு வெண்மழு ஏந்திச் சூழ்சடை
அலங்க லான்உறை ஆடானை
நலங்கொள் மாமலர் தூவி நாள்தொறும்
வலங்கொள்வார்வினை மாயுமே. 7

வெந்த நீறணி மார்பில் தோல்புனை
அந்தம் இல்லவன் ஆடானை
கந்த மாமலர் தூவிக் கைதொழும்
சிந்தை யார்வினை தேயுமே. 8

மறைவலாரொடு வானவர் தொழுது
அறையும் தண்புனல் ஆடானை
உறையும் ஈசனை யேத்தத் தீவினை
பறையும் நல்வினை பற்றுமே. 9

மாயனும் மலரானும் கைதொழ
ஆய அந்தணன் ஆடானை
தூய மாமலர் தூவிக் கைதொழத்
தீய வல்வினை தீருமே. 10

வீடினார்மலி வேங்க டத்துநின்று
ஆட லான்உறை ஆடானை
நாடி ஞானசம் பந்தன் செந்தமிழ்
பாட நோய்பிணி பாறுமே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 33. விரோதிகளை வெற்றி கொள்ள உதவும் பதிகம்

திருச்சி – தஞ்சை சாலையில் உள்ளது. திருவெறும்பூர் (எறும்பியூர்) எனும் சிவத்தலம். மலைமீது ஆலயம் அமைந்துள்ளது. தென்கயிலாயம் எனப்போற்றப்படுகின்றது. திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடல் பெற்றது.

தேவர்களுக்குத் தொல்லை கொடுத்த தாருகாசுரன் ஒழிய வேண்டும் என்று இந்திரன் முதலான தேவர்கள் எறும்பு வடிவம் கொண்டு (அசுரர்களுக்குத் தெரியாமலிருக்கும் பொருட்டு) இத்தலத்து இறைவரை – எறும்பீசரை வணங்கி நலம் பெற்றார்கள். தேவர்களின் பகைவனான தாருகன் அழிந்தான்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியுள்ள இத்தலத்துக்குப் பதிகம் (திருத்தாண்டகம்) அளிக்கப் பட்டுள்ளது. படிக்கும் பொழுதே மனதில் இனம்புரியாத இன்பம் விளங்குவதை யாவரும் உணரலாம். எதிரிகளும் நண்பராவார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள்
திருவெறும்பியூர்

பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்நிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியும் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந் தேனைத் தொடர்ந்தென்னை ஆளாக்கொண்ட
தென்எறும்பியூர் மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 1

பளிங்கின்நிழ லுட்பதித்த சோதி யானைப்
பசுபதியைப் பாசுபத வேடத் தானை
விளிந்தெழுந்த சலந்தரனை வீட்டினானை
வேதியனை விண்ணவனை மேவி வையம்
அளந்தவனை நான்முகனை அல்லல் தீர்க்கும்
அருமருந்தை ஆமாறு அறிந்துஎன் உள்ளம்
தெளிந்துஎறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 2

கருவையென்தன் மனந்திருந்த கருத்தை ஞானக்
கடுஞ்சுடரைப் படிந்துகிடந்து அமரர் ஏத்தும்
உருவைஅண்டத்து ஒருமுதலை ஓத வேலி
உலகில்நிறை தொழில்இறுதி நடுவாய் நின்ற
மருவைவென்ற குழல்மடவாள் பாகம் வைத்த
மயானத்து மாசிலா மணியை வாசத்
திருவெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 3

பகழிவொழிந்து அடலரக்கர் புரங்கள் மூன்றும்
பாழ்படுத்த பரஞ்சுடரைப் பரிந்து தன்னைப்
புகழும்அன்பர்க்கு இன்பமரும் அமுதைத் தேனைப்
புண்ணியனைப் புவனியது முழுதும் போக
உமிழும் அம்பொற் குன்றத்தை முத்தின் தூணை
உமையவள்தம் பெருமானை இமையோர் ஏத்தும்
திகழ்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 4

பாரிடங்க ளுடன்பாடப் பயின்று நட்டம்
பயில்வானை அயில்வாய சூலம் ஏந்தி
நேரிடும்போர் மிகவல்ல நிமலன் தன்னை
நின்மலனை அம்மலர்கொண்டு அயனும் மாலும்
பார்இடந்தும் மேலுயர்ந்துங் காணா வண்ணம்
பரந்தானை நிமிர்ந்துமுனி கணங்கள் ஏத்துஞ்
சீர்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 5

கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்த முந்நீர்
கரப்பானைக் கடியநடை விடையொன்று ஏறி
ஊர்பலவுந் திரிவானை ஊர தாக
ஒற்றியூர் உடையனாய் முற்றும் ஆண்டு
பேரெழுத்துஒன் றுடையானைப் பிரம னோடு
மாலவனும் இந்திரனும்மந் திரத்தால் ஏத்துஞ்
சீர்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 6

நீள்நிலவும் அந்தீயும் நீரும் மற்றை
நெறியிலங்கும் இருகாலும் ஆகாசம்மும்
வாள்நிலவு தாரகையும் மண்ணும் விண்ணும்
மன்னுயிரும் என்னுயிருந் தானாம் செம்பொன்
ஆணியென்றும் அஞ்சனமா மலையே யென் றும்
அம்பவளத் திரளென்றும் அறிந்தோர் ஏத்தும்
சேண்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 7

அறம்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை
    ஆரம்பக் குண்டரோடு அயர்த்து நாளும்
மறந்தும்அரன் திருவடிகள் நினைய மாட்டா
    மதியிலியேன் வாழ்வெலாம் வாளா மண்மேற்
பிறந்தநாள் நாளல்ல வாளா ஈசன்
    பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்துள் அன்பு
செறிந்துஎறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
    செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 8

அறிவுஇலங்கு மனத்தானை அறவாவர்க்குஅன்றி
    அறியாதார் தம்திறத்துஒன் றறியா தானைப்
பொறியிலங்கு வாளரவம் புனைந்து பூண்ட
    புண்ணியனைப் பொருதிரைவாய் நஞ்சம் உண்ட
குறியிலங்கு மிடற்றானை மடல்தேன் கொன்றைச்
    சடையானை மடைதோறுங் கமல மென்பூச்
செறியெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
    செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 9

அருந்தவத்தின் பெருவலியால் அறிவது அன்றி
    அடலரக்கன் தடவரையை யெடுத்தான் திண்தோள்
முரிந்துநெரிந் தழிந்துபா தாள முற்று
    முன்கைநரம் பினையெடுத்துக் கீதம் பாட
இருந்தவனை யேழுலகும் ஆக்கி னானை
    யெம்மானைக் கைம்மாவி னுரிவை போர்த்த
திருந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
    செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 34. குடித்தல், புகைத்தல் போன்ற தீய பழக்கங்கள் நீங்குவதற்குரிய அற்புதப் பதிகம்

சைவமும் தமிழும் இனிதே தலைழத்தோங்கச் சீர்காழியில் அவதாரம் செய்தவர் திருஞானசம்பந்த சுவாமிகள். அந்தத் தலத்திற்கு பன்னிரண்டு பெயர்கள் உண்டு. அந்தப் பன்னிரண்டு பெயர்களைச் சொன்னாலே எல்லா நலன்களும் கைகூடும் என்பார் ஞானசம்பந்த சுவாமிகள். (1) சோதிர்லிங்கங்கள் பன்னிரண்டு (2) சூரியன் பன்னிருவர் (3) திருமுறைகள் பன்னிரண்டு (4) இராசிகள் பன்னிரண்டு (5) அகத்தியரின் மாணவர் பன்னிருவர் (6) மாதங்கள் பன்னிரண்டு (7) சீர்காழித்தலத்திற்கும் பன்னிரண்டு பெயர்கள்.

திருஞானசம்பந்த சுவாமிகள் இத்தலத்தில் அருளியுள்ள பதிகங்கள் பலவாகும். அவற்றுள் "சக்கரமாற்று" எனும் ஒரு அரிய பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

சீர்காழியின் பன்னிரண்டு பெயர்களும் சக்கரம் போலச் சுழன்று வருமாறு பாடியருளிய சித்திரக்கவி. படித்தாலும், பக்கம் நின்று கேட்டாலும் தேனாய்த் தித்திக்கும் அதிமதுரப் பதிகம் இப்பதிகம். இப்பதிகத்தைப் படிப்பதற்கே ஒரு புண்ணியம் வேண்டும். தீய பழக்கங்கள் யாவும் தானே விலகிவிடும்.

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருப்பிரமபுரம்

பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி
புரம்மன்னு பூந்தராய் பொன்அம் சிரபுரம் புறவம் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவயம் உள்ளிட்டங்கு ஆதி
யாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலம் நாம் பரவும்
ஊரே. 1

வேணுபுரம் பிரமனூர் புகலிவெரு வெங்குரு வெள்ளத்து
ஓங்கும்
தோணிபுரம் பூந்தராய் தூநீர்ச் சிரபுரம் புறவம் காழி
கோணிய கோட்டாற்றுக் கொச்சை வயம் சண்பை சூரும்
செல்வம்
காணிய வையகத்தார் ஏத்தும் கழுமலம் நாம் கருதும் ஊரே. 2

புகலி சிரபுரம் வேணுபுரம் சண்பை புறவம் காழி
நிகரில் பிரமபுரம் கொச்சைவய(ம்) நீர்மேல் நின்ற மூதூர்
அகலிய வெங்குருவோடு அந்தண் தராய் அமரர்
பெருமாற்கு இன்பம்
பகரும் நகர்நல்ல கழுமலம் நாம் கைதொழுது பாடும் ஊரே. 3

வெங்குருத் தண்புகலி வேணுபுரம் சண்பை வெள்ளம்
கொள்ளத்
தொங்கிய தோணிபுரம் பூந்தராய் தொகுபிரம புரம் தொல் காழி
தங்கு பொழிற் புறவம் கொச்சை வயம்தலைபண்டு ஆண்ட
மூதூர்
கங்கை சடைமுடிமேல் ஏற்றான் கழுமலம் நாம் கருதும் ஊரே. 4

தொல்நீரில் தோணிபுரம் புகலி வெங்குருத் துயர்தீர் காழி
இன்னீர வேணுபுரம் பூந்தராய் பிரமனூர் எழிலார் சண்பை
நன்னீர பூம்புறவம் கொச்சை வயம்சிலம்பன் நகராம் நல்ல
பொன்னீர புன்சடையான் பூந்தண் கழுமலம் நாம் புகழும்
ஊரே. 5

தண்ணந் தராய்புகலி தாமரையான் ஊர்சண்பை தலைமுன்
ஆண்ட
அண்ணல் நகர்கொச்சை வயம்தண் புறவம்சீர் அணிஆர்
காழி
விண்ணியல்சீர் வெங்குரு நல் வேணுபுரம் தோணிபுரம்
மேலார் ஏத்து
கண்ணுதலான் மேவியநல் கழுமலம்நாம் கைதொழுது
கருதும் ஊரே.6

சீரார் சிரபுரமும் கொச்சைவயம் சண்பையொடு புறவம் நல்ல
ஆராத் தராய்பிரம னூர்புகலி வெங்குருவொடு அந்தண் காழி
ஏரார் கழுமலமும் வேணுபுரம் தோணிபுரம் என்றென்று
உள்கிப்
பேரால் நெடியவனு(ம்) நான்முகனும் காண்பரிய பெருமான்
ஊரே. 7

புறவம் சிரபுரமும் தோணிபுரம் சண்பைமிகு புகலி காழி
நறவம் மிகு சோலைக் கொச்சைவயம்தராய் நான்மு
கன்தனூர்
விறலாய வெங்குருவும் வேணுபுரம் விசயன் மேல்அம்பு
எய்து
திறலால் அரக்கனைச் செற்றான்தன் கழுமலம் நாம்சேரும்
ஊரே. 8

சண்பை பிரமபுரம் தண்புகலி வெங்குருநற் காழி சாயாப்
பண்பார் சிரபுரமும் கொச்சை வயம்தராய் புறவம் பார்மேல்
நண்பார் கழுமலம்சீர் வேணுபுரம் தோணிபுர(ம்) நாணி லாத
வெண்பல் சமணரொடு சாக்கியரை வியப்பழித்த விமலன்
ஊரே. 9

செழுமலிய பூங்காழி புறவம் சிரபுரம்சீர்ப் புகலி செய்ய
கொழுமலரான் நன்னகரம் தோணிபுரம் கொச்சைவயம்
சண்பை யாய
விழுமியசீர் வெங்குருவொடு ஓங்குதராய் வேணுபுரம்
மிகுநன் மாடக்
கழுமலம் என்று இன்னபெயர் பன்னிரண்டும்
கண்ணுதலான் கருதும் ஊரே. 10

கொச்சை வயம்பிரம னூர்புகலி வெங்குருப் புறவம் காழி
நிச்சல் விழவுஓவா நீடார் சிரபுரம் நீள் சண்பை மூதூர்
நச்சினிய பூந்தராய் வேணுபுரம் தோணிபுர மாகி நம்மேல்
அச்சங்கள் தீர்த்தருளும் அம்மான் கழுமலம் நாம் அமரும்
ஊரே. 11

காவி மலர்புரையும் கண்ணார் கழுமலத்தின் பெயரை நாளும்
பாவியசீர்ப் பன்னிரண்டு நன்னூலாப் பத்திமையால் பனுவல்
மாலை
நாவில்நலம் புகழ்சீர் நான்மறையான் ஞானசம் பந்தன்
சொன்ன
மேவி இசை மொழிவார் விண்ணவரில் எண்ணுதலை
விருப்புளாரே. 12

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 35. வழிப்பயணம் இனிதே அமைவதற்கு உதவும் பதிகம்

திருநாவுக்கரசு சுவாமிகள் சூலை நோயைத் தீர்த்தருளிய தலம் திருவதிகை வீரட்டானம். இத்தலம் பண்ருட்டி – கடலூர் சாலையில் அமைந்துள்ளது. இத்தலத்திற்குரிய பதிகங்கள் பல உள்ளன. இவற்றுள் திருவடித் திருத்தாண்டகம் எனப் போற்றப்படும் பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. 'திருவடி என்றால் திருவருள் அல்லது இறையருள் என்பது பொருளாகும்.

இப்பதிகம் முழுவதும் இறைவருடைய திருவடியை அல்லது திருவருளையே நாவுக்கரசர் வியந்து போற்றியுள்ளார். வழிப்பயணம் (பிரயாணம்) செல்வதற்கு முன் இப்பதிகத்தை ஒருமுறை ஓதிவிட்டுச் செல்ல வேண்டும். பயணத்தில் எந்தவித இடர்ப்பாடும் நிச்சயமாக ஏற்படாது.

இறைவருடைய திருவருள் முன்னின்று காக்கும் என்பதை உறுதியாக நம்பலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்
திருவதிகை வீரட்டானம்

அரவணையான் சிந்தித்து அரற்றும்அடி
அருமறையான் சென்னிக்கு அணியாம்அடி
சரவணத்தான் கைதொழுது சாரும்அடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணாம்அடி
பரவுவார் பாவம் பறைக்கும்அடி
பதினெண் கணங்களும் பாடும்அடி
திரைவிரவு தென்கெடில நாடன் அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி. 1

கொடுவினையார் என்றுங் குறுகாஅடி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும்அடி
படுமுழவம் பாணி பயிற்றும்அடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தஅடி
கடுமுரண் ஏறூர்ந்தான் கழற்சேவடி
கடல்வையங் காப்பான் கருதும்அடி
நெடுமதியங் கண்ணி அணிந்தானடி
நிறைகெடில வீரட்டம் நீங்காஅடி. 2

வைதெழுவார் காமம்பொய் போகாஅடி
வஞ்ச வலைப்பாடொன் றில்லாஅடி
கைதொழுது நாமேத்திக் காணும்அடி
கணக்கு வழக்கைக் கடந்தஅடி
நெய்தொழுது நாமேத்தி ஆட்டும்அடி
நீள்விசும்பை ஊடறுத்து நின்றஅடி
தெய்வப் புனற்கெடில நாடன்அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்அடி. 3

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்அடி
அழகுஎழுத லாகா அருட் சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தஅடி
சோமனையுங் காலனையுங் காய்ந்தஅடி
வெரும்பித்தர் சுவடிப் பிதற்றும் அடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்லஅடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன்அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்அடி. 4

ஒருகாலத்து ஒன்றாகி நின்றஅடி
ஊழிதோர் ஊழி உயர்ந்தஅடி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும்அடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவ்வடி
இருநிலத்தார் இன்புற்றங்கு ஏத்தும்அடி
இன்புற்றார் இட்டபூ ஏறும்அடி
திருவதிகைத் தென்கெடில நாடன்அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்அடி. 5

திருமகட்குச் செந்தா மரையாம்அடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும்அடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்றஅடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவ்வடி
உருவிரண்டும் ஒன்றோடு ஒன்று ஒவ்வா அடி
உருவென்று உணரப் படாதஅடி
திருவதிகைத் தென்கெடில நாடன்அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்அடி. 6

உரைமாலை யெல்லாம் உடையஅடி
உரையால் உணரப் படாதஅடி
வரைமாதை வாடாமை வைக்கும்அடி
வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும்அடி
அரைமாத் திரையில் அடங்கும்அடி
அகலம் அளக்கிற்பார் இல்லா அடி
கரைமாங் கலிக்கெடில நாடன்அடி
கமழ்வீரட் டானக் கபாலியடி. 7

நறுமலராய் நாறும் மலர்ச்சேவடி
நடுவாய் உலகநா டாயஅடி
செறிகதிரும் திங்களுமாய் நின்றஅடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்தஅடி
மறுமதியை மாசு கழுவும்அடி
மந்திரமுந் தந்திரமும் ஆயஅடி
செறிகெடில நாடர் பெருமானடி
திருவீரட் டானத்துளம் செல்வன்அடி. 8

அணியனவுஞ் சேயனவும் அல்லாஅடி
அடியார்கட்கு ஆரமுத மாயஅடி
பணிபவர்க்குப் பாங்காக வல்லஅடி
பற்றற்றார் பற்றும் பவளஅடி
மணியடி பொன்னடி மாண்பாம்அடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லஅடி
தணியாடு தண்கெடில நாடன்அடி
தகைசார்வீ ரட்டத் தலைவன் அடி. 9

அந்தா மரைப்போ தலர்ந்தஅடி
அரக்கனையும் ஆற்றல் அழித்தஅடி
முந்தாகி முன்னே முளைத்தஅடி
முழங்குஅலாய் நீண்டஎம் மூர்த்தியடி
பந்தாடு மெல்விரலாள் பாகன்அடி
பவளத் தடவரையே போல்வான்அடி
வெந்தார் சுடலைநீ றாடும்அடி
வீரட்டங் காதல் விமலன்அடி. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

## 36. வழக்குகளில் வெற்றி பெறுவதற்கு உதவும் பதிகம்

கும்பகோணம் - திருவையாற்றுச் சாலையில் **புறம்பயம்** எனும் சிவத்தலம் உள்ளது. செட்டிப் பெண் ஒருவரின் திருமணத்திற்கு இத்தலத்து இறைவர் சாட்சி சொன்னார். ஆதலால் "சாட்சிநாதர்" எனப்படுகிறார்.

மூவராலும் பாடல் பெற்ற தலம். இங்கு சுந்தரர் அருளிய பதிகம் கொடுக்கப்பட்டுள்ளது. எத்தகைய வழக்கிலும் வெற்றியைத் தேடித்தரும் இப்பதிகம். இறைவர் சாட்சியாயிருந்து நலம் அருளுவார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
திருப்புறம்பயம்

அங்கம்ஓதிஓர் ஆறைமேற்றளி நின்றும்போந்துவந்து
இன்னம்பர்த்
தங்கினோமையும் இன்னதென்றிலர் ஈசனார்எழு நெஞ்சமே
கங்குல்ஏமங்கள் கொண்டுதேவர்கள் ஏத்திவானவர்
தாம்தொழும்
பொங்குமால்விடை ஏறிசெல்வப் புறம்பயம்தொழப் போதுமே. 1

பதியும்சுற்றமும் பெற்றமக்களும் பண்டையார் அலர்
பெண்டிரும்
நிதியில்இம்மனை வாழும்வாழ்க்கையும் நினைப்பொழிமட
நெஞ்சமே
மதியம்சேர்சடைக் கங்கையாடன்இடம் மகிழும்மல்லிகை
செண்பகம்
புதியபூமலர்ந்து எல்லிநாறும் புறம்பயம்தொழப் போதுமே. 2

புறம்திரைந்து நரம்பெழுந்து நரைத்துநீஉரையால்தளர்ந்து
அறம்புரிந்து நினைப்பதுஆண்மை அரிதுகாண்இஃது
அறிதியேல்
திறம்பியாதுஎழு நெஞ்சமேசிறு காலைநாம்உறு வாணியம்
புறம்பயத்துறை பூதநாதன் புறம்பயம்தொழப் போதுமே. 3

குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள்சூழ்ந்த
களவுஎலாம்
செற்றொருவரைச் செய்ததீமைகள் இம்மையேவரும்
திண்ணமே
மற்றொருவரைப் பற்றிலேன்மறவாதுஎழுமட நெஞ்சமே
புற்றுஅரவுடைப் பெற்றம்ஏறி புறம்பயம்தொழப் போதுமே. 4

கள்ளிநீசெய்த தீமைஉள்ளன பாவமும்பறையும்படி
தெள்ளிதாஎழு நெஞ்சமே செங்கண் சேவுடைச்சிவ
லோகன்ஊர்
துள்ளிவெள்இள வாளைபாய்வயல் தோன்றுதாமரைப்
பூக்கள்மேல்
புள்ளிநள்ளிகள் பள்ளிகொள்ளும் புறம்பயம்தொழப்
போதுமே. 5

படையெலாம்பகடார ஆளிலும் பௌவஞ்சூழ்ந்து அரசாளிலும்
கடையெலாம் பிணைத் தேரைவால்கவலாதுஎழுமட நெஞ்சமே
மடையெலாம்கழு நீர்மலர்ந்து மருங்கெலாம்கரும்பு ஆடத்தேன்
புடையெலாம்மணம் நாறுசோலைப் புறம்பயம்தொழப்
போதுமே. 6

முன்னைச் செய்வினை இம்மையில்வந்து மூடும்ஆதலின் முன்னமே
என்னைநீ தியக்காதுஎழுமட நெஞ்சமேஎந்தை தந்தையூர்
அன்னச்சேவலோடு ஊடிப்பேடைகள் கூடிச்சேரும் அணிபொழில்
புன்னைக்கன்னி கழிக்கண்நாறும் புறம்பயம்தொழப் போதுமே. 7

மலம்எலாம் அறும் இம்மையேமறு மைக்கும்வல்வினை சார்கிலா
சலம்எலாம்ஒழி நெஞ்சமேஎங்கள் சங்கரன்வந்து தங்கும்ஊர்
கலம்எலாம்கடல் மண்டுகாவிரி நங்கைஆடிய கங்கைநீர்
புலம்எலாம்மண்டிப் பொன்விளைக்கும் புறம்பயம்தொழப் போதுமே. 8

பண்டுஅரியன செய்ததீமையும் பாவமும்பறையும்படி
கண்டரியன கேட்டியேல்கவலா துஎழுமட நெஞ்சமே
தொண்டரியன பாடித்துள்ளிநின்று ஆடிவானவர் தாம்தொழும்
புண்டரீகம் மலரும்பொய்கைப் புறம்பயம்தொழப் போதுமே. 9

துஞ்சியும்பிறந்தும்சிறந்தும் துயக்கு அறாத மயக்கிவை
அஞ்சிஊரன் திருப்புறம்பயத்து அப்பனைத்தமிழ்ச் சீரினால்
நெஞ்சினாலே புறம்பயம்தொழுது உய்தும்என்று நினைத்தன
வஞ்சியா துஉரை செய்யவல்லர் வல்லவானுலகு ஆள்வரே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 37. இழந்த பொருளை மீண்டும் பெறுவதற்கு உதவும் பதிகம்

திருச்சி மாநகருக்கு அருகில் உள்ளதலம் திருஆனைக்கா என்பது. மூவராலும் பாடல் பெற்றது. உறையூர்ச் சோழஅரசன் மணிஆரம் (மணிமாலை) அணிந்து கொண்டு காவிரியில் நீராடினார். ஆரம் ஆற்றில் விழுந்து விட்டது. அரசர், "சிவபெருமானாரே ஆரம் கொண்டருளும்" என்றார்.

அச்சமயம் பூசகர் காவிரியில் நீர் எடுத்தார். அக்குடத்தில் ஆரம் புகுந்தது. இறைவருக்கு அபிசேகம் செய்த பொழுது மணிமாலை திருமேனிமீது விழுந்தது.

சுந்தரர் அருளிய இத்தலத்துப் பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதிகத்தைப் பாராயணம் செய்தால், கைவிட்டுப்போன பொருள் எதுவாகிலும் சரி, மீண்டும் பெறலாம். பலர் பயன் பெற்றுள்ளார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
திருவானைக்கா

மறைகள் ஆயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாம்
துறையும் தோத்திரத்து இறையும் தொன்மையும்
நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றுஅடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 1

வங்கம் மேவிய வேலை நஞ்செழ வஞ்சர்கள் கூவிடத்
தங்கள் மேல்அடராமை உன்என உண்டிருள் கண்டன்
அங்கம் ஓதிய ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எங்கள் ஈசன்என்பார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 2

நீல வண்டறை கொன்றை நேரிழை மங்கைஓர் திங்கள்
சால வாள் அரவங்கள் தங்கிய செஞ்சடை எந்தை
ஆல நீழலுள் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
ஏலு மாறுவல்லார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 3

தந்தை தாய்உல குக்குஓர் தத்துவன் மெய்த்தவத்
தோர்க்குப்
பந்தம் ஆயின பெருமான் பரிசுடை யவர்திரு வடிகள்
அந்தண் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எந்தை என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 4

கணைசெந்தீ அரவம்நாண் கல்வளையும்சிலை யாகத்
துணைசெய் மும்மதில் மூன்றும் சுட்டவனேஉலகு உய்ய
அணையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இணைகொள் சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடை
யாரே. 5

விண்ணின் மாமதி சூடி விலைஇலி கலன்அணி விமலன்
பண்ணின் நேர்மொழி மங்கை பங்கினன் பசுவுகந்துஏறி
அண்ண லாகிய ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எண்ணு மாறுவல் லார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 6

தார மாகிய பொன்னித் தண்துறை ஆடி விழுத்தும்
நீரில் நின்றடி போற்றி நின்மலா கொள்என ஆங்கே
ஆரங் கொண்டஎம் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே. 7

உரவம் உள்ளதோர் உழையின் உரிபுலி அதள்உடையானை
விரைகொள் கொன்றையி னானை விரிசடை மேற்பிறை
யானை
அரவம் வீக்கிய ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இரவும் எல்லியும் பகலும் ஏத்துவார் எமைஉடை யாரே. 8

வலம்கொள் வார்அவர் தங்கள் வல்வினை தீர்க்கும்
மருந்து
கலங்கக் காலனைக் காலால் காமனைக் கண்சிவப் பானை
அலங்கல் நீர்பொரும் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 9

ஆழி யாற்குஅருள் ஆனைக் காவுடை ஆதிபொன் அடியின்
நீழலேசரணாக நின்றருள் சுவர நினைந்து
வாழ வல்லவன் தொண்டன் வண்தமிழ் மலைவல்லார்போய்
ஏழுமாபிறப்பு அற்று எம்மையும் ஆளுடை யாரே. 10

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

## 38. இடி, மின்னல், போன்ற இயற்கைச் சீற்றங்களால் தீமை ஏற்படாதிருக்க உதவும் பதிகம்

திருநாவுக்கரசு சுவாமிகள் 'திருநல்லம்' பதிகத்தில் ஒரு அரிய கருத்தினைக் கூறியுள்ளார். சிவபெருமானாருடைய திருஐந்தெழுத்தினை (சிவாயநம அல்லது நமச்சிவாய) இயன்ற அளவு சொல்லிவந்தால், ஐம்பூதங்களால் நமக்குத் துன்பங்கள் வாரா என்பதே ஆகும்.

பாடல் : அல்லலாக ஐம்பூதங் களாட்டினும்
வல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே.

(அல்லல் = துன்பம்; வினைப்பகை = வினையால் வரும் துன்பம்; வீடும் = அழியும்)

எனவே, திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய நமச்சிவாயப் பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதிகத்தைப் பாராயணம் செய்பவர்களுக்கு, ஐம்பூதங்களாகிய மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றால் எப்பொழுதும் தீமை ஏற்படாது என்பது உறுதியே ஆகும்.

திருநாவுக்கரசு சுவாமிகள்
நமச்சிவாயத் திருப்பதிகம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சிவாயவே. 1

பூவினுக்கு அருங் கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங் கலம் அரன் அஞ்சு ஆடுதல்
கோவினுக்கு அருங் கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங் கலம் நமச்சிவாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ் அழல்
உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே. 3

இடுக்கண்பட்டு இருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற்பிரான் என்று வினவுவோம் அல்லோம்
அடுக்கல்கீழ்க் கிடக்கினும் அருளின் நாம் உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே. 4

வெந்தநீறு அருங் கலம் விரதிகட்கு எலாம்
அந்தணர்க்கு அருங் கலம் அருமறை ஆறுஅங்கம்
திங்களுக்கு அருங் கலம் திகழும் நீள் முடி
நங்களுக்கு அருங் கலம் நமச்சிவாயவே. 5

சலம் இலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அலால்
நலம் இலன் நாள்தொறும் நல்குவான் நலன்
குலம்இலர் ஆகிலும் குலத்திற்கு ஏற்பது ஓர்
நலம் மிகக் கொடுப்பது நமச்சிவாயவே. 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந் நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே. 7

இல்அக விளக்குஅது இருள் கெடுப்பது
சொல்அக விளக்கஅது சோதி உள்ளது
பல்அக விளக்குஅது பலரும் காண்பது
நல்அக விளக்குஅது நமச்சிவாயவே. 8

முன்னெறி ஆகிய முதல்வன் முக்கணன்
தன் நெறியே சரண் ஆதல் திண்ணமே
அந் நெறியே சென்று அங்கு அடைந்தவர்க்கு எலாம்
நன் நெறி ஆவது நமச்சிவாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதுஓர்பாகத்தன்
பூப் பிணை திருந்து அடி பொருந்தக் கைதொழ
நாப் பிணை தழுவிய நமச்சிவாயப்பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே. 10

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 39. உறங்கச் செல்வதற்கு முன்பும் விழித்தெழுந்த உடனேயும் ஓதவேண்டிய பதிகம்

தஞ்சை திருவையாற்றுச் சாலையில் உள்ளது "சோற்றுத்துறை" எனும் சிவத்தலம். இரவும் பகலும் நம்மை நல்லமுறையில் செலுத்துமாறு இறைவரிடம் முறையிடும் பதிகம் இது. ஓதி நலம் பெறலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருச்சோற்றுத்துறை

மூத்தவனாய் உலகுக்கு முந்தி னானே
முறைமையால் எல்லாம் படைக்கின் றானே
ஏத்தவனாய் ஏழுலகும் ஆயி னானே
இன்பனாய்த் துன்பம் களைகின் றானே
காத்தவனாய் எல்லாம்தான் காண்கின் றானே
கடுவினையேன் தீவினையைக் கண்டு போகத்
தீர்த்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேஉன் அபயம் நானே. 1

தலையவனாய் உலகுக்கோர் தன்மை யானே
தத்துவனாய்ச் சார்ந்தார்க்குஇன் னமுது ஆனானே
நிலையவனாய் நின்ஒப்பார் இல்லா தானே
நின்றுணராக் கூற்றத்தைச் சீறிப் பாய்ந்த
கொலையவனே கொல்யானைத் தோல்மேலிட்ட
கூற்றுவனே கொடிமதில்கள் மூன்றும் எய்த
சிலையவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேஉன் அபயம் நானே. 2

முற்றாத பால்மதியம் சூடி னானே
முளைத்தெழுந்த கற்பகத்தின் கொழுந்துஒப்பானே
உற்றார் என்று ஒருவரையும் இல்லா தானே
உலகோம்பும் ஒண்சுடரே ஓதும் வேதம்
கற்றானே யெல்லாக் கலைஞா னமுங்
கல்லாதேன் தீவினைநோய் கண்டு போகச்
செற்றானே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேயுஉன் அபயம் நானே. 3

கண்ணவனாய் உலகெல்லாம் காக்கின் றானே
காலங்கள் ஊழிகண் டிருக்கின் றானே
விண்ணவனாய் விண்ணவர்க்கும் அருள்செய் வானே
வேதனாய் வேதம் விரித்திட் டானே
எண்ணவனாய் எண்ணார் புரங்கள் மூன்றும்
இமையாமுன் எரிகொளுவ நோக்கி நக்க
திண்ணவனே திருச்சோற்றுத்துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேஉன் அபயம் நானே. 4

நம்பனே நான்மறைகள் ஆயி னானே
நடமாட வல்லானே ஞானக் கூத்தா
கம்பனே கச்சிமா நகர் உளானே
கடிமதில்கள் மூன்றினையும் பொடியாய் எய்த
அம்பனே அளவிலாப் பெருமை யானே
அடியார்கட்கு ஆரமுதே ஆனேறு ஏறுஞ்
செம்பொனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனே உன் அபயம் நானே. 5

ஆர்ந்தவனே உலகெலாம் நீயே யாகி
அமைந்தவனே அளவிலாப் பெருமை யானே
சுவர்ந்தவனே குற்றாலம் மேய கூத்தா
கொடுமூ விலையதோர் சூலம் ஏந்திப்
போர்ந்தவனே பிரளயங்கள் எல்லாம் ஆய
பெம்மான் என்று எப்போதும் பேசும் நெஞ்சிற்
சேர்ந்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேஉன் அபயம் நானே. 6


வானவனாய் வண்மை மனத்தி னானே
மாமணிசேர் வானோர் பெருமான் நீயே
கானவனாய் ஏனத்தின் பின்சென் றானே
கடிய அரணங்கள் மூன்றுஅட் டானே
தானவனாய்த் தண்கயிலை மேவி னானே
தன்ஒப்பார் இல்லாத மங்கைக்கு என்றும்
தேன் அவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேஉன் அபயம் நானே 7

தன்னவனாய் உலகெல்லாம் தானே யாகித்
தத்துவனாய்ச் சார்ந்தார்க்குஇன் னமுது ஆனானே
என்னவனாய் என்இதயம் மேவி னானே
ஈசனே பாச வினைகள் தீர்க்கும்
மன்னவனே மலைமங்கை பாக மாக
வைத்தவனே வானோர் வணங்கும் பொன்னித்
தென்னவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேஉன் அபயம் நானே. 8

எறிந்தானே எண்டிசைக்குங் கண்ஆ னானே
ஏழுலகம் எல்லாம் முன்னாய்நின் றானே
அறிந்தார்தாம் ஓர் இருவர் அறியா வண்ணம்
ஆதியும் அந்தமும் ஆகி அங்கே
பிறிந்தானே பிறர் ஒருவர் அறியா வண்ணம்
பெம்மான் என்று எப்போதும் ஏத்தும் நெஞ்சில்
செறிந்தானே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேஉன் அபயம் நானே. 9

மையனைய கண்டத்தாய் மாலும் மற்றை
வானவரும் அறியாத வண்ணச் சூலக்
கையவனே கடியிலங்கைக் கோனை அன்று
கால்விரலால் கதிர்முடியும் தோளும் செற்ற
மெய்யவனே அடியார்கள் வேண்டிற்று ஈயும்
விண்ணவனே விண்ணப்பம் கேட்டு நல்கும்
செய்யவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேஉன் அபயம் நானே. 10

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 40. விசப்பூச்சிகளால் துன்பம் வராமல் இருக்க உதவும் பதிகம்

சென்னையில் உள்ள சிவத்தலங்களுள் ஒன்று திருவேற்காடு. இத்தலம் திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்றது. அகத்தியருக்கு இறைவர் இத்தலத்தில் திருமணக் கோலத்தைக் காட்டியருளியுள்ளார். மூர்க்கநாயனார் அவதாரம் செய்த பதி.

விசப்பூச்சிகள் தீண்டாத தலம். எனவே, இத்தலத்துப் பதிகத்தை நாளும் ஓதிவந்தால், எந்தவிதமான விசப்பூச்சிகளும் நம்மைத் தீண்டா என்பதை உறுதியாகக் கொள்ளலாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருவேற்காடு

ஒள்ளிது உள்ளக் கதிக்கு ஆம் இவன் ஒளி
வெள்ளியான் உறை வேற்காடு
உள்ளியார் உயர்ந்தார் இவ்உலகினில்
தெள்ளியார் அவர் தேவரே. 1

ஆடல் நாகம் அசைத்து அளவுஇல்லது ஓர்
வேடம் கொண்டவன் வேற்காடு
பாடியும் பணிந்தார் இவ்உலகினில்
சேடர் ஆகிய செல்வரே. 2

பூதம் பாடப் புறங்காட்டுஇடை ஆடி
வேதவித்தகன் வேற்காடு
போதும் சாந்தும் புகையும் கொடுத்தவர்க்கு
ஏதம் எய்துதல் இல்லையே 3

ஆழ்கடல் எனக் கங்கை கரந்தவன்
வீழ்ச்சடையினன் வேற்காடு
தாழ்வு உடை மனத்தால் பணிந்து ஏத்திடப்
பாழ்படும் அவர் பாவமே. 4

காட்டினாலும் அயர்த்திடக் காலனை
வீட்டினான் உறை வேற்காடு
பாட்டினால் பணிந்து ஏத்திட வல்லவர்
ஓட்டி னார் வினை ஒல்லையே. 5

தோலினால் உடை மேவ வல்லான் சுடர்
வேலினான் உறை வேற்காடு
நூலினால் பணிந்து ஏத்திட வல்லவர்
மாலினார் வினை மாயுமே 6

மல்லல் மும்மதில் மாய்தர எய்தது ஓர்
வில்லினான் உறை வேற்காடு
சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே 7


மூரல் வெண்மதி சூடும் முடிஉடை
வீரன் மேவிய வேற்காடு
வாரம்ஆய் வழிபாடு நினைந்துஅவர்
சேர்வர் செய் கழல் திண்ணமே. 8

பரக்கினார் படுவெண்தலையில் பலி
விரக்கினான் உறை வேற்காட்டூர்
அரக்கன் ஆண்மை அடரப்பட்டான் இறை
நெருக்கினானை நினைமினே 9

மாறுஇலா மலரானொடு மால் அவன்
வேறு அலான் உறை வேற்காடு
ஈறு இலா மொழியே மொழியா எழில்
கூறினார்க்கு இல்லை குற்றமே. 10

விண்ட மாம்பொழில் சூழ் திருவேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்
சண்பை ஞானசம்பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக் குணம்ஆமே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 41. சர்ப்ப தோஷம் நீங்குவதற்குரிய பதிகம் – 1

நாகதோசம் உள்ளவர்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ள திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய இருவர் அருளியுள்ள பதிகங்களைப் பாராயணம் செய்தால் அத்தோசம் நீங்கப் பெறுவார்கள். இத்தலம் திருப்பாம்புரம், கும்பகோணம் –காலரைக்கால் சாலையில் உள்ளது.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருப்பாம்புரம்

சீர் அணி திகழ் திருமார்பில் வெண்நூலர்
திரிபுரம் எரிசெய்த செல்வர்,
வார் அணி வனமுலை மங்கை ஓர் பங்கர்
மான்மறி ஏந்திய மைந்தர்
கார் அணி மணிதிகழ் மிடறு உடைஅண்ணல்
கண்ணுதல் விண்ணவர் ஏத்தும்,
பார் அணி திகழ் தருநான்மறை யாளர்
பாம்புர நன் நகராரே. 1

கொக்குஇறகோடு கூவிளம் மத்தம்
கொன்றையொடு எருக்கு அணி சடையர்,
அக்கினொடு ஆமை பூண்டு அழகு ஆக
அனல்அதுஆடும் எம் அடிகள்,
மிக்க நல் வேதவேள்வியுள் எங்கும்
விண்ணவர் விரைமலர் தூவப்
பக்கம் பல்பூதம் பாடட வருவார்
பாம்புர நன் நகராரே. 2

துன்னலின் ஆடை உடுத்து அதன் மேலோர்
சூறை நல் அரவுஅது சுற்றிப்
பின்னுவார்சடைகள் தாழவிட்டு ஆடிப்
பித்தர் ஆய்த் திரியும் எம்பெருமான்
மன்னு மா மலர்கள் தூவிட நாளும்
மாமலையாட்டியும் தாமும்,
பன்னு நான்மறைகள் பாடிட வருவார்
பம்புர நன் நகராரே. 3

துஞ்சு நாள் துறந்து தோற்றமும் இல்லாச்
சுடர்விடு சோதி எம்பெருமான்
நஞ்சு சேர் கண்டம் உடைய என் நாதர்
நள்இருள் நடம்செய்யும் நம்பர்
மஞ்சு தோய் சோலை மா மயில் ஆட
மாடமாளிகை தன்மேல் ஏறிப்
பஞ்சு சேர் மெல் அடிப் பாவையர் பயிலும்
பாம்புர நன் நகராரே. 4

நதிஅதன் அயலே நகுதலைமாலை
நாள்மதி சடைமிசை அணிந்து
கதிஅது ஆகக் காளி முன் காணக்
கான் இடை நடம் செய்த கருத்தர்
விதி அது வழுவா வேதியர் வேள்வி
செய்தவர் ஒத்து ஒலி ஓவாப்
பதிஅது ஆகப் பாவையும் தாமும்
பாம்புர நன் நகராரே. 5

ஓதி நன்கு உணர்வார்க்கு உணர்வு உடை ஒருவர்
        ஒளி திகழ் உருவம் சேர் ஒருவர்
மாதினை இடமா வைத்த எம் வள்ளல்
        மான்மறி ஏந்திய மைந்தர்
ஆதி நீ அருள் என்று அமரர்கள் பணிய
        அலைகடல் கடைய அன்று எழுந்த
பாதி வெண்பிறை சடை வைத்த எம் பரமர்
        பாம்புர நன் நகராரே. 6

மாலினுக்கு அன்று சக்கரம் ஈந்து
        மலரவற்கு ஒருமுகம் ஒழித்து
ஆலின்கீழ் அறம்ஓர் நால்வருக்கு அருளி
        அனல்அது ஆடும் எம் அடிகள்
காலனைக்காய்ந்து தம்கழல் அடியால்
        காமனைப் பொடிபட நோக்கிப்
பாலனுக்கு அருள்கள் செய்த எம்அடிகள்
        பாம்புர நன் நகராரே. 7

விடைத்த வல் அரக்கன் வெற்பினை எடுக்க
        மெல்லிய திருவிரல் ஊன்றி
அடர்த்து அவன் தனக்கு அன்று அருள்செய்த அடிகள்
        அனல்அதுஆடும் எம் அண்ணல்
மடக்கொடி அவர்கள் வருபுனல் ஆட
        வந்து இழி அரிசிலின் கரைமேல்
படப்பையில் கொணர்ந்து பருமணி சிதறும்
        பாம்புர நன் நகராரே. 8

கடி படு கமலத்து அயனொடு மாலும்
காதலோடு அடிமுடி தேடச்
செடி படு வினைகள் தீர்த்து அருள் செய்யும்
தீவணர் எம்முடைச் செல்வர்
முடிஉடை அமரர் முனிகணத்தவர்கள்
முறைமுறை அடிபணிந்து ஏத்தப்
படிஅது ஆகப் பாவையும் தாமும்
பாம்புர நன் நகராரே. 9

குண்டர் சாக்கியரும் குணம்இலாதாரும்
குற்றுவிட்டு உடுக்கையர் தாமும்
கண்டவாறு உரைத்துக் கால்நிமிர்த்து உண்ணும்
கையர்தாம் உள்ள வாறு அறியார்
வண்டு சேர் குழலி மலைமகள் நடுங்க
வாரணம் உரிசெய்து போர்த்தார்
பண்டு நாம் செய்த பாவங்கள் தீர்ப்பார்
பாம்புர நன் நகராரே. 10

பார் மலிந்து ஓங்கிப் பரு மதில் சூழ்ந்த
பாம்புர நன் நகராரைக்
கார் மலிந்து அழகார் கழனி சூழ் மாடக்
கழுமல முது பதிக் கவுணி
நார் மலிந்து ஓங்கும் நான்மறை ஞான
சம்பந்தன் செந்தமிழ் வல்லார்
சீர் மலிந்து அழகார் செல்வம் அது ஓங்கிச்
சிவன் அடி நண்ணுவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 42. சர்ப்ப தோஷம் நீங்குவதற்குரிய பதிகம் - 2

வைத்தீசுவரன் கோயிலுக்கு அருகில் உள்ளது வாழ்கொளிப்புத்தூர் எனும் தலம். இத்தலத்தில் வாசுகி எனும் பாம்பு வழிபட்டு இறைவருக்கு ஆபரணமாகும் பேறு பெற்றது. இத்தலத்திற்குரிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. பாராயணம் செய்து நாகதோசம் நீங்கி நலம் பலபெறலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
திருவாழ்கொளிபுத்தூர்

தலைக்க லன்தலை மேல்தரித் தானைத்
தன்னை என்னைநினைக் கத்தரு வானைக்
கொலைக்கை யானைஉரி போர்த்துகந் தானைக்
கூற்று உதைத்தகுரை சேர்கழ லானை
அலைத்த செங்கண் விடை ஏறவல் லானை
ஆணை யால்அடி யேன்அடி நாயேன்
மலைத்த செந்நெல்வயல் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 1

படைக்கண் சூலம் பயிலவல் லானைப்
பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானைக்
கடைக்கண்பிச் சைக்குஇச்சை காதலித் தானைச்
காமன் ஆகந்தனைக் கட்டழித் தானைச்
சடைக்கண் கங்கையைத்தாழவைத்தானைத்
தண்ணீர்மண் ணிக்கரை யானைத்தக் கானை
மடைக்கண் நீலம்அலர் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 2

வெந்த நீறுமெய் பூசவல் லானை
வேத மால்விடை ஏறவல் லானை
அந்தம் ஆதிஅறி தற்குஅரி யானை
ஆறுஅலைத் தசடை யானைஅம் மானைச்
சிந்தை யென்தடு மாற்றுஅறுப் பானைத்
தேவ தேவன்என் சொல்முனி யாதே
வந்தென்உள் ளம்புகும் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 3

தடங்கை யால்மலர் தூய்த்தொழு வாரைத்
தன்னடிக் கேசெல்லு மாறுவல் லானைப்
படங்கொள் நாகம்அரை ஆர்த்துகந் தானைப்
பல்லின்வெள் ளைத்தலை ஊணுடை யானை
நடுங்க ஆனைஉரி போர்த்துகந் தானை
நஞ்சம் உண்டுகண் டங்கறுத் தானை
மடந்தை பாகனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 4

வளைக்கை முன்கைமலை மங்கை மணாளன்
மார னார்உடல் நீறெழச் செற்றுத்
துளைத்த அங் கத்தொடு தூமலர்க் கொன்றை
தோலும்நூ லுந்துதைந் தவரை மார்பன்
திளைக்குந்தெவ்வர் திரிபுரம் மூன்றும்
அவுணர் பெண்டிரும் மக்களும் வேவ
வளைத்த வில்லியை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 5

திருவின் நாயகன் ஆகிய மாலுக்கு
அருள்கள் செய்திடும் தேவர் பிரானை
உருவி னாலைஒன் றாஅறி வொண்ணா
மூர்த்தி யைவிச யற்குஅருள் செய்வான்
செருவில் ஏந்திஓர் கேழற்பின் சென்று
செங்கண் வேடனாய் என்னொடும் வந்து
மருவி னான்தனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 6

எந்தை யைஎந்தை தந்தை பிரானை
ஏதமா யஇடர் தீர்க்கவல் லானை
முந்தி யாகிய மூவரின் மிக்க
மூர்த்தி யைமுதல் காண்பரி யானைக்
கந்தின் மிக்ககரி யின்மருப் போடு
கார் அகில்கவ ரிம்மயிர் மண்ணி
வந்து வந்திழி வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 7

தேனை ஆடிய கொன்றையி னானைத்
தேவர் கைதொழும் தேவர் பிரானை
ஊனம் ஆயின தீர்க்க வல்லானை
ஒற்றை ஏற்றனை நெற்றிக்கண் ணானைக்
கான ஆனையின் கொம்பினைப் பீழ்ந்த
கள்ளப் பிள்ளைக்கும் காண்பரி தாய
வான நாடனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 8


காளைஆகி வரை எடுத்தான்தன்
கைகள் இற்று அவன் மொய் தலை எல்லாம்
மூளை போத ஒருவிரல் வைத்து
மூர்த்தியை முதல் காண்பு அரியானைப்
பாளை தெங்கின் பழம் விழ மண்டிச்
செங்கண் மேதிகள் சேடு எறிந்து எங்கும்
வாளை பாய் வயல் வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 9

திருந்த நான்மறைபாட வல்லானைத்
தேவர்க்கும் தெரிதற்கு அரியானைப்
பொருந்த மால்விடை ஏற வல்லானைப்
பூதிப்பை புலித்தோல் உடையானை
இருந்து உண் தேரரும் நின்று உணும் சமணும்
ஏச நின்றவன் ஆருயிர்க்கு எல்லாம்
மருந்து ஆனான்தனை வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 10

மெய்யனை மெய்யில் நின்றுணர் வானை
மெய்யி லாதவர் தங்களுக்கு எல்லாம்
பொய்ய னைப்புரம் மூன்றுளித் தானைப்
புனித னைப்புலித் தோலுடை யானைச்
செய்ய னைவெளி யதிரு நீற்றில்
திகழு மேனியன் மான்மறி ஏந்தும்
மைகொள் கண்டனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேனே. 11

வளங்கி ளர்பொழில் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந்து என்நினைக் கேன்என்று
உளங்கு ளிர்தமிழ் ஊரன் வன்தொண்டன்
சடையன் காதலன் வனப்பகை அப்பன்
நலங்கி ளர்வயல் நாவலர் வேந்தன்
நங்கை சிங்கடி தந்தை பயந்த
பலங்கி ளர்தமிழ் பாடவல் லார்மேல்
பறையு மாம்செய்த பாவங்கள் தானே. 12

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 43. வருமானவரி, விற்பனைவரி போன்றவற்றால் எவ்வித இடர்ப்பாடும் வாராமலிருக்க உதவும் பதிகம்

மயிலாடுதுறை – திருவாரூர் சாலையில் திருமருகல் சென்று திருப்பயற்றூர் (திருப்பயத்தாங்குடி) எனும் சிவத்தலத்தை அடையலாம்.

இத்தலம் திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடல் பெற்றுள்ளது. சுங்கவரியைத் தவிர்க்க விரும்பிய வணிகன் ஒருவன் மிளகு மூட்டைகளைப் பயறாக மாற்றி அருளும்படி வேண்டினான் இத்தலத்து இறைவரிடம். இறைவரும் மிளகு மூட்டைகளைப் பயறாக மாற்றி அருளினார். சோதனைக்குப் பிறகு மிளகு மூட்டைகளாகவே மாற்றினார்.

வரித்தொல்லைகளிலிருந்து மீள்வதற்கு இத்தலத்துப் பதிகம் பெரிதும் உதவும். இன்றும் பலர் இப்பதிகப் பாராயணத்தால் நலன் பெற்று வருகிறார்கள்.

திருநாவுக்ரசு சுவாமிகள்
திருப்பயற்றூர்

உரித்திட்டார் ஆனை யின்தோல் உதிர ஆறுஒழுகி ஓட
விரித்திட்டார் உமையாள் அஞ்சி விரல் விதிர்த்து அலக்கண்
நோக்கித்
தரித்திட்டார் சிறிதுபோது தரிக்கிலர் ஆகித் தாமும்
சிரித்திட்டார் எயிறு தோன்றத் திருப் பயற்றூரனாரே. 1

உவந்திட்டு அங்கு உமை ஓர்பாகம் வைத்தவர் ஊழிஊழி
பவந்திட்ட பரமனார்தாம் மலைச்சிலை நாகம் ஏற்றிக்
கவர்ந்திட்ட புரங்கள்மூன்றும் கனல் எரி ஆகச் சீறிச்
சிவந்திட்ட கண்ணர்போலும் திருப் பயற்றூரனாரே. 2

நங்களுக்கு அருளது என்று நான்மறை ஓதுவார்கள்
தங்களுக்கு அருளும் எங்கள் தத்துவன் தழலன் தன்னை
எங்களுக்கு அருள்செய் என்ன நின்றவன் நாகம் அஞ்சுந்
திங்களுக்கு அருளிச்செய்தார் திருப் பயற்றூரனாரே. 3

பார்த்தனுக்கு அருளும் வைத்தார் பாம்பு அரை ஆட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார் சாமுண்டி சாமதேவம்
கூத்தொடும் பாட வைத்தார் கோள் அரா மதியம் நல்ல
தீர்த்தமும் சடைமேல் வைத்தார் திருப் பயற்றூரனாரே. 4

மூவகை மூவர்போலும் முற்று மா நெற்றிக்கண்ணர்
நா வகை நாவர்போலும் நான்மறை ஞானம்எல்லாம்
ஆ வகை ஆவர் போலும் ஆதிரைநாளர் போலும்
தேவர்கள் தேவர்போலும் திருப் பயற்றூரனாரே. 5

ஞாயிறாய் நமனும் ஆகி வருணனாய்ச் சோமன் ஆகித்
தீ அறாநிருதி வாயுத் திப்பிய சாந்தனாகிப்
பேயறாக் காட்டில் ஆடும் பிஞ்ஞகன் எந்தை பெம்மான்
தீ அறாக் கையர்போலும் திருப் பயற்றூரனாரே. 6

ஆவியாய் அவியும் ஆகி அருக்கமாய்ப் பெருக்கம்ஆகிப்
பாவியர் பாவம் தீர்க்கும் பரமனாய்ப் பிரமன் ஆகிக்
காவியங்கண்ண ளாகிக் கடல்வண்ணம்ஆகி நின்ற
தேவியைப் பாகம் வைத்தார் திருப் பயற்றூரனாரே. 7

தந்தையாய்த் தாயும் ஆகித் தரணியாய்த் தரணி உள்ளார்க்கு
எந்தையும் என்ன நின்ற ஏழ்உலகு உடனும் ஆகி
எந்தை எம்பிரானே என்றுஎன்று உள்குவார் உள்ளத்து என்றும்
சிந்தையுள் சிவமும் ஆவார் திருப் பயற்றூரனாரே. 8

புலன்களைப் போக நீக்கிப் புந்தியை ஒருங்க வைத்து
இலங்களைப் போக நின்று இரண்டையும் நீக்கி ஒன்றாய்
மலங்களை மாற்ற வல்லார் மனத்தினுள் போகம்ஆகச்
சினங்களைக் களைவர்போலும் திருப் பயற்றூரனாரே. 9

மூர்த்திதன் மலையின்மீது போகாதால் முனிந்து நோக்கிப்
பார்த்துத் தான் பூமிமேலாற் பாய்ந்துடன் மலையைப் பற்றி
ஆர்த்திட்டான் முடிகள்பத்தும் அடர்த்து நல் அரிவை அஞ்சத்
தேத்தெத்தா என்னக் கேட்டார் திருப் பயற்றூரனாரே. 10

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 44. சனிக் கிரகத்தினால் எந்தவிதத் தீமையும் வாராமலிருக்கவும் தீவிபத்துக்கள் ஏற்படாதிருக்கவும் உதவும் பதிகம்

திருவாருருக்கு அருகில் உள்ளதலம் "கொள்ளிக்காடு" (கள்ளிக்காடு). திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்றது திருவாரூர் - திருத்துறைப்பூண்டிச் சாலையில் வந்தால் இத்தலத்தை அடையலாம்.

அக்கினித் தேவன் (கொள்ளி) வழிபட்டதால் "கொள்ளிக்காடு" எனப்பட்டது. இத்தலத்து இறைவரை - அக்கினீ சுவரரை வழிபட்டதால் சோழ மன்னன் ஒருவனுக்கு சனித்தோசம் விலகியது. (சனிக்கிரகத்தை வழிபடவில்லை)

இத்தலத்திற்குத் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய பதிகம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதிகப் பாராயணத்தால் சனிக் கிரகம் நன்மையையே செய்யும். மேலும் தீயினால் விபத்துக்கள் ஏற்படா.

இத்தலத்து இறைவரை சனிக்கிரகம் வழிபட்டுக் குறைகள் நீங்கப்பெற்றது. கிரகப்பதமும் பெற்றது.

திருஞானசம்பந்த சுவாமிகள்
கொள்ளிக்காடு

நிணம்படு சுடலையில் நீறு பூசிநின்று
இணங்குவர் பேய்களோடு இடுவர் மாநடம்
உணங்கல் வெண்தலைதனில் உண்பர் ஆயினும்
குணம்பெரிதுஉடையர்நம் கொள்ளிக் காடரே. 1

ஆற்றநல் அடியிணை அலர்கொண்டு ஏத்துவான்
சாற்றிய அந்தணன் தகுதி கண்டநாள்
மாற்றலன் ஆகிமுன் னடர்த்து வந்துஅணை
கூற்றினை உதைத்தனர் கொள்ளிக் காடரே. 2

அத்தகு வானவர்க் காகமால்விடம்
வைத்தவர் மணிபுரை கண்டத்தின் உள்ளே
மத்தமும் வன்னியும் மலிந்த சென்னிமேல்
கொத்தலர் கொன்றையர் கொள்ளிக் காடரே 3

பாவணம் மேவுசொல் மாலை யில்பல
நாவணம் கொள்கையில் நவின்ற செய்கையர்
ஆவணம் கொண்டெமை ஆள்வ ராயினும்
கோவணம் கொள்கையர் கொள்ளிக் காடரே. 4

வாரணி வனமுலை மங்கை யாளொடும்
சீரணி திருவுருத் திகழ்ந்த சென்னியர்
நாரணி சிலைதனால் நணுக லார்எயில்
கூர்எரி கொளுவினர் கொள்ளிக் காடரே. 5

பஞ்சுதோய் மெல்லடிப் பாவை யாளொடும்
மஞ்சுதோய் கயிலையுள் மகிழ்வர் நாள்தொறும்
வெஞ்சின மருப்பொடு விரைய வந்தடை
குஞ்சரம் உரித்தனர் கொள்ளிக் காடரே. 6

இறையுறு வரிவளை இசைகள் பாடிட
அறையுறு கழலடி ஆர்க்க ஆடுவர்
சிறையுறு விரிபுனல் சென்னி யின்மிசைக்
குறையுறு மதியினர் கொள்ளிக் காடரே. 7

எடுத்தனன் கயிலையை இயல் வலியினால்
அடர்த்தனர் திருவிர லால் அலறிடப்
படுத்தனர் என்றவன் பாடல் பாடலும்
கொடுத்தனர் கொற்றவாள் கொள்ளிக் காடரே 8

தேடினார் அயன்முடி மாலும் சேவடி
நாடினார் அவர்என்றும் நணுக கிற்றிலர்
பாடினார் பரிவொடு பத்தர் சித்தமும்
கூடினார்க்கு அருள்செய்வர் கொள்ளிக் காடரே. 9

நாடி நின்று அறிவுஇல் நாணிலிகள் சாக்கியர்
ஓடிமுன் ஓதிய உரைகள் மெய்யல
பாடுவர் நான்மறை பயின்ற மாதொடும்
கூடுவர் திருவுருக் கொள்ளிக் காடரே. 10

நற்றவர் காழியுள் ஞான சம்பந்தன்
குற்றமில் பெரும்புகழ்க் கொள்ளிக் காடரைச்
சொற்றமிழ் இன்னிசை மாலை சோர்வின்றிக்
கற்றவர் கழலடி காண வல்லரே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 45. செவ்வாய் தோசம் (அங்காரகதோசம்) நீங்குவதற்கு உதவும் பதிகம்

ஒன்பது கிரகங்களும் சிவபெருமானாரை வழிபட்டே தங்களது பாவங்களைப் போக்கி நலம்பெற்றுள்ளன. இக்கோள்களுக்கும், நட்சத்திரங்கட்கும் அதிபதியாய் இருந்து அவற்றை இயக்குபவர் சிவபெருமானே ஆவார். இவரது ஆணையின்படி தான் ஒன்பது கிரகங்களும் இருபத்தேழு நட்சத்திரங்களும் நன்மையையும் தீமையையும் அளித்து வருகின்றன.

அன்பர்கள் தங்களின் பிறந்த நாட்குறிப்பின்படி (சாதகப்படி) எந்தக் கிரகத்தினால் துன்பம் என்று எண்ணுகிறார்களோ, அந்தக் கிரகம் வழிபட்டு நலம் பெற்ற தலத்திற்குரிய திருமுறைப்பதிகத்தினை காலையும், மாலையும் பாராயணம் செய்வதும், முடிவில் அத்தலத்திற்குச் சென்று, அங்கு மூலத்தானத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்து வரும் சிவபெருமானை வழிபடுவதும் தான் கிரகதோசம் நீங்கி நலம் பெற உரிய வழியாகும்.

செவ்வாய் தோசம் உள்ளவர்கள் (அங்காரக தோசம்) செவ்வாய்க் கிரகம் வழிபட்ட (1) கடம்பூர், (2) சிறுகுடி ஆகிய இரண்டு தலங்களுக்குரிய பதிகங்களைப் பாராயணம் செய்து நலம் பெறலாம். மண்ணின் தன்மையையும், மரத்தின் குறையையும் மாற்றும் அளப்பரும் ஆற்றல் கொண்ட இப்பதிகங்கள் செவ்வாய் தோசத்தை உறுதியாக நீக்கும். பலர் பயன் பெற்றுள்ளார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்கடம்பூர்

செவ்வாய் – அங்காரகன் வழிபட்டு நலம் பெற்ற இத்தலம் கடலூர் மாவட்டம் காட்டு மன்னார் குடிக்கு அருகில் உள்ளது.

ஒருவ ராய்இரு மூவரும் ஆயவன்
குருவ தாய குழகன் உறைவிடம்
பருவ ரால்குதி கொள்ளும் பழனம்சூழ்
கருவ தாங்கடம் பூர்க்கரக் கோயிலே. 1

வன்னி மத்தம் வளர்இளம் திங்களோர்
கன்னி யாளைக் கதிர்முடி வைத்தவன்
பொன்னின் மல்கு புணர்முலை யாளொடும்
மன்னி னான்கடம் பூர்க்கரக் கோயிலே. 2

இல்லக் கோலமும் இந்த இளமையும்
அல்லற் கோலம் அறுத்துய வல்லிரே
ஒல்லைச் சென்றடை யும்கடம் பூர்நகர்ச்
செல்வக் கோயில் திருக்கரக் கோயிலே. 3

வேறு சிந்தை யிலாதவர் தீவினை
கறு செய்த குழகன் உறைவிடம்
ஏறு செல்வத்து இமையவர் தாம்தொழும்
ஆறு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 4

திங்கள் தங்கிய செஞ்சடை மேலுமோர்
மங்கை தங்கும் மணாளன் இருப்பிடம்
பொங்கு சேர்மணற் புன்னையும் ஞாழலும்
தெங்கு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 5

மல்லை ஞாலத்து வாழும் உயிர்க்கெலாம்
எல்லை யான பிரானார் இருப்பிடம்
கொல்லை முல்லை கொழுந்தகை மல்லிகை
நல்ல சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 6

தளரும் வாளர வத்தொடு தண்மதி
வளரும் பொற்சடை யாற்குஇடம் ஆவது
கிளரும் பேரொலி கின்னரம் பாட்டறாக்
களரியார்கடம் பூர்க் கரக் கோயிலே. 7

உற்றா ராய்உற வாகி உயிர்க்கெலாம்
பெற்றா ராய பிரானார் உறைவிடம்
முற்றார் மும்மதில் எய்த முதல்வனார்
கற்றார் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 8

வெள்ளை நீறணி மேனிய வர்க்கெலாம்
உள்ள மாய பிரானார் உறைவிடம்
பிள்ளை வெண்பிறை சூடிய சென்னியான்
கள்வன் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. 9

பரப்பு நீர் இலங்கைக்கு இறைவன் அவன்
உரத்தி னால்அடுக் கல்எடுக் கல்லுற
இரக்கம் இன்றி இறைவிர லால்தலை
அரக்கி னான்கடம் பூர்க்கரக் கோயிலே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 46. சூரிய (ஞாயிறு) கிரகத்தினால் துன்பம் வாராமலிருக்க உதவும் பதிகம்

திருவாரூர் - நாகப்பட்டினம் சாலையில் உள்ளது "தேவூர்" எனும் சிவத்தலம். திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்றுள்ளது. சூரியன் வழிபட்டு நலம் பெற்றுள்ளான். தனக்கு நன்மை செய்த இறைவரை வணங்குபவர்க்குச் சூரியன் நன்மையையே செய்வான்.

இத்தலத்துப் பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. அன்பர்கள் பாராயணம் செய்து சூரிய கிரகத்தினால் ஏற்படும் தீமைகளிலிருந்து விலகலாம். அக்கிரகம் நன்மையையே செய்யும். ஒவ்வொருபாடலின் முடிவிலும் "அல்லல் ஒன்றிலமே" என்று வருவதைக் காணலாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருத்தேவூர்

பண்நிலாவிய மொழியுமை பங்கன்எம் பெருமான்
விண்ணில் வானவர் கோன்விமலன்விடை ஊர்தி
தெண்நி லாமதி தவழ்தரு மாளிகைத் தேவூர்
அண்ணல் சேவடியடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 1

ஓதி மண்டலத் தோர்முழு துய்யவெற்பு ஏறு
சோதி வானவன் துதிசெய மகிழ்ந்தவன் தூநீர்த்
தீதில் பங்கயம் தெரிவையர் முகமலர் தேவூர்
ஆதி சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 2

மறைகளால்மிக வழிபடு மாணியைக் கொல்வான்
கறுவு கொண்டஅக் காலனைக் காய்ந்தஎம் கடவுள்
செறுவில் வாளைகள் சேல்அவை பொருவயல் தேவூர்
அறவன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 3

முத்தன் சில்பலிக்கு ஊர்தொறும் முறைமுறை திரியும்
பித்தன் செஞ்சடைப் பிஞ்ஞகன் தன்னடி யார்கள்
சித்தன் மாளிகை செழுமதி தவழ்பொழில் தேவூர்
அத்தன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 4

பாடு வார்இசை பல்பொருள் பயன் உகந்து அன்பால்
கூடு வார்துணைக் கொண்டதம் பற்றுஅறப் பற்றித்
தேடு வார்பொருள் ஆனவன் செறிபொழில் தேவூர்
ஆடுவான் அடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 5

பொங்கு பூண்முலைப் புரிகுழல் வரிவளைப் பொருப்பின்
மங்கை பங்கினன் கங்கையை வளர்சடை வைத்தான்
திங்கள் சூடிய தீநிறக் கடவுள்தென் தேவூர்
அங்க ணன்தனை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 6

வன்பு யத்தஅத் தானவர் புரங்களை எரியத்
தன்புயத்துஉறத் தடவரை வளைத்தவன் தக்க
தென் தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
அன்பன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 7

தருஉயர்ந்தவெற் பெடுத்தஅத் தசமுகன் நெரிந்து
வெருவ ஊன்றிய திருவிரல் நெகிழ்த்துவாள் பணித்தான்
தெருவு தோறும்நல் தென்றல்வந்து உலவிய தேவூர்
அரவு சூடியை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 8

முந்திக் கண்ணனும் நான்முகனும் அவர் காணா
எந்தை திண்திறல் இருங்களிறு உரித்தஎம் பெருமான்
செந்தி னத்திசை அறுபதம் முரல்திருத் தேவூர்
அந்தி வண்ணனை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 9

பாறு புத்தரும் தவம்அணி சமணரும் பலநாள்
கூறி வைத்ததோர் குறியினைப் பிழையெனக் கொண்டு
தேறி மிக்கநம் செஞ்சடைக் கடவுள்தென் தேவூர்
ஆறு சூடியை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 10

அல்லல் இன்றிவிண் ஆள்வர்கள் காழியர்க்குஅதிபன்
நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம் பந்தன்
எல்லை இல்புகழ் மல்கிய எழில்வளர் தேவூர்த்
தொல்லை நம்பனைச் சொல்லிய பத்தும்வல் லாரே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 47. சந்திரன் (திங்கள்) கிரகத்தால் நலம் பெறுவதற்கு உதவும் பதிகம்

சென்னை – திருவள்ளூர் நெடுஞ்சாலையில் உள்ள சிவத்தலம் திருவலிதாயம் (பாடி) திருவலிதாயத்தில் (பாடி) எழுந்தருளியுள்ள வலிதாய நாதரை வழிபட்டு நலம் பெற்றான் சந்திரன். இத்தலத்துப் பதிகத்தைப் பாராயணம் செய்து, சந்திரனால் நன்மையையே அடையலாம். இக்கிரக தோசம் விலகும்.

**திருஞானசம்பந்த சுவாமிகள்**
**திருவலிதாயம் [பாடி]**

பத்தரொடு பலரும் பொலியம் மலர் அங்கைப்புனல் தூவி
ஒத்த சொல்லி உலகத்தவர்தாம் தொழுது ஏத்த உயர்சென்னி
மத்தம் வைத்த பெருமான் பிரியாது உறைகின்ற வலிதாயம்
சித்தம்வைத்த அடியார் அவர்மேல் அடையா மற்று
இடர்நோயே. 1

படை இலங்கு கரம்எட்டு உடையான் படிறுஆகக் கனல்ஏந்திக்
கடை இலங்கு மனையில் பலி கொண்டு உணும் கள்வன்
உறைகோயில்
மடை இலங்கு பொழிலின் நிழல்வாய் மது வீசும் வலிதாயம்
அடைய நின்ற அடியார்க்கு அடையா வினை அல்லல்
துயர்தானே. 2

ஐயன் நொய்யன் அணியன் பிணிஇல்லவர் என்றும்
தொழுதுஏத்தச்
செய்யன் வெய்ய படை ஏந்த வல்லான் திருமாதோடு
உறைகோயில்
வையம் வந்து பணியப் பிணி தீர்த்து உயர்கின்ற வலிதாயம்
உய்யும் வண்ணம்நினைமின் நினைந்தால் வினை தீரும்
நலமாமே. 3

ஒற்றை ஏறுஅது உடையான் நடம்ஆடி ஓர் பூதப்படை சூழப்
புற்றில் நாகம் அரை ஆர்த்து உழல்கின்ற எம்பெம்மான்
மடவாளோடு
உற்ற கோயில் உலகத்து ஒளி மல்கிட உள்கும் வலிதாயம்
பற்றி வாழும்அதுவே சரணாவது பாடும் அடியார்க்கே. 4

புந்தி ஒன்றி நினைவார் வினை ஆயின தீரப் பொருள்ஆய
அந்தி அன்னது ஒரு பேர்ஒளியான் அமர் கோயில் அயல்
எங்கும்
மந்தி வந்து கடுவன்னொடும் கூடிவணங்கும் வலிதாயம்
சிந்தியாத அவர்தம் அடும் வெந்துயர் தீர்தல் எளிது அன்றே. 5

ஊன் இயன்ற தலையில் பலி கொண்டு உலகத்து உள்ளவர்
ஏத்தக்
கான் இயன்றகரியின் உரி போர்த்து உழல் கள்வன்
சடைதன்மேல்
வான் இயன்றபிறை வைத்த எம்ஆதி மகிழும் வலிதாயம்
தேன் இயன்ற நறுமாமலர் கொண்டு நின்று ஏத்தத்
தெளிவுஆமே 6

கண் நிறைந்த விழியின் அழலால் வரு காமன் உயிர்வீட்டிப்
பெண் நிறைந்தஒருபால் மகிழ்வு எய்திய பெம்மான்
உறைகோயில்
மண் நிறைந்த புகழ்கொண்டு அடியார்கள் வணங்கும்
வலிதாயத்து
உள் நிறைந்த பெருமான் கழல்ஏத்த நம் உண்மைக்
கதியாமே. 7

கடலில் நஞ்சும் அமுதுஉண்டு இமையோர் தொழுது ஏத்த
நடம் ஆடி
அடல் இலங்கை அரையன் வலிசெற்று அருள் அம்மான்
அமர்கோயில்
மடல் இலங்கு கமுகின் பலவின் மது விம்மும் வலிதாயம்
உடல் இலங்கும் உயிர் உள்ளளவும் தொழ
உள்ளத்துயர்போமே. 8

பெரிய மேருவரையே சிலையா மலைவுஉற்றார்
எயில்மூன்றும்
எரிய எய்த ஒருவன் இருவர்க்கு அறிவொண்ணா
வடிவுஆகும்
எரியதாகி உற ஓங்கியவன் வலிதாயம் தொழுதுஏத்த
உரியராக உடையார் பெரியார் என உள்கும் உலகோரே. 9

ஆசி ஆர மொழியார் அமண்சாக்கியர் அல்லாதவர் கூடி
ஏசி ஈரம் இலராய் மொழிசெய்தவர் சொல்லைப் பொருள்
என்னேல்
வாசி தீர அடியார்க்கு அருள்செய்து வளர்ந்தான் வலிதாயம்
பேசும் ஆர்வம் உடையார் அடியார் எனப் பேணும்
பெரியோரே. 10

வண்டு வைகும் மணம் மல்கிய சோலை வளரும்
வலிதாயத்து
அண்டவாணன் அடி உள்குதலால் அருள்மாலைத்
தமிழ்ஆகக்
கண்டல் வைகுகடல் காழியுள் ஞானசம்பந்தன் தமிழ்பத்தும்
கொண்டு வைகி இசை பாட வல்லார் குளிர்வானத்து
உயர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 48. வியாழன் (குரு) கிரகத்தினால் நன்மை உண்டாவதற்கு (இக்கிரக தோசம் உடனே விலகும்) உதவும் பதிகம்

சிதம்பரத்திற்கு அருகில் உள்ளதலம் சீர்காழி. யாவரும் அறிந்த தலம். திருஞான சம்பந்த சுவாமிகள் அவதரித்த மிகப்புனித பூமி. இத்தலத்து இறைவரை பிரமபுரீசுவரரை, வியாழன் (குரு) எனும் கிரகம் (வியாழன், பிரகத்பதி) வழிபட்டு நலம் பெற்றுள்ளது.

இத்தலத்து இறைவரைச் சூரியன், சந்திரன், இராகு, கேது போன்ற பிற கிரகங்களும் வழிபட்டு நலம் பெற்றுள்ளன.

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியுள்ள இத்தலத்துப் பதிகங்கள் பலவற்றுள் ஒரு பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. தனக்கு நலம் அளித்த இறைவரை பதிகப்பாராயணத்தால் வழிபாடு செய்யும் அன்பர்கட்கு வியாழன் ஒருக்காலும் தீமையைச் செய்யாது. நலமே பெறலாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருப்பிரமபுரம் (சீர்காழி)

எம்பிரான் எனக்கு அமுதம் ஆவானும் தன்னடைந்தார்
தம்பிரான் ஆவானும் தழலேந்து கையானும்
கம்பமா கரியுரித்த காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம புரத்துறையும் வானவனே. 1

தாம்என்றும் மனந்தளராத் தகுதியராய் உலகத்துக்கு
ஆம்என்று சரண்புகுந்தார் தமைக்காக்கும் கருணையினான்
ஓம்என்று மறைபயில்வார் பிரமபுரத் துறைகின்ற
காமன்தன் உடல்எரியக் கனல்சேர்ந்த கண்ணானே. 2

நன்னெஞ்சே உனைஇரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னம்செய்து இருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்
அன்னம்சேர் பிரமபுரத்து ஆர் அமுதை எப்போதும்
மன்னும்சீர் வாயதுவே பார்கண்ணே பரிந்திடவே. 3

சாநாள்இன்றிம்மனமே சங்கைதனைத் தவிர்ப்பிக்குங்
கோனாளுந் திருவடிக்கே கொழுமலர்தூவு எத்தனையும்
தேனாளும் பொழிற்பிரம புரத்துறையும் தீவணனை
நாநாளும் நல்நியமஞ் செய்தவன்சீர் நவின்றுஏத்தே. 4

கண்ணுதலான் வெண்ணீற்றான் கமழ்சடையான் விடையேறி
பெண்இதமாம் உருவத்தான் பிஞ்ஞகன்பேர் பலவுடையான்
விண்ணுதலாத் தோன்றியசீர்ப் பிரமபுரம் தொழவிரும்பி
எண்ணு தலாம் செல்வத்தை இயல்பாக அறிந்தோமே. 5

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கேயென்று அருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையும்
சங்கேயொத்து ஒளிர்மேனிச் சங்கரன்தன் தன்மைகளே. 6

சிலையதுவெஞ் சிலையாகத் திரிபுரம்மூன்று எரிசெய்த
இலைநுனைவேல் தடக்கையன் ஏந்திழையாள் ஒருகூறன்
அலைபுனல்சூழ் பிரமபுரத்து அருமணியை அடிபணிந்தால்
நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகில் பெறலாமே. 7

எரித்தமயிர் வாளரக்கன் வெற்பெடுக்கத் தோளொடுதாள்
நெரித்தருளும் சிவமூர்த்தி நீறணிந்த மேனியினான்
உரித்தவரித் தோலுடையான் உறைபிரம புரம்தன்னைத்
தரித்தமனம் எப்போதும் பெறுவார்தாம் தக்காரே. 8

கரியானும் நான்முகனும் காணாமைக் கனலுருவாய்
அரியானாம் பரமேட்டி அரவம்சேர் அகலத்தான்
தெரியாதான் இருந்துறையும் திகழ்பிரம புரம்சேர
உரியார்தாம் ஏழுலகும் உடன் ஆள உரியாரே. 9

உடையிலார் சீவரத்தார் தன்பெருமை உணர்வரியான்
முடையிலார் வெண்தலைக்கை மூர்த்தியாம் திருவுருவன்
பெடையிலார் வண்டாடும் பொழில்பிரம புரத்துறையும்
சடையில்ஆர் வெண்பிறையான் தாள்பணிவார் தக்காரே. 10

தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையும் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்தும் இவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலஅடந்தார் புண்ணியரே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 49. இராகு, கேது கிரகங்களினால் துன்பம் வாராமலிருக்க உதவும் பதிகம்

ஆந்திர மாநிலத்தில் உள்ள சிவத்தலம் " காளத்தி " சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியுள்ள இத்தலத்துப் பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதிகப் பாராயணத்தால் இராகு, கேது ஆகிய இரண்டு கிரகங்களும் நன்மையையே செய்யும். 48 நாள்கள் படித்தால், இந்தக் கிரகதோசம் உறுதியாக விலகிவிடும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருக்காளத்தி

செண்டா டும்விடையாய் சிவனேஎன் செழுஞ்சுடரே
வண்டா ரும்குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே
கண்டா காதலிக்கும் கணநாதன்எம் காளத்தியாய்
அண்டா உன்னை அல்லால் அறிந்துஏத்த மாட்டேனே. 1

இமையோர் நாயகனே இறைவாஎன் இடர்த்துணையே
கமையார் கருணையினாய் கருமாமுகில் போல்மிடற்றாய்
உமையோர் கூறுடையாய் உருவேதிருக் காளத்தியுள்
அமைவே உன்னையல்லால் அறிந்துஏத்த மாட்டேனே. 2

படையார் வெண்மழுவா பகலோன்பல் உகுத்தவனே
விடையார் வேதியனே விளங்கும்குழைக் காதுடையாய்
கடையார் மாளிகைசூழ் கணநாதன்எம் காளத்தியாய்
உடையாய் உன்னையல்லால் உகந்துஏத்த மாட்டேனே 3

மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேஉன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்கும்திருக் காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்துஏத்த மாட்டேனே. 4

செஞ்சேல் அன்னகண்ணார் திறத்தேகிடந்து உற்றலறி
நஞ்சேன் நான் அடியேன் நலம்ஒன்றறி யாமையினால்
துஞ்சேன் நான்ஒருகால் தொழுதேன்திருக் காளத்தியாய்
அஞ்சாது உன்னையல்லால் அறிந்துஏத்த மாட்டேனே. 5

பொய்யவன் நாயடியேன் புகவேநெறி ஒன்றறியேன்
செய்யவ னாகிவந்துஇங்கு இடர்ஆனவை தீர்த்தவனே
மெய்யவனேதிருவே விளங்கும்திருக் காளத்திஎன்
ஐயநுன் தன்னைஅல்லால் அறிந்துஏத்த மாட்டேனே. 6

கடியேன் காதன்மையால் கழல்போதுஅறியாதஎன்னுள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்வார்சடை எம்குழகா
முடியால் வானவர்கள் முயங்கும்திருக் காளத்தியாய்
அடியேன் உன்னையல்லால் அறியேன்மற்றுஒருவரையே. 7

நீறார் மேனியனே நிமலாநினை அன்றிமற்றுக்
கூறேன் நாவதனால் கொழுந்தேஎன் குணக்கடலே
பாறார் வெண்தலையில் பலிகொண்டுழல் காளத்தியாய்
ஏறே உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே. 8

தளிர்போல் மெல்லடியாள் தனைஆகத்து அமர்ந்தருளி
எளிவாய் வந்தென்உள்ளம் புகுதவல்ல எம்பெருமான்
களியார் வண்டறையும் திருக்காளத்தி யுள்ளிருந்த
ஒளியே உன்னையல்லால் இனிஒன்றும் உணரேனே. 9

கார் ஊரும்பொழில்சூழ் கணநாதன்எம் காளத்தியுள்
ஆரா இன்னமுதை அணிநாவல்ஆரூ ரன்சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்வினை யாயினபோய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார்பிழைப்பு ஒன்றிலரே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 50. புதன் கிரகத்தினால் துன்பம் நேரிடாமலிருக்க உதவும் பதிகம்

காஞ்சிபுரத்தில் உள்ள ஐந்து பாடல் பெற்ற தலங்களில் கச்சிநெறிக் காரைக்காடு (திருக்காலிமேடு) ஒன்றாகும். காஞ்சிபுரம் இரயில்வே சாலையில் உள்ள தலைமை அஞ்சலத்திற்கு எதிரில் உள்ள பாதையில் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்ற தலம் புதன்கிரகம் இத்தலத்து இறைவரை வழிபட்டு, கிரகப்பதம் பெற்றுள்ளது.

இத்தலத்துப் பதிகத்தைப் பாராயணம் செய்தால் புதன்கிரகம் நன்மையையே செய்யும் சந்தேகமே வேண்டாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
கச்சிநெறிக் காரைக்காடு

வாரணவு முலைமங்கைபங்கினராய் அங்கையினில்
போரணவு மழுவொன்று அங்கு ஏந்திவெண் பொடிஅணிவர்
காரணவு மணிமாடம் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே. 1

கார்ஊரும் மணிமிடற்றார் கரிகாடர் உடைதலை கொண்டு
ஊர்ஊரன் பலிக்குஉழல்வார் உழைமானின் உரிஅதளர்
தேர்ஊரும் நெடுவீதிச் செழுங்கச்சி மாநகர்வாய்
நீர்ஊரும் மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே. 2

சுறணிந்தார் கொடியிடையைக் குளிர்சடைமேல்
இளமதியோடு
ஆறுஅணிந்தார் ஆடரவம் பூண்டுகந்தார் ஆன்வெள்ளை
ஏறணிந்தார் கொடியதன்மேல் என்பணிந்தார் வரைமார்பில்
நீறணிந்தார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 3

பிறைநவின்ற செஞ்சடைகள் பின்தாழப் பூதங்கள்
மறை நவின்ற பாடலோடு ஆடலராய் மழுவேந்திச்
சிறைநவின்ற வண்டினங்கள் தீங்கனிவாய்த் தேன்கதுவும்
நிறைநவின்ற கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 4

அன்றுஆலின் கீழிலிருந்துஅங்கு அறம்புரிந்த அருளாளர்
குன்றாத வெஞ்சிலையில் கோள் அரவ நாண்கொளுவி
ஒன்றாதார் புரம்மூன்றும் ஓங்குளியில் வெந்தவிய
நின்றாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 5

பன்மலர்கள் கொண்டடிக்கீழ் வானோர்கள் பணிந்திறைஞ்ச
நன்மையிலா வல்அவுணர் நகர்மூன்றும் ஒரு நொடியில்
வில்மலையில் நாண்கொளுவி வெங்கணையால்
எய்தழித்த
நின்மலனார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 6

புற்றிடைவாள் அரவினொடு புனைகொன்றைமதமத்தம்
எற்றுஒழியா அலைபுனலோடு இளமதியம் ஏந்துசடைப்
பெற்றுடையார் ஒருபாகம் பெண்ணுடையார் கண்அமரும்
நெற்றியினார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 7

ஏழ்கடல்சூழ் தென்னிலங்கைக் கோமானை
எழில்வரைவாய்த்
தாழ்விரலால் ஊன்றியதோர் தன்மையினார்
நன்மையினார்
ஆழ்கிடங்கும் சூழ்வயலும் மதில்புல்கி அழகமரும்
நீள்மறுகின் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 8

ஊண்தானும் ஒலிகடல்நஞ்சு உடைதலையில் பலிகொள்வர்
மாண்டார்தம் எலும்புஅணிவர் வரிஅரவோடு எழில்ஆமை
பூண்டாரும் ஓர்இருவர் அறியாமைப் பொங்குஎரியாய்
நீண்டாரும் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 9

குண்டாடிச் சமண்படுவார் கூறைதனை மெய்போர்த்து
மிண்டாடித் திரிதருவார் உரைப்பனகள் மெய்அல்ல
வண்டாரும் குழலாளை வரைஆகத்து ஒருபாகம்
கண்டாரும் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 10

கண்ணாரும் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டுறையும்
பெண்ணாரும் திருமேனிப் பெருமானது அடிவாழ்த்தித்
தண்ணாரும் பொழில்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
பண்ணாரும் தமிழ்வல்லார் பரலோகத்து இருப்பாரே 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 51. சுக்கிரன் (வெள்ளி) கிரகத்தினால் நன்மை உண்டாவதற்கு உதவும் பதிகம்

திருவாவடுதுறைக்கு அருகில் உள்ள தலம் கஞ்சனூர். திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடல் பெற்றுள்ளது.

சுக்கிரன் எனும் கிரகம் இத்தலத்து இறைவரை வழிபட்டு கிரகப்பதம் பெற்றுள்ளது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியுள்ள இத்தலத்துப் பதிகம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பதிகப்பாராயணத்தால் சுக்கிரன் (வெள்ளி) நன்மையை மட்டுமே செய்யும். 48 நாள்கள் பாராயணம் செய்தால் இக்கிரகத்தினால் ஏற்படும் தோசம் தப்பாது விலகும்.

திருநாவுக்கரசு சுவாமிகள்
கஞ்சனூர்

மூ இலை நல் சூலம் வலன் ஏந்தினானை
மூன்று சுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரை விடை ஒன்று ஏறுவானை
நால் வேதம் ஆறு அங்கம் ஆயினானை
ஆவினில் ஐந்து உகந்தானை அமரர் கோவை
அயன்திருமால் ஆனானை அனலோன் போற்றும்
காவலனைக், கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 1

தலை ஏந்து கையானை என்பு ஆர்த்தானைச்
சவம் தாங்கு தோளானைச் சாம்பலானைக்
குலை ஏறு நறுங்கொன்றை முடிமேல் வைத்துக்
கோள் நாகம் அசைத்தானை குலம் ஆம் கைலை
மலையானை மற்று ஒப்பார் இல்லாதானை
மதி கதிரும் வானவரும் மாலும் போற்றும்
கலையானைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 2

தொண்டர் குழாம் தொழுது ஏத்த அருள் செய்வானைச்
சுடர் மழுவாள் படையானைச் சுழி வான் கங்கைத்
தெண் திரைகள் பொருது இழி செஞ்சடையினானைச்
செக்கர் வான் ஒளியானைச் சேராது எண்ணிப்
பண்டு அமரர் கொண்டு உகந்த வேள்வி எல்லாம்
பாழ்படுத்துத் தலை அறுத்துப் பல் கண் கொண்ட
கண்டகனை கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 3

விண்ணவனை மேரு வில்லா உடையான் தன்னை
மெய் ஆகிப் பொய் ஆகி விதி ஆனானைப்
பெண்ணவனை ஆண் அவனைப், பித்தன் தன்னைப்
பிணம் இடுகாடு உடையானைப், பெருந் தக்கோனை
எண்ணவனை எண்திசையும் கீழும் மேலும்
இரு விசும்பும் இரு நிலமும் ஆகித் தோன்றும்
கண்ணவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 4

உருத்திரனை உமாபதியை உலகு ஆனானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன் தன்னைப்
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பினானைப்
பகல் இரவு ஆய் நீர் வெளி ஆய்ப் பரந்து நின்ற
நெருப்பு அதனை நித்திலத்தின் தொத்து ஒப்பானை
நீறு அணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 5

ஏடு ஏறு மலர்க்கொன்றை அரவு தும்மை
இளமதியம் எருக்கு வான் இழிந்த கங்கை
சேடு எறிந்த சடையானைத் தேவர் கோவைச்
செம் பொன் மால்வரையானைச் சேர்ந்தார் சிந்தைக்
கேடு இலியைக் கீழ்வேளூர் ஆளும் கோவைக்
கிறி பேசி மடவார் பெய் வளைகள் கொள்ளும்
காடவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 6

நாரணனும் நான்முகனும், அறியாதானை
நால்வேதத்து உருவானை நம்பி தன்னைப்
பாரிடங்கள் பணி செய்யப் பலி கொண்டு உண்ணும்
பால்வணனைத் தீவணனைப் பகல் ஆனானை
வார் பொதியும் முலையாள் ஓர் கூறன் தன்னை
மான் இடங்கை உடையானை மலிவு ஆர்கண்டம்
கார் பொதியும் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 7

வானவனை வலி வலமும் மறைக்காட்டானை
மதி சூடும் பெருமானை மறையோன் தன்னை
ஏனவனை இமவான் தன் பேதையோடும்
இனிது இருந்த பெருமானை ஏத்துவார்க்குத்
தேனவனை தித்திக்கும் பெருமான் தன்னைத்
தீது இலா மறையோனை தேவர் போற்றும்
கானவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 8

நெருப்பு உருவத் திருமேனி வெண்நீற்றானை
நினைப்பார் தம் நெஞ்சானை நிறைவு ஆனானைத்
தருக்கு அழிய முயலகன் மேல் தாள் வைத்தானைச்
சலந்தரனைத் தடிந்தோனைத் தக்கோர் சிந்தை
விருப்பவனை விதியானை வெண்நீற்றானை
விளங்கு ஒளிஆய் மெய் ஆகி மிக்கோர் போற்றும்
கருத்தவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 9

மடல் ஆழித் தாமரை ஆயிரத்தி ஒன்று
மலர்க்கண் இடந்து இடுதலுமே மலி வான்கோலச்
சுடர் ஆழி நெடுமாலுக்கு அருள் செய்தானைத்
தும்பி உரி போர்த்தானைத் தோழன் விட்ட
அடல் ஆழித் தேர் உடைய இலங்கைக் கோனை
அரு வரைக்கீழ் அடர்த்தானை அருள் ஆர் கருணைக்
கடலானைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண் ஆரக் கண்டு உய்ந்தேனே ! 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# 52. ஒன்பது கிரகங்களும் நன்மையைச் செய்யும் பதிகம்

திருவாரூர் திருத்துறைப்பூண்டிச் சாலையில் உள்ளது கோளிலி (திருக்குவளை) எனும் சிவத்தலம். ஒன்பது கிரகங்களும் இத்தலத்து இறைவரை வழிபட்டுத் தங்கள் குற்றங்களைப் போக்கிக் கொண்டுள்ளன. இத்தலத்துப் பதிகத்தை நாம் பாராயணம் செய்தால், ஒன்பது கிரகங்களும் நமக்கு நன்மைகளையே செய்யும்.

உதாரணமாக நம் தந்தைக்கு வேண்டியவர்களிடம் நமக்கு அன்பும் மரியாதையும் உண்டாவது இயல்பே ஆகும். அதைப் போலவே ஒன்பது கிரகங்களும் வழிபட்டு நலம் பெற்ற தலத்துப் பதிகத்தை ஓதியும், அத்தலத்து இறைவரை வழிபட்டும் வந்தால், இந்த கிரகங்கள் நன்மையையே அளிக்கும். இத்தலத்திற்குத் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய பதிகம் கொடுக்கப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்த சுவாமிகள்
திருக்கோளிலி

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் அடல்நெஞ்சே அரன்நாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம் அருளிக்
கோளாய நீக்கும்அவன் கோளிலிஎம் பெருமானே. 1

ஆடுஅரவத்து அழகுஆமை அணிகேழல் கொம்புஆர்த்த
தோடுஅரவத்து ஒருகாதன் துணைமலர்நற் சேவடிக்கே
பாடுஅரவத்து இசைபயின்று பணிந்துஎழுவார் தம்மனத்தில்
கோடரவம் தீர்க்கும் அவன் கோளிலிஎம் பெருமானே. 2

நன்றுநகு நாள்மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்டு
ஒன்றிவழி பாடுசெயல் உற்றவன்தன் ஓங்குஉயிர்மேல்
கன்றிவரு காலன்உயிர் கண்டு அவனுக்கு அன்றளித்தான்
கொன்றைமலர் பொன்திகழும் கோளிலி எம்பெருமானே. 3

வந்தமணலால்இலிங்கம் மண்ணியின்கண் பாலாட்டும்
சிந்தைசெய்வோன் தன்கருமம் தேர்ந்துசிதைப் பான்வரும்அத்
தந்தைதனைச் சாடுதலும் சண்டீசன் என்றுஅருளிக்
கொந்தணவும் மலர்கொடுத்தான் கோளிலிஎம் பெருமானே. 4

வஞ்சமனத்து அஞ்சுஒடுக்கி வைகலும்நற் பூசனையால்
நஞ்சுஅமுது செய்தருளும் நம்பியெனவேநினையும்
பஞ்சவரில் பார்த்தனுக்குப் பாசுபதம் ஈந்துஉகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சுஅணவும் கோளிலிஎம் பெருமானே. 5

தாவியவன் உடனிருந்தும் காணாத தற்பரனை
ஆவிதனில் அஞ்சுஒடுக்கி அங்கணன் என்று ஆதரிக்கும்
நாஇயல்சீர் நமிநந்தி அடிகளுக்கு நல்கும்அவன்
கோஇயலும் பூவெழுகோல் கோளிலியெம் பெருமானே. 6

கல்நவிலும் மால்வரையான் கார்திகழும் மாமிடற்றான்
சொல்நவிலும் மாறையான் தோத்திரம்செய் வாயின்உளான்
மின்நவிலும் செஞ்சடையான் வெண்பொடியான் அங்கையினில்
கொல்நவிலும் சூலத்தான் கோளிலியெம் பெருமானே. 7

அந்தரத்தில் தேர்ஊரும் அரக்கன்மலை அன்றுஎடுப்பச்
சுந்தரத்தன் திருவிரலால் ஊன்றஅவன் உடல்நெரிந்து
மந்திரத்த மறைபாட வாள்அவனுக்கு ஈந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக் கோளிலிஎம் பெருமானே. 8

நாணமுடை வேதியனும் நாரணனும் நண்ணவொணாத்
தாணுஎனை ஆளுடையான் தன்னடியார்க்கு அன்புடைமை
பாணன்இசை பத்திமையால் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணல்இளம் பிறைச்சென்னிக் கோளிலியெம் பெருமானே. 9

தடுக்குஅமரும் சமணரொடு தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரும் மொழிகேளாது ஈசனையே ஏத்துமின்கள்
நடுக்கமிலா அமருலகம் நண்ணலும்ஆம் அண்ணல்கழல்
கொடுக்ககிலா வரங்கொடுக்கும் கோளிலிஎம் பெருமானே. 10

நம்பனைநல் லடியார்கள் நாம் உடைமாடு என்றிருக்கும்
கொம்பனையாள் பாகன்எழில் கோளிலிஎம் பெருமானை
வம்புஅமரும் தண்காழிச் சம்பந்தன் வண்தமிழ்கொண்டு
இன்புஅமர வல்லார்கள் எய்துவார்கள் ஈசனையே. 11

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 53. முத்திப் பேற்றுக்கு பாட வேண்டிய பதிகம்

எல்லாப் பதிகங்களும் முத்தியை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. இருப்பினும் திருநாவுக்கரசு சுவாமிகள் பூம்புகலூரில் இறுதியாக அருளிய திருத்தாண்டகம் இங்கே அளிக்கப்பட்டுள்ளது. அன்றாடம் பாராயணம் செய்து நலம் பெறலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருப்புகலூர்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணினன் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்குபோது உணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 1

அங்கமே பூண்டாய் அனலாடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனேறு ஊர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த்து ஆண்டாய்
சங்கையொன்று இன்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பைஅரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணார் இன்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகம் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேல் தரவுஅறுத்தாய்
அவர்வேண்டும் காரியம் இங்கு ஆவதில்லை
யொய்யுரையாது உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 3

தெருளாதார் மூவெயிலும் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையால் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டம் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க்கு என்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்தும் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 4

நீரேறு செஞ்சடைமேல் நிலா வெண்திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையில் பலிகொள் வானே
பண்டு அனங்கன் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போர்ஏறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 5

விரிசடையாய் வேதியனே வேத கீதா
        விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச்சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
        திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவஇனியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
        வலஞ்சுழியாய் மாமறைக்காட்டு எந்தாயென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
        பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 6

தேவார்ந்த தேவனைத் தேவர் எல்லாம்
        திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
        நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
        கழுக்குன்றத்து உச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
        பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 7

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
        நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
        மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
        கொண்டு அடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
        பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 8

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துலைதந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்அணையுந் தண்மதியும் பாம்பும் நீரும்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
அக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 9

ஒருவனையும் அல்லாது உணராது உள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத்து உள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவுஅறுத்தாய்க்கு இல்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீது ஓடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 10

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

# 54. உலக நன்மைக்காக பாட வேண்டிய பதிகம்

பிறர் வாழவேண்டும், உலகம் நலமாக இருக்க வேண்டும் என்று நாம் நினைத்தால், நாம் நலமாக வாழ வேண்டும் என்று இறைவர் எண்ணுவார். இதுதான் உலக நியதி. நாம் வாழவேண்டும் என்று வேண்டுவதைவிட, உலகம் நலம் பெற வேண்டும் என்று இறைவரிடம் விண்ணப்பம் செய்வது மிக உயர்ந்த சான்றோர் (ஞானிகள்) செயலாகும். உலகம் வாழ்ந்தால் நாமும் வாழ்வோம்.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறிதாம் தழைத்து ஓங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே.

– பெரியபுராணம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே!

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்!

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

## * வாழ்க்கைத் தத்துவம் *

நல்லாவின் பால்முழுதும் கன்றுக்கில்லை
நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை
நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக்கில்லை
நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக்கில்லை
பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக்கில்லை
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்
என்வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும்! வேண்டும்!

நன்றி: டாக்டர் வ.சுப. மாணிக்கம்



திருச்சிற்றம்பலம்

டால்ஃபின் பள்ளி
அச்சிட்டோர் : ஸ்ரீ கிளாஸிக் பிரிண்டர்ஸ் மதுரை போன் 2323819

உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :

# தேவகோட்டை அரு.லெ.வீடு டால்ஃபின் ராமனாதனின்



ஐயா SV.RM.AR. ராமனாதன் செட்டியார்



அப்பத்தா
RM. விசாலாட்சி ஆச்சி



ஆயா வீட்டு ஐயா லெ. வீடு வீரப்ப சுவாமிகள்



தந்தை
AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார்



பெரிய தாயார்
AR. சௌந்தரம் ஆச்சி

இவர்களின் நல்லாசிகளுடன் இந்த இலவச பக்தி மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இவண்



AR. ராமனாதன்


ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.

நல்லாசியுடன்
AR. மீனாட்சி.
23.4.2010

மதுரை
23.4.2010



AR. மீனாட்சி ஆச்சி
AR. ராமனாதனின் தாயார்




தேவகோட்டை

அரு. ராமநாதனின் தந்தை

தெய்வத்திரு. அரு. ராம. அரு. அருணாச்சலம் செட்டியார்

மற்றும் பெரிய தாயார் அரு. சௌந்தரம் ஆச்சி

அவர்களின் நல்லாசிகளுடன் ...

# மதுரை டால்ஃபின் பள்ளி

## கல்விப் பணியில்... 26ம் ஆண்டு





AR. ராமநாதன்

[illegible]

நல்லாசியுடன்
AR. [illegible]
23.4.2010

மதுரை
23.4.2010



AR. மீனாட்சி ஆச்சி
AR. ராமநாதனின் தாயார்